இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 182 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – தை 29 – திங்கள்கிழமை 12 பிப்ரவரி 2024 – சென்னை 10 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 182 : Thiruvalluvar Year - 2055 - Thai 29 - Monday 12 February 2024 - Chennai 10 Pages ₹ 5.00

## நாடாளுமன்றத் தேர்தல் - 2024

# “உரிமைகளை மீட்க ஸ்டாலினின் குரல்” - பாசிசம் வீழட்டும்! இந்தியா வெல்லட்டும்!

## தலைமைக் கழக அறிவிப்பு



2021 சட்டமன்றத் தேர்தலுக்கு முன்பாக அ.தி.மு.க. அரசின் பத்தாண்டு கால முறையற்ற நிர்வாகம், மக்களின் குறைகள், துன்பங்களை நேரடியாகக் கேட்டறிந்திட கழக முன்னணியினர் ‘விடியலை நோக்கி ஸ்டாலினின் குரல்’ என்ற பரப்புரையில் பங்கேற்று அ.தி.மு.க.வை மக்கள் நிராகரிப்பதற்கான அடித்தளமிட்டனர்.

வரவிருக்கும் நாடாளுமன்றத் தேர்தல் 2024- இல் கடந்த பத்தாண்டு காலத்தில் ஒன்றிய பா.ஜ.க. அரசு, தமிழ்நாட்டிற்கு இழைத்த அநீதிகளையும், ஒன்றிய அரசிடம் மாநிலத்தின் உரிமைகளை அடகு வைத்து தற்பொழுது நாடகமாடும் அடிமை அ.தி.மு.க.வின் துரோகங்களையும் மக்களிடம் கொண்டு சேர்க்கும் வகையில், முதற்கட்டமாக, கழக முன்னணியினர் **“உரிமைகளை மீட்க ஸ்டாலினின் குரல்”** என்ற தலைப்பில் நாடாளுமன்றத் தொகுதி வாரியான கூட்டங்களில் பங்கேற்று சிறப்புரை யாற்றவுள்ளனர்.

தமிழ்நாட்டின் உரிமைகளை மீட்டெடுக்க மாண்புமிகு கழகத் தலைவர் அவர்களின் குரலாக **பிப்ரவரி 16, 17 மற்றும் 18 ஆகிய நாட்களில்** கீழ்கண்டவாறு நடைபெறும் பரப்புரைக் கூட்டங்களை பொறுப்பு அமைச்சர்களுடன் இணைந்து, நாடாளுமன்றத் தொகுதிக்குட்பட்ட மாவட்டக் கழகச் செயலாளர்கள் சம்பந்தப்பட்ட சட்டமன்றத் தொகுதிகளைச் சார்ந்த மாவட்ட நிர்வாகிகள், சார்பு அணியினர், பகுதி - ஒன்றிய - நகர - பேரூர் கழகச் செயலாளர்கள், கிளைச்செயலாளர்கள், பூத் கமிட்டியினர் ஆகியோர் பங்கேற்கும் பிரம்மாண்ட கூட்டங்களாக நடத்திட வேண்டும்.

**நாள் : 16.02.2024 (வெள்ளிக்கிழமை)**

| நாடாளுமன்றத் தொகுதி | | சிறப்புரை |
|---|---|---|
| சிவகங்கை | - | மாண்புமிகு **இ.பெரியசாமி** |
| திருநெல்வேலி | - | திருமதி **கனிமொழி கருணாநிதி**, எம்.பி., |
| விழுப்புரம் | - | திரு. **ஆர்.எஸ்.பாரதி** |
| தூத்துக்குடி | - | திரு. பொன். முத்துராமலிங்கம் |
| கடலூர் | - | மாண்புமிகு எஸ்.எஸ்.சிவசங்கர் |
| திருபெரும்புதூர் | - | மாண்புமிகு மா.சுப்பிரமணியன் |
| ஈரோடு | - | மாண்புமிகு அன்பில் மகேஸ் பொய்யாமொழி |
| நாமக்கல் | - | திருமதி தமிழச்சி தங்கபாண்டியன், எம்.பி., |
| கன்னியாகுமரி | - | திரு. திண்டுக்கல் ஐ.லியோனி |
| மயிலாடுதுறை | - | பேராசிரியர் சபாபதிமோகன் |
| திருவண்ணாமலை | - | மாண்புமிகு முனைவர் கோவி.செழியன் |

**நாள் : 17.02.2024 (சனிக்கிழமை)**

| | | |
|---|---|---|
| கிருஷ்ணகிரி | - | மாண்புமிகு பொதுச்செயலாளர் **துரைமுருகன்** |
| திருச்சி | - | கழகப் பொருளாளர் **டி.ஆர்.பாலு**, எம்.பி., |
| திருப்பூர் | - | மாண்புமிகு **கே.என்.நேரு** |
| அரக்கோணம் | - | முனைவர் **க.பொன்முடி** |
| மதுரை | - | திரு. **ஆ.இராசா**, எம்.பி., |
| விருதுநகர் | - | திருமதி **கனிமொழி கருணாநிதி**, எம்.பி., |
| இராமநாதபுரம் | - | மாண்புமிகு **உதயநிதி ஸ்டாலின்** |
| வேலூர் | - | மாண்புமிகு எ.வ.வேலு |
| கள்ளக்குறிச்சி | - | மாண்புமிகு மா.சுப்பிரமணியன் |
| கோவை | - | மாண்புமிகு அன்பில் மகேஸ் பொய்யாமொழி |
| திண்டுக்கல் | - | திரு.பொன்முத்துராமலிங்கம் |
| சிதம்பரம் | - | மாண்புமிகு முனைவர் கோவி செழியன் |

**நாள் : 18.02.2024 (ஞாயிற்றுக்கிழமை)**

| | | |
|---|---|---|
| திருவள்ளூர் | - | மாண்புமிகு பொதுச்செயலாளர் **துரைமுருகன்** |
| தஞ்சாவூர் | - | கழகப் பொருளாளர் **டி.ஆர்.பாலு**, எம்.பி., |
| பெரம்பலூர் | - | முனைவர் **க.பொன்முடி** |
| கரூர் | - | திரு. **ஆ.இராசா**, எம்.பி., |
| புதுச்சேரி | - | திரு. **ஆர்.எஸ்.பாரதி** |
| பொள்ளாச்சி | - | திரு. திருச்சி சிவா, எம்.பி., |
| காஞ்சிபுரம் | - | மாண்புமிகு எ.வ.வேலு |
| தருமபுரி | - | திரு. எஸ்.ஜெகத்ரட்சகன், எம்.பி., |
| நாகப்பட்டினம் | - | மாண்புமிகு எஸ்.எஸ். சிவசங்கர் |
| தேனி | - | திரு. பொன்.முத்துராமலிங்கம் |
| நீலகிரி | - | திரு. திண்டுக்கல் ஐ.லியோனி |
| தென்காசி | - | முனைவர் சபாபதிமோகன் |
| சேலம் | - | திருமதி தமிழச்சி தங்கபாண்டியன், எம்.பி., |
| ஆரணி | - | மாண்புமிகு முனைவர் கோவி. செழியன் |

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள் : 11.2.2024

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.

## தமிழ்நாட்டு மீனவர்களைப் பாதுகாக்கத் தவறிய ஒன்றிய மோடி அரசைக் கண்டித்து

# இராமேசுவரத்தில் தி.மு.க. மீனவரணி சார்பில் மாபெரும் ஆர்ப்பாட்டம்!

### ஆர்.எஸ்.பாரதி தலைமையில் ஜோசப் ஸ்டாலின் - காதர்பாட்ஷா முத்துராமலிங்கம் முன்னிலையில் கண்டன முழக்கம்!

இராமேசுவரம், பிப். 12 –

தமிழ்நாடு மீனவர்களை பாதுகாக்க தவறிய மோடி அரசை கண்டித்து இராமேசுவரத்தில் தி.மு.க. அமைப்பு செயலாளர் ஆர்.எஸ்.பாரதி தலைமையிலும் இராமநாதபுரம் மாவட்ட கழகச் செயலாளர் காதர் பாட்ஷா முத்துராமலிங்கம் எம்.எல்.ஏ, முன்னிலையிலும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில், 6 மாவட்டங்களை சேர்ந்த ஆயிரக்கணக்கான மீனவர்கள் கலந்துகொண்டு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

கடந்த பத்தாண்டுகளில் மட்டும் இலங்கை கடற்படையினரால் 3,076 தமிழ்நாடு மீனவர்கள் கைது செயப்பட்டுள்ளனர் 534 படகுகள் சிறைபிடித்து இலங்கை கடற்படையினரால் அட்டூழியங்கள் செய்து வருவது குறித்து தமிழ்நாடு முதலமைச்சர் பல்வேறு சந்தர்ப்பங்களில் பிரதமர் உள்ளிட்ட ஒன்றிய அமைச்சர்களிடம் வலியுறுத்தியுள்ளதோடு, பிரதமருக்கு 9 கடிதங்களும், ஒன்றிய வெளியுறவுத்துறை அமைச்சர் அவர்களுக்கு 35 கடிதங்களும் எழுதியுள்ளார். ஆனாலும் தமிழ்நாட்டு மீனவர்கள் பிரச்சனையை ஒன்றிய அரசு கண்டு கொள்ளவில்லை. இலங்கை அரசின் கைது நடவடிக்கைகள் தொடர்ந்து கொண்டே இருக்கின்றன.

தமிழக மீனவர்கள் மீதான இலங்கை கடற்படையின் அட்டூழியத்தை வேடிக்கை பார்க்கும் ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து, ஒன்றிய அரசின் கவனத்தை ஈர்க்கும் வகையில் இராமேசுவரம் பேருந்து நிலையம் முன்பு கழக மீனவர் அணி செயலாளர் ஜோசப் ஸ்டாலின் ஒருங்கிணைப்பில், நடைபெற்றது. இந்த ஆர்ப்பாட்டத்தில் பரமக்குடி சட்டப்பேரவை உறுப்பினர் செ.முருகேசன், திருவெற்றியூர் சட்டமன்ற உறுப்பினர் கே.பி. சங்கர், முன்னாள் அமைச்சர்கள் வ.சத்தியமூர்த்தி, டாக்டர் எஸ். சுந்தராஜன், மாநில இளைஞரணி துணைச் செயலாளர் ஏ. என்.இன்பா ரகு, முன்னாள் மாவட்ட கழக செயலாளர் சுப.த. திவாகரன், தூத்துக்குடி லெனின், நாகப்பட்டினம், கௌதமன், தூத்துக்குடி தெற்கு மாவட்ட துணை அமைப்பாளர், நலவாரிய உறுப்பினர் ஜெபமாலை,நகர்மன்ற தலைவர்கள் ராமேஸ்வரம் நாசர் கான், பரமக்குடி சேது கருணாநிதி, கீழக்கரை ஆபிதா, நகர் மன்ற துணைத் தலைவர்கள் பிரவீன் தங்கம், பிச்சை, வழக்கறிஞர் ஹமீது சுல்தான், ஒன்றிய செயலாளர்கள் வி வாசுதேவன், சண்முகநாதன், மனோகரன், மற்றும் சாயல்குடி ஜெயபால், குலாம் மொய்தீன், மாயகிருஷ்ணன், சண்முகம், கோவிந்தராஜ்,வழக்கறிஞர் கதிரவன் குணசேகரன், கே.ஜே.பிரவீன், முத்துக்குமார் மற்றும் ராஜாராம் கண்ணன் ராம சுப்பிரமணியன், மீனவர் அணி துணை அமைப்பாளர் ரவிச்சந்திர ராமவன்னி, மாநில இலக்கிய அணி துணை அமைப்பாளர் பெருநாழி போஸ், செயற்குழு உறுப்பினர் மிசா அகமது தம்பி, முன்னாள் செயற்குழு உறுப்பினர் குணசேகரன், மற்றும் மாநில மாவட்ட நகர ஒன்றிய கிளைக் கழக அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் உட்பட, தூத்துக்குடி, கன்னியாகுமரி, புதுக்கோட்டை, நாகப்பட்டினம் ஆகிய மாவட்டங்களை சார்ந்த மீனவர் சங்க தலைவர்கள் மற்றும் உறுப்பினர்கள் மீனவ மகளிர் அமைப்புகளை சேர்ந்தவர்கள் என ஆயிரக்கணக்கானோர் கலந்து கொண்டு ஒன்றிய அரசுக்கு எதிராக கோஷமிட்டு போராட்டத்தில் ஈடுபட்டனர். அதனைத் தொடர்ந்து இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டு சிறையில் உள்ள 64 மீனவ குடும்பங்களுக்கு இராமநாதபுரம் மாவட்ட கழகச் செயலாளர் காதர் பாட்ஷா முத்துராமலிங்கம், மாவட்ட கழகத்தின் சார்பாக நிதியுதவி வழங்கினார்.

## ஆளுநர் உரையுடன்

# தமிழ்நாடு சட்டப்பேரவைக் கூட்டம் இன்று தொடங்குகிறது!

### 19ஆம் தேதி நிதிநிலை அறிக்கை தாக்கல்!

சென்னை, பிப். 12–

தமிழ்நாடு சட்டப்பேரவையின் பட்ஜெட் கூட்டத்தொடர் இன்று காலை 10 மணிக்கு தொடங்குகிறது. ஆண்டின் முதல் கூட்டம் என்பதால் ஆளுநர் உரையுடன் இக்கூட்டத் தொடர் தொடங்க உள்ளது.

19ஆம் தேதி நிதி நிலை அறிக்கையும், 20ஆம் தேதி வேளாண் நிதி நிலை அறிக்கையும் தாக்கல் செய்யப்படவிருக்கிறது.

இந்திய அரசியலமைப்பு சட்டத்தின் படி, ஒரு மாநிலத்தின் நிதியாண்டிற்கான முதல் கூட்டத்தொடர் என்பது அம்மாநில ஆளுநர் உரையுடன் தொடங்குவது மரபு. அந்தவகையில் ஆளுநர் ஆர்.என்.ரவி பேரவையில் இன்று (12.02.2024) காலை 10 மணியளவில் உரை நிகழ்த்துகிறார். அவரது உரையின் தமிழாக்கத்தை சட்டப்பேரவைத் தலைவர் மு.அப்பாவு வாசிக்கிறார்.

அதன்பின் அலுவல் ஆய்வுக் குழு கூடி எத்தனை நாட்களுக்கு அவையை நடத்தலாம் என தீர்மானிக்கிறது.

**பிப். 19ஆம் தேதி நிதிநிலை அறிக்கை தாக்கல்!**

இதனையடுத்து ஆளுநர் உரை மீதான நன்றி தெரிவிக்கும் தீர்மானம் முன்மொழியப்பட்டு அதன் மீதான விவாதம் நடத்த திட்டமிடப்பட்டுள்ளதாக தெரிகிறது.

வரும் 19ஆம் தேதி 2024-25ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையை நிதியமைச்சர் தங்கம் தென்னரசு தாக்கல் செய்ய உள்ளார்.

20ஆம் தேதி வேளாண் பட்ஜெட்டை வேளாண் துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர் செல்வம் தாக்கல் செய்கிறார்.

மேலும், 20ஆம் தேதி முன் பண மானிய கோரிக்கையும், 21ஆம் தேதி முன் பண செலவின கோரிக்கையும் தாக்கல் செய்யப்பட உள்ளன.

# ஆர்.எஸ்.எஸ். - பா.ஜ.க.வினர் சமூகத்தில் வெறுப்புணர்வைப் பரப்புகின்றனர்!

### ராகுல் காந்தி குற்றச்சாட்டு!

*ராய்பபூர், பிப். 12 -*

*நாடாளுமன்ற தேர்தல் நெருங்கி வரும் நிலையில், இந்திய ஒற்றுமை நியாய யாத்திரையை காங்கிரஸ் எம்.பி. ராகுல் காந்தி மேற்கொண்டுள்ளார். மணிப்பூரில் கடந்த மாதம் ராகுல் காந்தியின் இந்த யாத்திரை தொடங்கியது. அசாம், மேகாலயா, மேற்குவங்கம், பீகார், ஜார்கண்ட், ஒடிசா மாநிலத்தை கடந்து தற்போது சத்தீஸ்கரில் ராகுல் காந்தி பாத யாத்திரை மேற்கொண்டுள்ளார்.*

*இந்நிலையில் ராஷ்டிரிய ஸ்வயம்சேவக் சங்கம் (ஆர். எஸ்.எஸ்.) மற்றும் பாரதிய ஜனதா கட்சியை (பா.ஜ.க). சேர்ந்தவர்கள் சமூகத்தில் வெறுப்பை பரப்புவதாக ராகுல் காந்தி குற்றம் சாட்டியுள்ளார். இரண்டு நாள் இடைவெளிக்குப் பிறகு, சத்தீஸ்கர் மாநிலம் ராய்கரில் இருந்து ராகுல் காந்தி மீண்டும் இந்திய ஒற்றுமை நியாய யாத்திரையைத் தொடங்கினார்.*

*இதனைத்தொடர்ந்து நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் பேசிய அவர், “மதங்கள், மொழிகளை பயன்படுத்தி ஆர்.எஸ்.எஸ். - பா.ஜ.க. வினர் மாநிலங்களை ஒன்றுக்கொன்று சண்டையிட செய்கிறார்கள். வெறுப்பால் வெறுப்பை விரட்ட முடியாது, அன்பால் மட்டுமே முடியும்.*

*இன்றைய காலகட்டத்தில் நாடு முழுவதும் வெறுப்புணர்வு பரவி வருகிறது. நீங்கள் தமிழ், பெங்காலி, உருது பேசுகிறீர்கள் அதனால்தான் உங்களை எங்களுக்குப் பிடிக்கவில்லை. நீங்கள் காஷ்மீர் மாநிலத்தைச் சேர்ந்தவர்கள், அதனால் எங்களுக்குப் பிடிக்கவில்லை என்று கூறுகிறார்கள். இது நாட்டை பல வீனப்படுத்துகிறது. பா.ஜ.க. மற்றும் ஆர்.எஸ்.எஸ்.காரர்கள் வெறுப்புணர்வை பரப்புகின்றனர். வரவிருக்கும் தலைமுறைக்கு அன்பு நிறைந்த தேசத்தை கட்டியெழுப்புவதே இந்த யாத்திரையின் நோக்கம்” என்று ராகுல் காந்தி கூறினார்.*

## டெல்லியை நோக்கி பேரணி: ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து

# விவசாயிகள் போராட்டத்தை முடக்க சதி!

### அரியானாவில் இணைய சேவை துண்டிப்பு - 144 தடை உத்தரவு!

சண்டிகர், பிப். 12–

ஒன்றிய அரசுக்கு எதிரான விவசாயிகளின் பேரணியை முடக்கும் நோக்கத்துடன் அரியானாவில் இணைய சேவை துண்டிக்கப்பட்டுள்ள நிலையில், பஞ்சகுலா நகரில் 144 தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

பயிர்களுக்கு குறைந்தபட்ச ஆதரவு விலை நிர்ணயிக்கப்படும், விவசாயிகளின் வருமானத்தை இரட்டிப்பாக்க நடவடிக்கை எடுக்கப்படும் என வாக்குறுதி அளித்த ஒன்றிய பாஜக அரசு, அதற்காக எந்த நடவடிக்கையையும் எடுக்கவில்லை. இதனால் கொதிப்படைந்துள்ள 200க்கும் மேற்பட்ட விவசாய சங்கங்கள், ஒன்றிய அரசைக் கண்டித்து, நாளை (13 ஆம் தேதி) டெல்லியை நோக்கி பேரணி நடத்தப்படும் என அறிவித்துள்ளன.

ஹரியானா வழியாக டெல்லியை சென்றடைய விவசாயிகள் திட்டமிட்டுள்ளனர். விவசாயிகளின் பேரணியை முடக்குவதற்காக ஹரியானாவில் செல்போன்களுக்கான இணையசேவை முடக்கப்பட்டுள்ளது.

மேலும், ஒரே நேரத்தில் பலருக்கு குறுஞ்செய்தி அனுப்பும் வசதியும் தடை செய்யப்பட்டுள்ளது. பஞ்ச்குலா நகரில் 144 தடை உத்தரவு பிறப்பித் துள்ள ஹரியானா அரசு, பஞ்சாப் மாநில எல்லையில் மிகப்பெரிய அளவிலான கான்கிரீட் தடுப்புகளை அமைத்து வருகிறது. தடுப்புகளை மீறி நுழையாத வண்ணம் சாலைகளில் ஆங்காங்கே ஆணிகள் அடிக்கப்பட்டுள்ளன. மேலும், விவசாயிகள் பேரணியை தடுப்பதற்காக அரியானா – பஞ்சாப் எல்லையில் பல அடுக்கு பாதுகாப்பிற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.



இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

திங்கள்கிழமை 12-02-2024

# போராட்டம் நடத்தும் முதலமைச்சர்கள் -1

**“கேரளாவில் இருந்து மக்கள் பணியாற்ற வேண்டிய உங்களை டெல்லிக்கு வந்து போராட்டம் நடத்த வைத்த மிக மோசமான அரசியல் சூழலை நினைத்து வருத்தப்படுகிறேன். நேற்றைய தினம் கர்நாடக மாநில முதலமைச்சர் மாண்புமிகு சித்தராமையா அவர்களும் டெல்லிக்கு வருகை தந்து போராட்டம் நடத்தி இருக்கிறார். நிதி பகிர்வில் தங்கள் மாநிலத்துக்கு பாரபட்சம் காட்டப் படுவதற்கு எதிராக அனைத்து மாநிலங்களும் போராட்டம் நடத்தும் சூழலுக்கு தள்ளப்பட்டுள்ளது. இதற்குக் காரணமான ஒன்றிய பா.ஜ.க. அரசு மக்கள் மன்றத்தில் பதில் சொல்ல வேண்டிய நாள் வெகுதூரத்தில் இல்லை” - என்று எச்சரிக்கை செய்துள்ளார் தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்கள்.**

மாநிலங்களின் உரிமையைப் பறித்து - மாநிலங்களின் நிதி வளத்தை ஒன்றிய பா.ஜ.க. அரசு சுரண்டி வருவதைக் கண்டித்து டெல்லி சென்று போராடி இருக்கிறார்கள் கர்நாடக முதலமைச்சர் சித்தராமையாவும், கேரள முதலமைச்சர் பினராயி விஜயன் அவர்களும். ஸ்பெயின் பயணத்தை முடித்து விட்டு வருகை தந்ததால் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் நேரில் டெல்லி செல்ல முடியாத சூழல் இருந்தது. ஆனாலும் தனது வீடியோ பதிவு செய்யப்பட்ட உரையை அனுப்பி இருந்தார் முதலமைச்சர் அவர்கள். கேரளா அமைச்சரவை நடத்திய போராட்டத்தில் கலந்து கொண்டுள்ளார்கள் டெல்லி முதலமைச்சர் அரவிந்த் கெஜ்ரிவால் அவர்களும் பஞ்சாப் முதலமைச்சர் பகவந்த் மான் அவர்களும். இப்படி மாநிலங்களை ஆளும் முதலமைச்சர்கள் ஒட்டுமொத்தமாக போராட்டங்கள் நடத்தியது இல்லை.

**உரிய நிதிப்பங்கீடு அளிக்காமல் தமிழ்நாட்டை வஞ்சிக்கும் ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து நாடாளுமன்ற வளாகத்தில் காந்தி சிலை முன்பு தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர்கள் கருப்புச் சட்டை அணிந்து போராட்டம் நடத்தி இருக்கிறார்கள்.**

மாநிலங்களை ஆளும் முதலமைச்சர்களை போராட்டம் நடத்தும் நிலைமைக்குத் தள்ளி இருக்கிறது ஒன்றிய பா.ஜ.க. அரசு. ஏழை எளிய நடுத்த மக்களை எல்லா வகையிலும் வஞ்சித்து வரும் பா.ஜ.க. அரசு, அந்த மக்களுக்கு நேரடி உதவிகள் செய்து வரும் மாநில அரசுகளையும் சுரண்டி வருகிறது.

**மாநிலங்களிடம் அதிகப்படியான நிதி வளத்தை சுரண்டிச் செல்லும் ஒன்றிய பா.ஜ.க. அரசு, மாநிலங்களுக்கான நிதிப் பகிர்வை முறையாகச் செய்கிறதா என்றால் இல்லை.**

**மாநிலங்களிடம் அதிகப்படியான நிதி வளத்தை சுரண்டிச் செல்லும் ஒன்றிய பா.ஜ.க. அரசு, மாநிலங்கள் கேட்கும் போதாவது நிதி தருகிறதா என்றால் இல்லை.**

**மாநிலங்களிடம் அதிகப்படியான நிதி வளத்தை சுரண்டிச் செல்லும் ஒன்றிய பா.ஜ.க. அரசு,மாநிலங்களில் புதிய - பெரிய திட்டங்களைத் தொடங்குகிறதா என்றால் இல்லை.**

**மாநிலங்களிடம் அதிகப்படியான நிதி வளத்தை சுரண்டிச் செல்லும் ஒன்றிய பா.ஜ.க. அரசு, ஒன்றிரண்டு தொடங்கும் திட்டத்துக்கு நிதி ஒதுக்கீட்டை தொடர்ந்து வழங்குகிறதா என்றால் இல்லை.**

**மாநிலங்களிடம் அதிகப்படியான நிதி வளத்தை சுரண்டிச் செல்லும் ஒன்றிய பா.ஜ.க. அரசு, இயற்கை பேரிடர் நேரங்களிலாவது உதவி செய்கிறதா என்றால் இல்லை.**

அப்படியானால் என்ன செய்கிறார்கள், மாநிலங்களிடம் அதிகப்படியான நிதி வளத்தை சுரண்டிச் செல்லும் ஒன்றிய பா.ஜ.க. அரசு, அதை வைத்துத் தான் தனது அரசை நடத்துகிறது. பா.ஜ.க.வுக்கு செல்வாக்கு இருக்கும் மாநிலங்களுக்கு அந்த நிதியை மடைமாற்றம் செய்கிறது. தனது சொந்த நிதியைப் போல பயன்படுத்திக் கொள்கிறது. மாநிலங்கள் பசியால் துடிப்பதைப் பார்த்து சிரித்துக் கொண்டிருக்கிறது.

**‘வலிமையான இந்தியாவுக்கு அடித்தளம் இட்டுள்ளேன்’ என்று பிரதமர் அவர்கள் சொல்லி இருக்கிறார்கள். இந்தியா என்ற உடல் வலிமையாக இருக்க வேண்டுமானால் அதன் உடல் உறுப்புகளான மாநிலங்கள் வலிமையாக இருக்க வேண்டாமா? காலும் கையும் பலவீனம் அடைய, இதயம் அடைக்க, தலையில் பெரும் காயங்கள் ஏற்பட - முழு உடல் சுகமாக இருப்பதாக எப்படிச் சொல்ல முடியும்? அனைத்து உறுப்புகளையும் சிதைத்து விட்டு, முகத்துக்கு பவுடர் பூசிக் கொண்டால் போதும் என்று நினைக்கிறார் பிரதமர்.**

இத்தனைக்கும் அவர் குஜராத் மாநிலத்தின் முதலமைச்சராக இருந்தவர். 12 ஆண்டு காலம் இருந்தவர். முதலமைச்சராக இருந்தபோது, மாநில உரிமைகளுக்காக குரல் கொடுத்தவர். கர்ஜித்தவர். பிரதமர் ஆனதும், மாநிலங்களின் நன்மையை வலிமைப்படுத்தும் அரசாக தனது அரசு செயல்படும் என்று சொன்னவர் பிரதமர் நரேந்திரமோடி. ஆனால் வந்ததும் மாநிலங்களைத் தான் சிதைத்தார். அழிக்கப் பார்க்கிறார்.

**‘எங்களிடம் இருந்து அதிகமாக நிதி வசூல் செய்கிறீர்களே? எங்களுக்கு திருப்பித் தர மறுக்கிறீர்களே? குறைவாக நிதி தரும் மாநிலங்களுக்கு அதிகமாக பகிர்ந்தளிக்கிறீர்களே?’ என்று மாநிலங்கள் கேட்பதில் என்ன தவறு இருக்கிறது. இதைச் சொன்னால் நாட்டை பிளவுபடுத்தும் பேச்சு என்கிறார் பிரதமர்.**

மாநிலங்கள் அவையில் பேசிய பிரதமர் மோடி அவர்கள், மாநிலங்கள் பேசும் உரிமையை பிளவுபடுத்தும் பேச்சு என்கிறார். ‘நாட்டை ஒன்றாகப் பார்க்க வேண்டுமாம்’. தனித்தனியாகப் பார்க்கக் கூடாதாம். இதற்கு அவர் ஒரு உதாரணம் சொல்லி இருக்கிறார்.

“எங்களைப் பொறுத்தவரையில் நாடு என்பது வெறும் நிலமல்ல. அது மனித உடலைப் போன்றது. காலில் முள் குத்தி வலி ஏற்பட்டால் அந்த முள்ளை கை உடனே எடுக்கும். ‘காலில் தானே முள் இருகிறது. எனக்கு கவலையில்லை’ என கை நினைக்காது. அது போலவே நமது தேசமும்” என்று சொல்லி இருக்கிறார் பிரதமர்.

காலில் முள் குத்தினால் கை உடனே போய் எடுக்கும் என்பது மனித இயல்பு. இது பிரதமர் சொல்லித் தெரியவேண்டியது இல்லை. முள் குத்திய காலுக்கு அறுவைச் சிகிச்சை செய்ய வேண்டுமானால் காலில் தானே செய்ய வேண்டும்? முழு உடம்பையே அறுவைச் சிகிச்சை செய்வார்களா? யார் பாதிக்கப்பட்டுள்ளார்களோ அவர்களை கவனிக்க வேண்டாமா?

**ஏன் வேட்டி கட்டவில்லை என்று கேட்டால், தலைக்கு தொப்பி வைத்துள்ளேனே என்று சொல்வதைப் போல இருக்கிறது பிரதமர் மோடியின் பதில்.**

**- தொடரும்**

## ஐட்ரீம் ஆர்.மூர்த்தி எம்.எல்.ஏ. ஏற்பாட்டில் இராயபுரத்தில் 2500 பேருக்கு நல உதவிகள் வழங்கல்!

சென்னை, பிப். 12-

முதலமைச்சர் அவர்களின் வழிக்காட்டுதலின் படி, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு, இராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் ஐட்ரீம் இரா.மூர்த்தி ஏற்பாட்டில், இராயபுரம் கிழக்கு பகுதி, காசிமேடு திரௌபதி அம்மன் கோவில் அருகில் நடைபெற்ற நிகழ்ச்சியில் 2500 பேருக்கு நலத்திட்ட உதவிகளை சென்னை வடக்கு மாவட்ட செயலாளர் தா.இளைய அருணா, கலாநிதி வீராசாமி எம்.பி., இராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் ஐட்ரீம் இரா. மூர்த்தி ஆகியோர் வழங்கினர்.

இந்நிகழ்ச்சியில் இராயபுரம் கிழக்கு பகுதிச் செயலாளர் இரா.செந்தில்குமார், வட்டச் செயலாளர் ஆர்.வி. கணேஷ், மாவட்ட, பகுதி, வட்டக் கழக நிர்வாகிகள், அணிகளின் நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் திரளாக பங்கேற்றனர்.



திருப்பூர் தெற்கு மாவட்டம், மடத்துக்குளம் மேற்கு ஒன்றியம், ஜோத்தம்பட்டி ஊராட்சியை சேர்ந்தவர் சகோதரர் சதீஷ்குமார். இளைஞரணி உறுப்பினரான சதீஷ்குமார், அரியனாச்சிபாளையம் பூத் கமிட்டி உறுப்பினராகவும் பணியாற்றினார். சேலத்தில் கடந்த ஜனவரி 21ஆம் தேதி நடைபெற்ற கழக இளைஞர் அணி மாநில மாநாட்டில் பங்கேற்றுவிட்டுத் திரும்புகிற போது, சங்ககிரி அருகே நடந்த விபத்தில் உயிரிழந்தார். அவருடைய குடும்பத்திற்கு உதவுகின்ற விதமாக கழக இளைஞர் அணி அறக்கட்டளை சார்பில் ரூபாய் 5 லட்சத்திற்கான காசோலையை சதீஷ்குமாரின் மனைவி கார்த்திகாவிடம் திருப்பூரில் நேற்று இளைஞர் அணிச் செயலாளர் – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வழங்கினார். உடன் அமைச்சர் மு.பெ.சாமிநாதன், இல.பத்மநாபன் மற்றும் பலர் உள்ளனர்.

## ரிஷிவந்தியம் தொகுதியில் 14,427 பயனாளிகளுக்கு ரூ.94.58 கோடி மதிப்பில் நலத்திட்ட உதவிகள்!

### அமைச்சர் எ.வ.வேலு வழங்கினார்!

கள்ளக்குறிச்சி, பிப். 12 -

கள்ளக்குறிச்சி மாவட்டம், ரிஷிவந்தியம் தொகுதிக்கு உட்பட்ட செட்டித்தாங்கல் கிராமத்தில், மக்களுடன் முதல்வர் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா மிகச் சிறப்பாக நடைபெற்றது,

இவ்விழாவில் பொதுப் பணி மற்றும் நெடுஞ்சாலைகள் துறை அமைச்சர் எ.வ. வேலு கலந்து கொண்டு, மாவட்ட அளவிலான 14,427 பயனாளிகளுக்கு 94 கோடியே 58 லட்சத்து 57 ஆயிரத்து 378 ரூபாய் மதிப்பிலான பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

இந்த விழாவில் மாவட்ட ஆட்சியர் ஷ்ரவன் குமார் ஜடாவத், ரிஷிவந்தியம் சட்டமன்ற உறுப்பினர் வசந்தம் க. கார்த்தி கேயன், சங்கராபுரம் சட்டமன்ற உறுப்பினர் த.உதயசூரியன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதன் பின்னர் அமைச்சர் எ.வ.வேலு பேசுகையில் தமிழகத்தில் திராவிட மாடல் ஆட்சியில் பெண்களுக்கு அனைத்து விதத்தி லும் சம உரிமை வழங்கும் ஆட்சி தற்போது நடைபெற்று வருகிறது.

அதற்கு ஒரு உதாரணமாக கலைஞர் அவர்கள் ஆட்சி பொறுப்பில் இருக்கும் போது உள்ளாட்சியில் 50 சதவீதம் பெண்களுக்கு முன்னுரிமை அளித்தார்.

அதனைத் தொடர்ந்து அவரது வழியில் தளபதி மு.க.ஸ்டாலின் பெண்களுக்கு முன்னுரிமை அளிக்கும் வகையில் பல்வேறு நலத்திட்ட உதவிகள் செய்து வருகிறார்.

அதில் குறிப்பாக கள்ளக்குறிச்சி மாவட்டத்தை பொறுத்தவரையில் ரிஷிவந்தியம் தொகுதி, சங்கராபுரம் தொகுதி, கள்ளக்குறிச்சி தொகுதி, உளுந்தூர் பேட்டை தொகுதி உள்ளிட்ட அனைத்து தொகுதிகளிலும் சுமார் 2,68,134 பேருக்கு கலைஞர் மகளிர் உதவித் தொகை மாத மாதம் ஆயிரம் ரூபாய் வழங்கி வருகிறார்.

கள்ளக்குறிச்சி மாவட்ட மக்கள் பயன்படும் வகையில் அரசின் திட்டங்கள் அனைத்து பகுதிகளிலும் முறையாக செயல்படுத்தப் பட்டு வருகிறது. பொதுமக்கள் வைக்கின்ற கோரிக்கைகளுக்கு உடனுக்குடன் தீர்வு காணப்பட வேண்டும் பொது மக்களின் கோரிக்கைகளை நேரடியாக அரசு அலுவலர்கள் சென்று வர வேண்டும் என்று உன்னத நோக்கில் அரசு அலுவலர்களைத் தேடி பொதுமக்கள் சென்ற காலத்தை மாற்றி உங்களைத் தேடி உங்கள் ஊரில் என்று சிறப்பு திட்டத்தை செயல்படுத்தி மாவட்ட ஆட்சியர், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் உட்பட அனைத்து துறைகளை முதன்மையாக விளங்கும் கிராமங்களில் 24 மணி நேரம் தங்கி இருந்து அடிப்படை வசதிகள் குறித்து ஆய்வு செய்து, பொதுமக்களிடத்தில் குறைகளைக் கேட்டறிந்து அவற்றை நிறைவேற்றும் வகையில் மகத்தான பல்வேறு திட்டங் களை முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் செயல்படுத்தி வரு கிறார்.

இந்த திட்டம் அனைத்து தரப்பு மக்களிடம் மிகுந்த வரவேற்பை பெற்றுள்ளது. மேலும் தமிழக மக்கள் அனைவருக்கும் எனது ஒரு வேண்டுகோள் குழந்தை களுக்கு தாய்மொழியான தமிழில் பெயர் இனி வரும் காலங்களில் வையுங்கள், அதுதான் நம் வீட்டுக்கும் நாட்டுக்கும் பெருமை என்று தெரிவித்துக் கொண்டு வருகின்ற நாடாளுமன்ற தேர்தலில் தி.மு.க. தலைமையிலான கூட்டணிக்கு மக்கள் வாக்களித்து 40க்கும் 40 தொகுதிகளில் தி.மு.க. வேட்பாளர்கள் மற்றும் கூட்டணிக் கட்சி வேட்பாளர்களை தமிழக மக்கள் அதிக வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற செய்வார்கள் அந்த வெற்றியை இந்தியாவில் ஆட்சிப் பொறுப்பில் இருக்கும் முதல்வர்களுக்கு எல்லாம் முதல்வராக செயல்பட்டு வரும் நமது தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்களுக்கு தமிழக மக்கள் நிச்சயம் தருவார்கள். ஆகவே தி.மு.க. நிர்வாகிகள் பல்வேறு கருத்து வேறுபாடுகளை மறந்து விட்டு நாம் அனைவரும் ஒன்று சேர்ந்து கடுமையாக உழைத்து வெற்றி பெற்று மக்களுக்கு என்றும் தொண்டாற்றிட அனைவரும் ஒன்று சேர்ந்து கடுமையாக உழைக்க வேண்டும் என்று அமைச்சர் எ.வ. வேலு பேசினார்.

## சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்திற்கு புதிதாக தேர்வு செய்யப்பட்ட 12 உதவிப் பொறியாளர்களுக்கு பணி நியமன ஆணைகள்!

### அமைச்சர் பி.கே.சேகர்பாபு வழங்கினார்!

சென்னை,பிப்.12-

சென்னை, எழும்பூர், தாளமுத்து நடராஜன் மாளிகையில் உள்ள சென்னை பெருநகர வளர்ச்சிக் குழும அலுவலகக் கூட்டரங்கில் நேற்று (11.02.2024) அமைச்சர் பி.கே. சேகர்பாபு, சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்திற்கு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் புதிதாக தேர்வு செய்யப்பட்ட 12 உதவிப் பொறியாளர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார்.

சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் மேற்கொள்ளப்பட்டு வரும் திட்டங்களான வடசென்னை வளர்ச்சித் திட்டம், குத்தம்பாக்கம் புதிய பேருந்து முனைய விரிவாக்கம், செங்கல்பட்டு பேருந்து முனையம், மாமல்லபுரம் பேருந்து முனையம், வெளிவட்டச் சாலை மேம்பாடு, சாத்தாங்காடு இரும்பு மற்றும் எஃகு அங்காடியினை நவீன மயமாக்குதல், ஒருங்கிணைந்த கிழக்கு கடற்கரை மேம்பாடு உள்ளிட்ட பொது உட்கட்டமைப்புத் திட்டங்கள் மற்றும் மறுவடிவமைப்புத் திட்டங்கள் போன்ற பல்வேறு செயல்பாடுகளை மேற்கொள்வதற்கான பணிகளைக் கருத்தில் கொண்டு சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமமானது உதவி பொறியாளர் நிலையில் உள்ள காலிப் பணியிடங்களை நிரப்புவதற்கு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்திற்கு கேட்டுக்கொள்ளப்பட்டது.

அந்த வகையில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் ஒருங்கிணைந்த பொறியாளர் பணியிடங்களுக்கான எழுத்து மற்றும் நேர்முகத் தேர்வுகளை நடத்தி, தகுதி பெற்ற 12 உதவி பொறியாளர்களை தெரிவு செய்து அவர்களின் பெயர்களை இக்குழுமத்திற்கு அனுப்பி வைத்ததன் அடிப்படையில், நேற்று (11.02.2024) இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் மற்றும் சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழும அமைச்சர் மற்றும் தலைவருமான பி.கே. சேகர்பாபுவால் 12 உதவி பொறியாளர்களுக்கு பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டன. இக்குழுமத்தால் கடைசியாக, கடந்த 2013 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 2 உதவி பொறியாளர்கள் நேரடி நியமனம் மூலம் நிரப்பப்பட்டன. 10 ஆண்டுகளுக்கு பிறகு 12 உதவி பொறியாளர்களை நியமனம் செய்திருப்பது குறிப்பிடத்தக்கது மற்றும் குறிப்பாக, புதிதாக பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்ட உதவி பொறியாளர்களின் மூலம் இக்குழுமத்தால் மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு வளர்ச்சித் திட்ட பணிகளை விரைந்து முடிக்கவும் பேருதவியாக இருக்கும்.

இந்நிகழ்வின் போது வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை செயலாளர் சி.சமயமூர்த்தி, சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தின் உறுப்பினர் செயலர் அன்சுல் மிஸ்ரா , மாவட்ட வருவாய் அலுவலர்/ நிர்வாக அலுவலர் (பொ) திருமதி.மு.இந்துமதி மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் பங்கேற்று சிறப்பித்தனர்.



தி.மு.க. இளைஞர் அணி

கலைஞர் 100 1924 - 2023

**மாவட்ட – மாநகர – மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்களின் செயல்பாடுகள் குறித்த ஆய்வுக் கூட்டம்**

**இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு**

கழக இளைஞர் அணியின் மாவட்ட – மாநகர – மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் ஆற்றிய கழகப்பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டம் மாவட்ட வாரியாக, எனது தலைமையில், மாநிலத் துணைச் செயலாளர்கள் முன்னிலையில் குறிஞ்சி இல்லத்தில் வருகிற 14 மற்றும் 15–ஆம் தேதிகளில் நடைபெற உள்ளது. இக்கூட்டத்தில் மாவட்ட – மாநகர – மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் அனைவரும் தாங்கள் பராமரித்து வரும் மினிட் புத்தகம், கழகப் பணிகள் குறித்த பத்திரிகைச் செய்திகள், புகைப்படங்கள் ஆகியவற்றுடன் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டு கொள்ளப்படுகிறார்கள்.

ஆய்வுக் கூட்ட விவரம் வருமாறு :

| நாள் | மண்டலம் | நேரம் |
|---|---|---|
| 14.02.2024 புதன்கிழமை | 1 | மாலை 4.00 – 6.00 மணி |
| | 2 | மாலை 6.00 – 8.00 மணி |
| 15.02.2024 வியாழக்கிழமை | 3 | மாலை 4.00 – 6.00 மணி |
| | 4 | மாலை 6.00 – 8.00 மணி |

அன்பகம்
சென்னை – 18.
நாள் : 10–02–2024.

**உதயநிதி ஸ்டாலின்**
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி



திருப்பூரில் ரூ. 1,191 கோடி மதிப்பிலான குடிநீர் திட்டத் தொடக்கவிழாவில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நல உதவிகளை வழங்கினார். உடன் அமைச்சர்கள் கே.என். நேரு, மு.பெ. சாமிநாதன் மற்றும் ஆ.ராசா எம்.பி., ஆகியோர் உள்ளனர்.



இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் திருப்பூரில் பல்வேறு அரசு நலத்திட்டங்களை தொடங்கி வைப்பதற்காக நேற்று வருகை தந்த போது, மகளிர் சுய உதவிக் குழுக்களைச் சேர்ந்தவர்கள், தங்களின் தயாரிப்புகள் அடங்கிய பொருட்களை பார்வைக்கு வைத்திருந்தனர். அவற்றை பார்வையிட்டு, அந்தப் பொருட்களின் தயாரிப்பு முறை மற்றும் பயன்பாட்டை கேட்டறிந்தார்.

## பெரியார் - அண்ணா-கலைஞரின் மொத்த உருவமாகத் திகழும்

# முதல்வர் மு.க.ஸ்டாலின் அரசின் திட்டங்கள் மற்ற மாநிலங்களுக்கு முன்னோடியாகத் திகழ்கின்றன!

## திருப்பூரில் ரூ.1,191 கோடியில் குடிநீர்த் திட்டத்தைத் தொடங்கி வைத்து, அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பெருமிதம்!

திருப்பூர், பிப்.12–

**“பெரியார் – அண்ணா– கலைஞரின் மொத்த உருவமாகத் திகழும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அரசின் திட்டங்கள் மற்ற மாநிலங்களுக்கு முன்னோடியாகத் திகழ்கின்றன” என்று அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் திருப்பூரில் ரூ.1,191 கோடியில் குடிநீர் திட்டத்தைத் தொடங்கி வைத்து உரையாற்றும்போது கூறினார்.**

திருப்பூர், சிக்கண்ணா அரசு கலைக் கல்லூரியில் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) காலை நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சார்பாக ரூ.1,191 கோடி மதிப்பீட்டில் திருப்பூர் மாநகராட்சிப் பகுதிகளுக்கு, புதிய குடிநீர்த் திட்டம் மற்றும் திருப்பூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த 165 ஊரக குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் ஆகியவற்றின் தொடக்க விழா மற்றும் அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நடைபெற்றது.

இந்த விழாவில் புதிய குடிநீர்த் திட்டம் உள்ளிட்ட பல திட்டங்களை தொடங்கிவைத்து, புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கி இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் சிறப்புரையாற்றினார். அப்போது அவர் பேசியதாவது:

திருப்பூர் மாநகராட்சியின் சார்பாக, ஆயிரத்து 191 கோடி ரூபாய் மதிப்பீட்டில் உருவாக்கப் பட்டுள்ள `திருப்பூர் நான்காவது குடிநீர்த் திட்ட’த்தை இங்கே தொடங்கிவைப்பதில் நான் மிகுந்த பெருமை அடைகிறேன். மகிழ்ச்சி அடைகிறேன். திருப்பூரைச் சேர்ந்த தொழிற்துறை பெருமக்களின் நீண்ட நாள் கோரிக்கையான `கன்வென்ஷன் சென்டரை’ 54 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இங்கு திறந்து வைத்திருக்கிறோம்.

### ஆயிரத்து 362 கோடி ரூபாய் மதிப்பில் திட்டங்கள்!

மேலும் திருப்பூரில் போக்குவரத்து நெரிசலைப் போக்கும் விதமாக ரூபாய் 13 கோடி செலவில் அமைக்கப்பட்டுள்ள `மல்டி லெவல் கார் பார்க்கிங்’ மையத்தையும் திறந்து வைத்திருக்கிறோம். இப்படி இன்றைக்கு மட்டும் இந்த மேடையில் மொத்தம் ஆயிரத்து 362 கோடி ரூபாய் மதிப்பில் நிறைவு பெற்ற திட்டங்களைத் தொடங்கி வைப்பது, புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டுவது மற்றும் பல்வேறு துறைகள் சார்பாக, நலத் திட்டங்களை வழங்கி இருக்கிறோம்.

### `வந்தாரை வாழவைக்கும் தமிழ்நாடு’

`வந்தாரை வாழவைக்கும் தமிழ்நாடு’ என்று சொல்வார்கள். திருப்பூரை மனதில் வைத்துத்தான் அந்த வாக்கியத்தையே சொல்லி இருப்பார்கள் என்று நான் நம்புகிறேன். ஏனென்றால், அந்த அளவு பலருக்கு வாழ்வளிக்கின்ற மாநகரம்தான் இந்த திருப்பூர் மாநகரம்.

மூன்று நாட்களுக்கு முன்பு தந்தை பெரியாரின் மண் ஈரோட்டுக்கு சென்றேன். அங்கே, மகளிர் சுய உதவிக்குழு வங்கிக் கடன் இணைப்புத் திட்டத்தை தொடங்கி வைத்தேன். கிட்டத்தட்ட 310 கோடி ரூபாய் அளவுக்குப் பல நலத்திட்டங்களை அங்கு வழங்கினோம்.

### மகளிர் சுய உதவிக்குழு பொருட்கள்தான்!

இங்கேகூட மகளிர் சுய உதவி குழுக்களைச் சேர்ந்த பல சகோதரிகள் வந்திருக்கிறீர்கள். வரும்போது வரவேற்றீர்கள், உங்கள் அத்தனை பேருக்கும் என்னுடைய வாழ்த்துகளை நான் தெரிவித்துக் கொள்கிறேன். இன்னும் பெருமையாகச் சொல்ல வேண்டுமென்றால், என்னுடைய இல்லத்தில் நான் பயன்படுத்துகின்ற பல பொருட்கள் மகளிர் சுயஉதவிக் குழுக்களின் சகோதரிகள் தயாரிக்கின்ற பொருட்கள்தான்.

என்னுடைய வீட்டில் மட்டுமல்ல, நம்முடைய தலைவர் முதலமைச்சர் அவர்களின் இல்லத்தில் பயன்படுத்துவதும் மகளிர் சுய உதவிக்குழுக்கள் தயாரிக்கின்ற பொருட்கள்தான். இன்னும் பெருமையாகச் சொல்ல வேண்டுமென்றால், கடந்த சட்டமன்றப் பேரவையில் பேசும்போது அனைத்து உறுப்பினர்களுக்கும் கோரிக்கை வைத்தேன். ‘இனிமேல் எல்லோருமே மகளிர் சுய உதவிக்குழுக்கள் தயாரிக்கின்ற பொருட்களைத்தான் பயன்படுத்த வேண்டும். யாருக்காவது பரிசுப்பொருள் கொடுக்கவேண்டும் என்றால் கூட, நீங்கள் தயாரிக்கின்ற பொருட்களைத்தான் பரிசாகக் கொடுக்க வேண்டும்’ என்று பேசினேன். எந்தத் தைரியத்தில் பேசினேன் என்றால், நீங்கள் தயாரிக்கின்ற பொருட்கள் தரமாக இருக்கும் என்ற அந்தத் தைரியத்தில்தான் பேசினேன்.

### பெரியார், அண்ணா, கலைஞரின் மொத்த உருவமாக முதலமைச்சர்!

தந்தை பெரியாரும், பேரறிஞர் அண்ணாவும் முதன்முறையாகச் சந்தித்த இந்த திருப்பூர் மாவட்டத்துக்கு நான் வருகை தந்திருக்கின்றேன். இந்த நிகழ்ச்சியை முடித்துவிட்டு கலைஞர் வாழ்ந்த கோவை மாவட்டத்துக்கு செல்ல இருக்கிறேன். இப்படி பெரியார், அண்ணா, கலைஞர் என நம்முடைய தலைவர்கள் வாழ்வில் முக்கிய இடம் பிடித்த இந்த ஊர்களுக்கு எல்லாம் தொடர்ந்து பயணம் செய்து கொண்டிருக்கிறேன். இப்போது தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரின் மொத்த உருவமாக இருக்கக்கூடிய நம் தலைவர், முதலமைச்சர் அவர்கள் இப்படி ஆயிரக்கணக்கான திட்டங்களை, கோடிக்கணக்கான ரூபாய் செலவில் இந்த மாவட்டங்களுக்கு வாரி வழங்கி இருக்கிறார்கள்.



திருப்பூரில் குடிநீர் தேவையை பூர்த்தி செய்யும் விதமாக ரூ.1,191 கோடி மதிப்பில் தொடங்கப்பட்டுள்ள திருப்பூர் 4 குடிநீர் திட்டத்தை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்து உரையாற்றினார்.

இன்றைக்கு நம்முடைய மாநில நிதி நிலைமையின் சக்திக்கு மீறி, இந்தத் திட்டங்களை எல்லாம் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் வழங்கிக் கொண்டிருக்கிறார்கள். குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும் என்றால், இந்த திருப்பூர் மாவட்ட மக்களுக்கு நான் சொல்லத் தேவையில்லை. திருப்பூர் ஒரு மிகச்சிறந்த தொழில் நகரம். மற்ற ஊர்க்காரர்களுக்கெல்லாம், மற்ற மாவட்டக்காரர்களுக்கெல்லாம் ஜி.எஸ்.டி என்றால் என்னவென்று தெரியாதபோதே, எழுத்துக்கூட்டி படித்துக் கொண்டிருக்கும்போதே இந்த ஜி.எஸ்.டி மூலம் வருகின்ற பாதகங்கள் என்னென்ன, பிரச்சினைகள் என்னென்ன என்று, அலசி ஆராய்ந்து, தமிழ்நாட்டு மக்களுக்குச் சொன்னவர்கள்தான் இந்த திருப்பூர் மாவட்ட மக்கள்.

### 6 லட்சம் கோடி ரூபாய் வரி செலுத்தி இருக்கிறோம்!

கடந்த ஐந்து ஆண்டுகளில் மட்டும் ரூபாய் 6 லட்சம் கோடி அளவுக்கு நம்முடைய தமிழ்நாட்டு மக்களும், தமிழ்நாடு அரசும் வரி செலுத்தி இருக்கிறோம். ஆனால், ஒன்றிய அரசு நம்முடைய தமிழ்நாட்டுக்குத் திருப்பிக் கொடுத்த தொகை எவ்வளவு தெரியுமா? வெறும் ஒரு லட்சத்து 58 ஆயிரம் கோடி. நாம் கொடுத்தது 6 லட்சம் கோடி. ஒன்றிய அரசு நமக்குத் திருப்பிக் கொடுத்தது வெறும் 1 லட்சத்து 58 ஆயிரம் கோடி.

தமிழ்நாட்டு மக்கள் நீங்கள் ஒன்றிய அரசுக்கு வரியாக ஒரு ரூபாய் கட்டினீர்கள் என்றால், ஒன்றிய அரசு திருப்பிக் கொடுப்பது வெறும் 29 காசுதான். ஆனால், மற்ற மாநிலங்களுக்கு அதிகமாகக் கொடுக்கிறார்கள். மாநிலத்தின் நிதி நிலைமை எவ்வளவு கடினமாக இருந்தாலும், நம்முடைய தமிழ்நாட்டு மக்களைக் கைவிட்டு விடக்கூடாது என்று தமிழ்நாட்டுக்கு ஒரு தந்தையாக இருந்து, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் பார்த்துப் பார்த்து ஒவ்வொரு திட்டத்தையும் நிறைவேற்றி வருகிறார்கள்.

### அண்ணன் நேரு கழகத்துக்கு மட்டுமல்ல களப்பணியிலும் முதன்மைச் செயலாளர்!

வழக்கமாக குடிநீர் வழங்கல் துறைதான் குடிநீர்த் திட்டங்களை மேற்கொள்ளும். ஆனால், கொஞ்சம் வித்தியாசமாக இன்றைக்கு திருப்பூர் மாநகராட்சியே இந்த மிகப்பெரிய குடிநீர்த் திட்டத்தை முன்னெடுத்துள்ளது. இன்னும் சொல்லப்போனால், மிகப்பெரிய மாநாடு போல் நடந்து கொண்டிருக்கக்கூடிய இந்த மாபெரும் நிகழ்ச்சியை, மாநகராட்சிதான் நடத்துகிறது என்பதில், நமக்கு மிகப்பெரிய மகிழ்ச்சி.

இதற்காகத் துறையின் அமைச்சர் அண்ணன் கே.என்.நேரு அவர்களை எவ்வளவு பாராட்டினாலும், போதாது. அவர் கழகத்துக்கு மட்டும் முதன்மைச் செயலாளர் கிடையாது. களப்பணியிலும், மக்கள் பணியிலும் முதன்மையாகச் செயல்படக் கூடியவர். மாவட்ட அமைச்சர் அண்ணன் சாமிநாதன் அவர்களுக்கும் என்னுடைய நன்றியையும் வாழ்த்துகளையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தத் திட்டம் நிறைவேறும்வரை கண்ணும் கருத்துமாக இருந்து உழைத்த திருப்பூர் மாநகராட்சியின் மேயர் அன்புச் சகோதரர் தினேஷ்குமாருக்கும் என்னுடைய வாழ்த்துகளை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

உங்களுடைய மேயர் தினேஷ்குமார் மிகுந்த கெட்டிக்காரர். எந்த விஷயத்தை எப்படிச் செய்து முடிக்கவேண்டும் என்று அவருக்கு நன்றாகத் தெரியும். அண்ணன் நேரு அவர்களிடம் எப்படிப் பேசினால், நிதியை ஒதுக்குவார், இந்தத் திட்டத்தைச் செய்வதற்கு, இசைவு கொடுப்பார் என்று அவருக்கு நன்றாகத் தெரியும். அதற்கும் இந்த நேரத்தில் என்னுடைய பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### அன்றைய தேவையை மட்டும் கருத்தில் கொள்வதில்லை!

சென்ற ஆண்டு சிறந்த நிர்வாகத்துக்காக, தென்னிந்தியாவிலேயே சிறந்த மாநகராட்சியாக திருப்பூர் மாநகராட்சி தேர்வு செய்யப்பட்டது. அந்தப் பெருமையைத் தேடித் தந்து கொண்டிருப்பவர் உங்களுடைய மாநகராட்சியின் மேயர் தினேஷ் குமார். நாள் ஒன்றுக்கு 196 எம்.எல்.டி தண்ணீர் இந்தத் திட்டத்துக்காக மேட்டுப்பாளையம் பவானி ஆற்றிலிருந்து குழாய்கள் மூலம் எடுத்து வரப்படுகிறது. அன்னூர் அருகே பிரமாண்டமான முறையில் அமைக்கப்பட்டுள்ள நீர்ச் சுத்திகரிப்பு நிலையத்தில், நீர் சுத்தம் செய்யப்படுகிறது.

முன்பெல்லாம் பத்து நாளைக்கு ஒரு முறைதான் திருப்பூருக்குத் தண்ணீர் விநியோகம் செய்யப்பட்டது. திருப்பூரில் கிட்டத்தட்ட 2 லட்சம் குடிநீர் இணைப்புகள் உள்ளன.

இந்தத் திட்டத்தின் மூலம் அனைத்து இணைப்புகளுக்கும் ஒரு நாள் விட்டு ஒரு நாள் இன்றைக்கு தண்ணீர் வழங்கப்பட உள்ளது. இதற்காக நகரத்தில் கூடுதலாக, 29 மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் கட்டியிருக்கிறார்கள்.

நம்முடைய திராவிட இயக்கமாக இருக்கட்டும், திராவிட மாடல் அரசாக இருக்கட்டும், நாம் அன்றைய தேவையைக் கருத்தில் கொண்டு மட்டும் சிந்திப்பதில்லை, திட்டங்களைச் செயல்படுத்துவதில்லை. எதிர்காலத் தேவையை நோக்கித்தான் நம்முடைய கொள்கை உருவாக்கப்பட்டது. அந்தக் கொள்கையின் வழியில்தான் அரசுத் திட்டங்களையும் இன்றைக்கு உருவாக்கிக் கொண்டிருக்கிறோம். அந்த வகையில்தான், இந்த திருப்பூர் நான்காவது குடிநீர்த் திட்டமும் செயல்படுத்தப்பட்டுள்ளது.

2024 -ஆம் ஆண்டான இந்த வருடத்தை மட்டுமே கருத்தில்கொண்டு இந்தத் திட்டம் நிறைவேற்றப்படவில்லை. 2040ஆம் ஆண்டில் அன்றைய மக்கள் தொகை என்னவாக இருக்கும் என்பதைக் கருத்தில் கொண்டுதான் இந்தத் தொலைநோக்குத் திட்டத்தை நம்முடைய திராவிட மாடல் அரசு, நம் முதலமைச்சர் அவர்கள் இந்தத் திட்டத்தை இந்த மாவட்டத்துக்கு இந்த மாநகராட்சிக்குத் தந்திருக்கிறார்கள்.

இந்தத் திட்டம் இன்றைக்கு 14 லட்சம் மக்களுடைய தாகத்தைத் தணிக்கின்ற திட்டமாகச் சிறப்பாகச் செயல்பட உள்ளது. திருப்பூரில் இனி ஒவ்வொரு வீட்டின் குடிநீர்க் குழாயிலும் மினரல் வாட்டர்தான்தான் வரப்போகின்றது என்பதை பெருமையுடனும் மகிழ்ச்சியுடனும் நான் கூறிக் கொள்கின்றேன்.

### 2,000 பேர் ஒரே நேரத்தில் அமரக்கூடிய வசதி!

இந்தக் குடிநீர்த் திட்டம் மட்டுமல்ல திருப்பூர் தொழில் துறையினுடைய நீண்ட நாள் கோரிக்கை. ஒரு கன்வென்ஷன் சென்டர் வேண்டும் என்பது. அந்தக் கோரிக்கையை ஏற்று, இன்றைக்கு 53 கோடியே 26 லட்சம் மதிப்பீட்டில், இங்கே அந்த கன்வென்ஷன் சென்டரையும் திறந்து வைத்திருக்கிறோம்.

கிட்டத்தட்ட 2,000 பேர் ஒரே நேரத்தில் அமரக்கூடிய வசதி உள்ளது. முன்பெல்லாம் திருப்பூர் தொழிற்துறையைச் சேர்ந்தவர்கள் எல்லாம், ஏதாவது நிகழ்ச்சி நடத்த வேண்டும், மாநாடு நடத்த வேண்டும், கலந்துரையாடல் கூட்டம் நடத்த வேண்டும் என்றால், இங்கே இருந்து கிளம்பி, 50 கிலோமீட்டர் பயணம் செய்து, கோயம்புத்தூர் சென்று `கொடிசியா’ மைதானத்தில்தான் நடத்த முடியும். இனி, உங்களுக்கென்று ஒரு கன்வென்ஷன் சென்டர் வந்துவிட்டது.

இனி, கருத்தரங்குகள், மாநாடுகள், வர்த்தகக் கண்காட்சிகளை உங்கள் திருப்பூர்லயே நடத்தலாம். இந்தப் புதிய கன்வென்ஷன் சென்டர் மட்டுமல்ல, ரூபாய் 13 கோடி மதிப்பீட்டில் மல்டி லெவல் கார் பார்க்கிங் வசதியும் இங்கு வந்திருக்கிறது. அதுவும் மாநகரத்தின் மையப்பகுதியில் திறந்து வைத்திருக்கிறோம். இந்தத் திட்டங்கள் எல்லாம் திருப்பூரை நிச்சயம் அடுத்த கட்டத்துக்கு, வளர்ச்சிக்கு எடுத்துச் செல்லும் எனும் நம்பிக்கை எங்களுக்கு உள்ளது.

### கலைஞர் மகளிர் உரிமைத்தொகைத் திட்டம்!

இன்றைக்கு நம்முடைய அரசு ஏராளமான பல திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. குறிப்பாக, கலைஞர் மகளிர் உரிமைத்தொகைத் திட்டம். ஒரு கோடியே 16 லட்சம் மகளிர் மாதம், மாதம் ஆயிரம் ரூபாய் வாங்கிக் கொண்டு இருக்கிறார்கள். அதே போல நம்முடைய முதலமைச்சர் பதவியேற்று பொறுப்பேற்ற முதல் கையெழுத்து மகளிருக்குக் கட்டணமில்லா பேருந்து வசதி. ஒவ்வொரு மகளிரும் மாதம், மாதம் 900 ரூபாய் சேமிக்கிறீர்கள். கிட்டத்தட்ட அதுவே வருடத்துக்கு 12,000 ரூபாய்.

அதுமட்டுமல்ல அரசுப் பள்ளியில் படித்த கல்லூரி மாணவிகளுக்குப் புதுமைப்பெண் திட்டம் வாயிலாக மாதம் ஆயிரம் ரூபாய். ஒன்றாம் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரை அரசு பள்ளியில் படிக்கக்கூடிய 17 லட்சம் மாணவர்களுக்கு முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம். லட்சக்கணக்கான மாணவர்களின் வேலை வாய்ப்பை உறுதி செய்கின்ற `நான் முதல்வன் திட்டம்’, `மக்களைத் தேடி மருத்துவம்’, `இல்லம் தேடி கல்வி’ இப்படிப் பல திட்டங்களைச் சொல்லிக் கொண்டே போகலாம்.

நான் பெருமைக்காகச் சொல்லவில்லை. இந்திய ஒன்றியமே நம்முடைய திட்டங்களைப் பாராட்டுகின்றது. தெலுங்கானா மாநிலம், ஆந்திரா மாநிலத்திலிருந்து நம்முடைய மாநிலத்திற்கு வந்து இந்தத் திட்டங்களை எல்லாம் பார்த்து அவர்களுடைய மாநிலத்துக்கு நம்முடைய திட்டங்களை எல்லாம் கொண்டு போகிறார்கள். அந்த அளவுக்கு இந்திய ஒன்றியத்துக்கு எடுத்துக்காட்டாக நம்முடைய திராவிட மாடல் அரசு திகழ்ந்து கொண்டிருக்கிறது.

### விளையாட்டுத் துறையிலும் சாதனை!

விளையாட்டுத் துறையிலும் நாங்கள் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறோம். விளையாட்டுத் துறையில் நாம் எடுத்து வருகின்ற முயற்சிகளைப் பாராட்டி சில மாதங்களுக்கு முன்பு சி.ஐ.ஐ (CII) ‘கான்ஃபிடரேஷன் ஆஃப் இந்தியன் இண்டஸ்ட்ரி பிசினஸ் ஸ்போர்ட்ஸ் அவார்ட்’ நிகழ்வில், `பெஸ்ட் ஸ்டேட் ப்ரொமோட்டிங் ஸ்போர்ட்ஸ்’ என்ற விருதை தமிழ்நாட்டுக்குக் கொடுத்தார்கள்.

இன்றைக்குக் கூட உங்களுடைய சட்டமன்ற உறுப்பினர் அண்ணன் செல்வராஜ் அவர்கள் ஒரு கோரிக்கை வைத்திருக்கிறார். அருகில் இருக்கக்கூடிய அந்த விளையாட்டு அரங்கின் மேம்பாட்டுப் பணிகளை மேற்கொள்ள வேண்டும் என்று. நான் துறை அதிகாரிகளுடன் பேசி விரைவில் அந்தக் கோரிக்கையையும் நிறைவேற்றி வைக்கிறேன்.

மூன்று நாட்களுக்கு முன்பு மும்பையில் `தி ஹிந்து’ குழுமத்தின் பிரபலமான `ஸ்போர்ட்ஸ் ஸ்டார்’ எனும் பத்திரிகை சார்பாக எங்களுடைய துறைக்கு ஒரு விருது கொடுத்தார்கள். `பெஸ்ட் ஸ்டேட் ஃபார் ப்ரோமோசன் ஆஃப் ஸ்போர்ட்ஸ்’ என்ற விருதைக் கொடுத்திருக்கிறார்கள்.

### திராவிட மாடலைப் பாராட்டும் சர்வதேச பத்திரிகை!

இந்தியாவில் ஃபேக்டரியில் வேலை செய்கின்ற பெண்களில் 43 சதவிகித பெண்கள் தமிழ்நாட்டிலிருந்து வேலை பார்க்கிறார்கள் என்று நான் சொல்லவில்லை. அமெரிக்காவிருந்து வருகின்ற `நியூயார்க் டைம்ஸ்’ என்ற பத்திரிக்கை பாராட்டி இருக்கிறது. இதுதான் `திரவிடியன் மாடல் ஆஃப் கவர்னன்ஸ்’. நாம் திட்டங்களை மக்களுக்குத் தருகின்றோம். பாராட்டும் அங்கீகாரமும் வாழ்த்தும் எட்டுத்திக்கிலிருந்தும் நம்முடைய மாநிலத்துக்கு, நம் முதலமைச்சருக்கு வந்து கொண்டிருக்கின்றன.

### நீங்கள் இந்த அரசின் பங்கேற்பாளர்கள்!

நம் அரசின் திட்டங்களுக்கு நீங்கள் தான் தூதுவர்கள். உங்களைப் பயனாளிகளாக மட்டும் நம்முடைய அரசு பார்க்கவில்லை. நீங்கள் அத்தனை பேரும் இந்த அரசின் பங்கேற்பாளர்கள். நீங்கள் இல்லாமல் இந்த அரசு கிடையாது. நீங்கள் ஒவ்வொருவரும் முதலமைச்சருடைய முகமாக (ஃபேஸ் வேல்யூ) இருக்க வேண்டும்.

நம்முடைய அரசின் திட்டங்கள் அத்தனையையும் தமிழ்நாட்டின் பட்டிதொட்டி எங்கும், நீங்கள்தான் கொண்டு சேர்க்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, இந்தச் சிறப்பான வாய்ப்பை அளித்த நம்முடைய அமைச்சர் அண்ணன் நேரு அவர்களுக்கும் அண்ணன் சாமிநாதன் அவர்களுக்கும், வந்திருக்கும் அத்தனை பேருக்கும் அரசு அதிகாரிகளுக்கும் அலுவலர்களுக்கும் மீண்டும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசினார்.

நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என். நேரு தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில் அமைச்சர் மு.பெ.சாமிநாதன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆ.ராசா, சுப்பராயன், சண்முகசுந்தரம், சட்டமன்ற உறுப்பினர் செல்வராஜ், திருப்பூர் மேயர் தினேஷ்குமார், அயலகத் தமிழர் நலவாரியத் தலைவர் கார்த்திகேய சிவசேனாதிபதி, ஐ.ஏ.எஸ் அதிகாரிகள் முனைவர் கார்த்திகேயன், தட்சிணாமூர்த்தி, சிவராசன், மாவட்ட ஆட்சித் தலைவர் கிறிஸ்துராஜ், பவன்குமார், மாநகரத் துணை மேயர் பாலசுப்ரமணியம், மாநகராட்சியின் மண்டலத் தலைவர்கள் இல.பத்மநாபன், கோவிந்தசாமி, கோவிந்தராஜ், உமா மகேஸ்வரி, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ஜெயராமகிருஷ்ணன், மாநகரச் செயலாளர் டி.கே.டி நாகராஜன், இளைஞர் அணி நிர்வாகிகள் ஈரோடு பிரகாஷ், ஜெயக்குமார், தங்கராஜ், முத்துக்குமார், எம்.எஸ்.ஆர்.ராஜ் உள்பட பலரும் கலந்து கொண்டனர்.

# நாடாளுமன்றத்தில் பிரதமர் மோடி பேச்சின் தொனியும் - லாலா லஜபதி ராயின் பதிலும்!

ஜனவரி 31 ஆம் தேதி தொடங்கி பிப்ரவரி 10 ஆம் தேதி முடிய நாடாளுமன்றக் கூட்டத் தொடர் நடந்து முடிந்தது. நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்பு நடைபெறும் கடைசிக் கூட்டம் இது. இத்தோடு 17ஆவது நாடாளுமன்றத்தின் காலம் முடிந்தது.

2024-ஆம் ஆண்டுத் தொடக்கக் கூட்டம் என்பதால் இத்தொடரில் குடியரசுத் தலைவர் இத்தொடரில் இரு அவைகளின் கூட்டுக் கூட்டத்தில் உரையாற்றினார். அதோடு நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் தனது இடைக் கால நிதி நிலை அறிக்கையை சமர்பித்தார். இவை இரண்டு நிகழ்வுதான். இக்கூட்டத் தொடரின் சிறப்பு அம்சங்கள்.

மக்களவையிலும் மாநிலங்களவையிலும் முறையே பிப்ரவரி 5 ஆம் தேதியும் 7 ஆம் தேதியும் குடியரசுத் தலைவர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் மீதான விவாதத்திற்கு பிரதமர் நரேந்திர மோடி பதில் அளித்துப் பேசினார். இப்படி பதிலளிப்பது நாடாளுமன்ற ஜனநாயக மரபு - அதன்படி அவர் பேசினார் என்றாலும், அதில் ஜனநாயக மாண்பு இல்லை.

எதிர்க்கட்சிகளைக் கடுமையாகத் தாக்கி இருக்கிறார். நீங்கள் பார்வையாளர் மாடத்தில்தான் அமருவீர்கள் என்று கூறுகிறார். பண்டித நேருவையும் இந்திரா காந்தியையும் இந்திய மக்களின் திறமையை நம்பவில்லை என்று கூறுகிறார். மோடி இரண்டு முறை - 10 ஆண்டுகள் ஆட்சியில் இருந்தார். என்ன சாதனையை அவர் செய்து விட்டார்.? 25 கோடி மக்களை வறுமையிலிருந்து மீட்டெடுத்து விட்டதாகக் கூறியிருக்கிறார். இன்னொரு பக்கம் வறுமையில் 1/3 பகுதியினர் இந்தியாவில் இருக்கின்றனர் என்கிற செய்திகள் வெளி வந்து கொண்டு இருக்கின்றன இது இரண்டில் எது உண்மை நாட்டு மக்களே முடிவு எடுக்கிற நிலை வெகுதூரத்தில் இல்லை.

வானமும் கடல் நீரும் உள்ள அளவு மோடி ஆட்சியில் நீடித்து இருப்பாரா? அப்படியாராவது உலகத்தில் ஆட்சி செய்து இருக்கிறார்களா? - என்றால் இல்லை. அந்த மனோபாவம் மோடிக்கு வந்து இருப்பதை அவர் பேச்சின் 'தொனி' எடுத்துக் காட்டுகிறது. நாளேடுகளில் வெளியாகி உள்ள அவரின் பேச்சைப் படித்துப் பார்க்கிற போது சாதாரண பொதுக்கூட்டங்களில் ஒரு பேச்சாளர் பேசுவது போல் இருக்கிறதே ஒழிய - பிரதமர் நாடாளுமன்றத்தில் உரையாற்றுவதைப் போல இல்லை. இவர் 'The Great Speaches of the World' எனும் புத்தகத்தில் இடம் பெற்றுள்ள நேருவை மக்களின் திறமையை அறியாதவர் என்று பேசுகிறார்.

மோடியும் அவர் கட்சியும் மூன்றாவது முறை இந்தியாவை ஆளுகிற அதிகாரத்தை மக்கள்தான் வழங்க வேண்டும். இன்னும் அந்த தருணம் வரவில்லை. ஆனால் அதைப் பற்றி நாடாளுமன்றத்தில் மோடி பேசியிருக்கிறார். அவரது தற்போதைய ஆட்சிக் காலத்தை 'அமிர்தகாலம்' என்று அவரே வர்ணித்துக் கொள்கிறார்.

சுதந்திரத்திற்கு எதிரானவர்கள் - ஜனநாயக தத்துவத்தின் மீது நம்பிக்கை இல்லாதவர்கள் - மதச்சார்பற்ற கொள்கையை ஏற்றுக் கொள்ளாதவர்கள் - சமதர்மத்தைப் பற்றி சிந்திக்காதவர்களின் கூடாரத்தைச் சேர்ந்த மோடி நாடாளுமன்றத்தில் பேசுகிறார். ஒவ்வொரு இந்தியக் குடிமகனும் கவனிக்க வேண்டிய பேச்சு - கருத்தில் வைத்து எதிர்வினையாற்ற வேண்டிய பேச்சு.

(1) "..... தேசத்தின் எண்ண ஓட்டத்தை அளவிட முடிகிறது. மக்களவைத் தேர்தலில் தேசிய ஜனநாயகக் கூட்டணி 400 இடங்களுக்கு மேல் வெற்றி பெறும், பா.ஜ.க. மட்டும் 370 தொகுதிகளில் வெற்றி பெறும், மத்தியில் மூன்றாவது முறையாக பா.ஜ.க. ஆட்சியமைக்கும், அதற்கு அதிகபட்சம் 100 முதல் 125 நாள்கள் மட்டுமே எஞ்சியுள்ளன.

தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசு மூன்றாவது முறையாக ஆட்சி அமைத்ததும் மிகப் பெரிய முடிவுகள் எடுக்கப்படும் - அதன் மூலம் அடுத்த 1000 ஆண்டுகள் வளர்ச்சிக்கான அடித்தளமிடப்படும்."

(2) "எங்களது அரசின் பதவி காலம் வெகு தொலைவில் இல்லை. அதைச் சிலர் மோடி 3.0 என்று அழைக்கின்றனர். மோடி 3.0 ஆட்சிக்காலத்தில் வளர்ந்த இந்தியாவுக்கான வலுவான அடித்தளத்தை அமைக்க முழு பலமும் பிரயோகிக்கப்படும். வளர்ந்த இந்தியா என்பது வெற்றி முழக்கமல்ல. அது மோடியின் உத்தரவாதம்."

மோடி தனது அபிலாஷைகளை மூன்றாவது அமைக்கப் போகும் ஆட்சியைப் பற்றி தெரிவித்து இருக்கிறார். அது ஒரு கட்சியின் நம்பிக்கையை வெளிப்படுத்துவது. அதைப் பற்றி நாம் எதுவும் சொல்ல விரும்பவில்லை. **'மிகப் பெரிய முடிவுகள் எடுக்கப்படும்' அதன் மூலம் ஆயிரம் ஆண்டுகள் வளர்ச்சிக்கு அடித்தளமிடப்படும்' என்கிறாரே அது என்ன ? அங்குதான் இந்திய வாக்காளர்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்று நாம் எச்சரிக்கை செய்ய விரும்புகின்றோம்.**

மொகலாயர்கள் பிடிக்காது மோடிக்கு! ஆனால் ஷாஜஹான் கட்டிய செங்கோட்டை மீது ஏறி சுதந்திரக் கொடியைப் பறக்கவிடுவார். ஆங்கிலத்தை இந்தியாவிலிருந்து அகற்ற வேண்டும், ஆனால் ஆங்கிலேயர் உருவாக்கிய 'அகண்ட பாரதத்தை' மீண்டும் அமைக்க வேண்டும் என்பது மோடியின் ஆசை. எந்தக் காலத்தில் 'இந்தியா' இருந்தது? 'பாரதம்' இருந்தது? 'ஆரிய வர்த்தம்' இருந்தது - 'திராவிட தேசம்' இருந்தது, அப்போதைய இந்தியாவில் 56 தேசங்கள் இருந்தன. இவற்றை வரலாறு பேசுகிறது.

**பிரதமர் 'பெரிய முடிவு' எடுக்கப்போவது என்பது அகண்ட பாரதமா? இராமராஜ்யம் என்கிற இந்து ராஜ்யமா? எது அந்த 'பெரிய முடிவு' என்பதை இந்த நாட்டுக்கு அவர் அறிவிக்கட்டும்.** பிரிட்டிஷார் 1757 இல் பிளாசி போரில் வெற்றி பெற்றதிலிருந்து தொடங்கி 1848 வரை இன்றைய இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ், பர்மா (மியான்மர்) இலங்கை ஆகிய நிலப்பரப்பை தம் ஆட்சியின் கீழ் கொண்டு வந்துவிட்டனர். வரைப்படமாக ஆங்கிலேயரால் உலகப் படத்தில் அது இடம் பெற்றுவிட்டது. அவர்கள் உருவாக்கிய இந்தியாவை 'பெரிய முடிவு' என்று இந்து ராஜ்யமாக்க 'சூசக அறிவிப்பு' செய்கிறார். இந்திய வாக்காளர்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

**இந்துக்கள் பா.ஜ.க. கட்சியைச் சேர்ந்தவர்கள் அல்ல, இந்தியர்கள் எல்லாம் பா.ஜ.க., ஆர்.எஸ்.எஸ். சங்பரிவார்கள் அல்ல, கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் 38% வாக்குகளே 'அவர்கள்' பெற்று இருக்கிறார்கள். 62% வாக்குகள் பா.ஜ.க.எதிர்ப்பு வாக்குகள். ஆகவே 'இந்தியா' பா.ஜ.க. பின்னால் இல்லை, அப்போதும் இல்லை, இப்போதும் இல்லை. ஆனால் நமது தேர்தல் முறையில் வாக்குகள் நாடாளுமன்றத் தொகுதிகளாக எண்ணிக்கை பெறுகின்றன. அதனை இந்திய வாக்காளர்கள் கணக்கில் எடுத்துக் கொண்டு செயல்பட்டால் பா.ஜ.க. வீழ்ந்து விடும். பா.ஜ.க. வீழ்த்தப்பட வேண்டிய ஒரு பாசிச அமைப்பு.**

"தீர்க்க முடியாத முரண்பாடுகள், இனங்கள், பழங்குடி மக்கள், சாதிகள், சமயக் கோட்பாடுகள், அரசுகள் ஆகியவற்றை ஒன்று சேர்த்து உருவாக்கப்பட்ட பூகோள ஒற்றுமையைத்தான் 'இந்தியா' என்று அழைக்கின்றோம்" - என்று கார்ல் மார்க்ஸ் 1857 இல் எழுதினார். இந்தக் கருத்து இப்போதும் இந்திய நாட்டில் நீடிக்கிறது. சரியாகப் பொருந்தி வருகிறது. இதைக் கொண்டு மோடியால் 'பெரிய முடிவு' எடுக்க முடியுமா? அதாவது இந்து ராஜ்யத்தை அமைத்து விட முடியுமா? இதைக் கொண்டு மோடி 1000 ஆண்டுகளுக்கான வளர்ச்சி திட்டங்களை போட்டு விட முடியுமா? மோடி ஜனநாயக சர்வாதிகாரியாகி, ஒற்றை மனிதனாக இட்லரைப் போல் சர்வாதிகாரம் செய்ய முயல்கிறார். 21-ஆம் நூற்றாண்டில் அவரால் இந்து ராஜ்யத்தை அமைத்து விட முடியாது.

விவசாய சட்டங்கள் என்னவாயிற்று? திருத்தப்பட்டு ஒன்றிணைக்கப்பட்ட தொழிலாளர் சட்டங்கள் என்னவாயின? குடியுரிமைச் சட்டத்தை இப்போது கையில் எடுத்துக் கொண்டு ஆடுகிறார்கள். அதை நிறைவேற்றி நான்கு ஆண்டுகள் ஆகிவிட்டன. இவை போன்றவை கிடப்பில் இருக்கிறபோது 'பெரிய முடிவு' என்று ஆர்.எஸ்.எஸ்., சங்பரிவார், பா.ஜ.க.வினருக்கு உணர்ச்சியை ஊட்டுகிறார்; உற்சாகப்படுத்துகிறார்; வெறிக் கூச்சலைக் கிளப்பி விடுகிறார். அதற்கான பல்லவியை நாடாளுமன்றத்திலேயே பாடுகிறார் - மோடி! மோடி பரிவாரங்களுக்கு ஒரு கருத்தை இது தொடர்பாக நாம் முன் வைக்க விரும்புகின்றோம்.



**க.திருநாவுக்கரசு**
திராவிட இயக்க ஆய்வாளர்

**"லாலா லஜபதி ராய் தீவிரவாதி அல்ல, ஆனால் கல்வி ஞானத்திலும், தெளிவான சிந்தனையை வெளிப்படுத்துவதிலும் பண்பாட்டிலும் அந்தக் குழுவிலேயே அதிகத் திறன் படைத்தவராக இருந்தார். 1925 லிருந்து 2019 வரை இருந்த ஆர்.எஸ்.எஸ். தலைவர்களிலிருந்து மிகவும் மாறுபட்டவராக ராய் இருந்தார்"** - என்று எழுதுகிறார் புகழ் பெற்ற வரலாற்று ஆய்வாளரான ஏ.ஜி.நூரானி, ஆர்.எஸ்.எஸ். தலைவர்களிலேயே என்ன அப்படியான மாறுபாடு அவரிடம் இருந்தது என்றால் இந்து ராஜ்யத்தைப் பற்றி லாலா லஜபதி ராயின் கருத்துதான். அது இது தான்:

**"நாம் ஒரே பிரிக்க முடியாத நலன்களைக் கொண்ட சகோதரர்களாய் வாழ்ந்து சுதந்திரத்திற்காகப் போராடுவோம். இந்தியா ஒரு தேசமாக வாழ்ந்து வளம் பெற வேண்டும் என்பதற்காக நாம் ஒன்றாக வாழ்ந்து மடிவோம். இந்தியா என்பது இந்து நாடோ அல்லது முஸ்லிம் நாடோ அல்ல, இரண்டும் கலந்த ஒன்றும் அல்ல, அது இந்தியாதான். இந்துக்களுக்கு நான் ஒன்று சொல்வேன்; உங்களில் யாராவது இந்த நாட்டில் ஒரு இந்து தேசத்தை உருவாக்குவோம், முஸ்லிம்களை நசுக்கிவிட்டு இந்துக்களை உச்சபட்ச அதிகாரம் கொண்டவர்களாக்குவோம் என்ற கனவிலிருந்தால் அவர்கள் முட்டாள்கள்; இன்னும் துல்லியமாகச் சொன்னால், அவர்கள் பைத்தியக்காரர்கள்; அவர்களின் பைத்தியக்காரத்தனம் இந்து மதத்தையும் அதனுடன் சேர்ந்து அவர்களின் நாட்டையும் நாசம் செய்துவிடும். அவர்கள் சொல்வதைக் கேட்டு தந்தையைக் கொல்வதற்கு ஒப்பான குற்றத்தைச் செய்தவர்களாகி விடாதீர்கள் என்று கடவுளின் பெயரால் கேட்டுக் கொள்கிறேன்"** (ஆதாரம்:ஆர்.எஸ்.எஸ். இந்தியாவிற்கு ஓர் அச்சுறுத்தல் ஏ.ஜி. நூரானி - தமிழில் ஆர்.விஜயபாஸ்கர்)

ஆர்.எஸ்.எஸ். பெருந்தலைவர்களில் ஒருவரான லாலா லஜபதி ராய் அழுத்தம் திருத்தமாக - மிக ஆழமாக - அறிவுபூர்வமாக தமது கருத்தை எடுத்து வைத்து இருக்கிறார். ஆனால் மோகன் பகாவத், உ.பி.முதல்வர் ஆதித்திய நாத், நரேந்திரமோடி பாலராமர் கோயிலை பிராண பிரதிஷ்டை செய்ததற்குப் பிறகு பேசிய பொதுக்கூட்டத்தில் அடுத்த பணி இராமராஜ்யம் அமைப்பதுதான் என்று பேசினார்கள். இந்தச் செய்தி எல்லா நாளேடுகளிலும் வெளியிடப்பட்டு இருக்கிறது. பிப்.5 ஆம் தேதியும், 7 ஆம் தேதியும் பிரதமர் மோடி நாடாளுமன்றத்தில் பேசுகிறார், 'பெரிய முடிவு' எடுக்கப்போவதாகக் கூறுகிறார். இந்தப் 'பெரிய முடிவு' என்பதற்குள் அகண்ட பாரதம் - இராமராஜ்யம் -இந்து ராஜ்யம் என்பதே அதன் நேரிய பொருளாகும். அப்படி இந்து ராஜ்யம் அமைந்தால் என்னவாகும் என்பதை லாலா லஜபதி ராய் கூறியிருப்பதை நாம் மேலே எடுத்துக்காட்டி இருக்கின்றோம். இப்போதைய நிலையில் இதற்கு உடனடி ஏற்பாடு என்பது மோடியை மூன்றாவது முறை அதிகார பீடத்தில் அமர முடியாமல் செய்வதுதான் - நம்முன் உள்ள பணியாகும். அதற்குரிய ஜனநாயகக் கடமையை ஆற்றுவதற்கு இன்னும் சில மாதங்களில் தேர்தல் வருகிறது. அதன் மூலம் மோடியை மக்கள் நிராகரிக்க வேண்டும்.

**மோடி, பண்டித நேருவையோ இந்திரா காந்தியையோ விமர்சனம் செய்வதற்கு தகுதியில்லாதவர் ஆவார். நேருவின் தியாகம் அவரின் எழுத்துகள் என்றும் நிலைத்து நிற்பவை, சுதந்திரப் போராட்ட காலத்தில் அவர் 11 ஆண்டுகளுக்கு மேல் சிறையில் இருந்தார். இந்தியாவின் பிரதமராக இருந்தவர்கள் அனைவரும் மக்களின் நினைவுகளில் நிற்பதில்லை.** மோடியும் அப்படித்தான் காலத்தால் மக்கள் நினைவுகளிலிருந்து அகற்றப்படக் கூடியவராக இருப்பார். ஆனால் நேரு அப்படி அல்ல. இந்திராவை பாகிஸ்தான் போரின் போது அவரின் நிலை பாட்டை வர்ணித்து வாஜ்பாய் 'துர்காதேவி' என்று உவமித்து கூறி இருக்கிறார். இப்படிப் புகழுக்குரிய இருவரை மோடியும் சங்பரிவார்களும் ஏன் விமர்சிக்கின்றன என்று ஆராய்ந்து பார்க்கிறபோது நமக்கு இரண்டு காரணங்கள்தான் தோன்றுகின்றன. 10.10.1948-இல் நேரு ஆர்.எஸ்.எஸ். தலைவருக்கு ஒரு கடிதம் எழுதினார். அதில் இடம் பெற்றுள்ள வாசகம் வருமாறு:-

(1)"ஆர்.எஸ்.எஸ்ஸுடன் தொடர்புடையவர்களின் உண்மையான நோக்கங்களுக்கும் பல்வேறு தளங்களில் அவர்களின் செயல்பாடுகளுக்கும் மேற்கொண்டு இருக்கும் வழிமுறைகளுக்கும் அது அறிவித்துள்ள நோக்கங்களுக்கும் சிறிதும் தொடர்பில்லை எனத் தோன்றுகிறது. அதன் உண்மையான நோக்கங்கள் இந்திய நாடாளுமன்றத்தின் முடிவுகளுக்கும் நடைமுறைக்கு வரவிருக்கும் இந்திய அரசியலமைப்புச் சட்டத்திற்கும் முற்றிலும் எதிரானவை என்று தோன்றுகிறது. எங்களுக்குக் கிடைத்த தகவலின் படி, அதன் நடவடிக்கைகள் தேச விரோதமானவை; பல நேரங்களிலும் சதித்தன்மை கொண்டவை; வன்முறையானவை.

குறித்துக் கொள்ளுங்கள், இந்தியாவின் அபாயம் கம்யூனிசம் அல்ல, வலதுசாரி இந்து மதவாதம் தான்" (என்று நேரு பத்திரிகையாளர் பேட்டியில் கூறியிருந்ததை வெளியுறவுச் செயலாளராக இருந்த Y.D. குண்டேவியா தனது நூலில் குறிப்பிட்டு இருக்கிறார்)

(2) இந்திரா காந்தி மதச்சார்பின்மையை அரசியல் அமைப்புச் சட்டத்தில் இணைக்கக் காரணமாக இருந்தவர்.

இவ்விரண்டு காரணங்களால் நேருவும் இந்திரா காந்தியும் மோடிக்குப் பிடிக்காமல் இருக்கலாம், ஆனால் நாடு அவர்களை மறக்காது, ஆக, மோடியின் நாடாளுமன்றப் பேச்சு 'பெரிய முடிவு -ஆயிரம் ஆண்டு திட்டம்' என்பது அவர்களின் இயக்கத்தினருக்கு சைகை காட்டி உணர்ச்சியும் உற்சாகத்தையும் ஊட்டுகிறார். அவர்களுக்கு எதிரணியில் இருக்கிற நாம் ஒன்று திரண்டு ஆர்.எஸ்.எஸ்., பா.ஜ.க. - சங் பரிவார் கூட்டத்தைத் தோற்கடிக்க வேண்டும். அதுதான் ஓர் அம்ச திட்டமாக இருக்க வேண்டும்.

●

---

### கே.கே.செல்லப்பாண்டியன் தலைமை! ஆ.செந்தில் வரவேற்புரை!

## புதுக்கோட்டை நகர தி.மு.க. சார்பில் மாபெரும் பொதுக்கூட்டம்!

### ஆர்.எஸ்.பாரதி - அமைச்சர்கள் எஸ்.ரகுபதி - சிவ.வீ.மெய்யநாதன் மற்றும் சூர்யா வெற்றிகொண்டான் சிறப்புரை!

*புதுக்கோட்டை,பிப்.12-*

*புதுக்கோட்டை நகர தி.மு.க. சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா மற்றும் கழக இளைஞரணி செயலாளர் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாள் விழா மாபெரும் பொதுக்கூட்டம் இன்று (12.02.2024 - திங்கட்கிழமை), மாலை 6.00 மணியளவில் புதுக்கோட்டை திலகர் திடலில் புதுக் கோட்டை வடக்கு மாவட்டச் செயலாளர் வழக்கறிஞர் கே.கே. செல்ல பாண்டியன் தலைமையில் நடைபெறுகிறது. புதுக்கோட்டை நகர தி.மு.க. செயலாளர் ஆ.செந்தில் வரவேற்புரை ஆற்றுகிறார்*

*கழக அமைப்பு செயலாளர் முன்னாள் மாநிலங்களவை உறுப்பினர் ஆர்.எஸ். பாரதி, சட்டத்துறை அமைச்சரும், புதுக் கோட்டை தெற்கு மாவட்டச் செயலாளருமான எஸ்.ரகுபதி, சுற்றுச் சூழல் துறை அமைச்சர் சிவ. வீ.மெய்யநாதன், தலைமை கழகவழக்கறிஞர் சூர்யா வெற்றிகொண்டான் ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றனர்.*

*இந்நிகழ்வுகளில் எம்.எம். அப்துல்லா எம்.பி. டாக்டர் வை.முத்துராஜா எம்.எல்.ஏ, பெரியண்ணன் அரசு, கவிச்சுடர் கவிதைப்பித்தன், அஞ்சுகா மீனாட்சிசுந்தரம், த.சந்திரசேகரன், பி.டி.அரசகுமார், அரு.வீரமணி, சுப.சரவணன், வி.என்.மணி, புதுகை விஜயா, திலகவதி செந்தில், எம்.லியாகத் அலி, கே.ஆர்.என்.போஸ், சு.சண்முகம், டாக்டர் எஸ். ஆர்.அண்ணாமலை, எம்.எஸ். அசோக்பாண்டியன், கீரை. தமிழ்ராஜா, க.மதியழகன், பெ.ராஜேஸ்வரி, எஸ்.எஸ். கருப்பையா, தவ . பாஞ்சாலன், தென்னலூர் எம்.பழனியப்பன், ஜெயலெட்சுமி தமிழ்ச்செல்வன், மு.க.ராமகிருஷ்ணன், டாக்டர் மு.க.முத்துக்கருப்பன், சக்தி ராமசாமி, எஸ்.திருஞானசம்பந்தம், என்.சாத்தையா, இராசு.சந்தோஷ், க.நைனாமுகமது, சி.ஆர்.வி. சித்ரா, ஆர். செல்லத்துரை, சையது முகம்மது, பூங்குடி எம்.சிவா, கே.கணபதி, எம்.வேலுச்சாமி, பி.சண்முகம், ரெ.தங்கம், ஆர். பாலகிருஷ்ணன், ஏ.ராமலிங்கம், உரக்கடை எம்.கருப்பையா, ப.ரெங்கராஜன், எம்.மணிவேலன், முத்தழகு பழனிவேலு, சேட்டு (எ) ஷாஜகான், இராய. முத்துக்குமார், எம்.எம்.பாலு, மு.ராஜதுரை, மு.க. அறிவுடை நம்பி, எம்.காதர்கனி, ஆ. ஜேம்ஸ், வை.கோ.ராஜன், மு.கலியமூர்த்தி, க.ரெங்கராஜ், செந்தாமரை பாலு, மு.பி.மணி, இராம. செல்வராஜ், டாக்டர் சி. குறிஞ்சி வாணன், டி. அப்புக்காளை, தவசுமணி, மணிமொழி மனோகரன், சி. அரங்கநாயகம், மாலா ராஜேந்திரதுரை, பி.சின்னையா, மு. கலைஞர் கருணாநிதி, சா. மூர்த்தி, செ.கணேஷ், மஜீத் முபாரக், எஸ்.கமலா, புதுநகர் குமார், எஸ்.வி.ஆர்.ஜெய் ஸ்டாலின், க.கவிவேந்தன், ஒன்றிய கழகச் செயலாளர்கள் கே.எஸ்.சந்திரன், என். சேட்டு, எம்.பரமசிவம், மு.பி.ம. சத்தியசீலன், மா.தமிழ்அய்யா, ஆர்.ஆர்.எஸ்.மாரிமுத்து, ஓ.எஸ்.வெங்காசலம், வெ.முத்து கிருஷ் ணன். ஆ. இளங்குமரன், சி.சண்முகம், ஆர்.சாமிநாதன் கே.பி.அய்யப்பன், பேரூர் கழகச் செயலாளர்கள் வை. விஜயக்குமார், உ.முருகேசன், பா. அண்ணாத்துரை, எம். எஸ்.ஏ.முகமது ரிசா,*

*ஒன்றிய பெருந்தலைவர்கள், துணைப் பெருந்தலைவர்கள், மாவட்ட கவுன்சிலர்கள், பேரூராட்சி தலைவர்கள் பாண்டிச் செல்வி கே.ஆர். என்.போஸ், காமு மு.பி.மணி, பி.சின்னையா, லதா இளங்குமரன், கல்யாணி மாரிமுத்து, சித்ரா ரவிச்சந்திரன், த.செல்வம், நா. ஸ்டாலின், ராஜேஸ்வரி செந்தில்குமார், சாந்தி தங்கசிங்கம், கை. பழனிச்சாமி, டி.ஜெய மீரா ரவிக்குமார், வி.சகுந்தலா வைர வன், எம்.ஏ.எம். இம்தியாஸ், இ.செந்தில் ராஜா, எம்.நைனா முகமது, கழக முன்னோடிகள் மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் கே.எஸ்.ச. இளையச்சூரியன், புத்தாம்பூர் எம். சுப்பையா, டி.எம்.ஆர்.ராம மூர்த்தி, டி.சூசைராஜ், ஆர். டி.ஆர்.ராமசாமி, அ.பிரபா, பொன்.பாரிவள்ளல், வி.என். எம்.பாலு, வி.ஜி.ஆர். மணி வண்ணன், எம்.செந்தில்குமார், வே. ராஜேஸ், எம். ராஜா,*

*கா.இளவரசன், என். வீரைய்யா, மு. இளஞ்சேரன் முத்துசாமி மற்றும் மாவட்ட, ஒன்றிய , நகர, பேரூர், வட்ட, கிளைக் கழக நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் கலந்து கொண்டு சிறப்பிக் கின்றனர்.*

*முடிவில் நகர அவைத் தலைவர் அ.ரெத்தினம் நன்றி கூறுகிறார்.*



திருவள்ளூர் மேற்கு மாவட்டம் திருவள்ளூர் நகரம் 6,3,23, ஆகிய வார்டுகளில் கிளை கழக செயற்குழு கூட்டம் நடைபெற்றது. இதில் மாவட்ட கழக செயலாளரும் சட்டமன்ற உறுப்பினருமான திருத்தணி எஸ். சந்திரன் எம்.எல்.ஏ. கலந்துகொண்டு வருகின்ற நாடாளுமன்றத் தேர்தலில் பணிகள் குறித்தும் மார்ச் 1ஆம் தேதி கழகத் தலைவர் அவர்கள் பிறந்த நாளை கொண்டாடுவது மற்றும் பல்வேறு கழக வளர்ச்சிப் பணிகளை குறித்து ஆலோசனைகள் வழங்கினார். உடன் நகர செயலாளர் சி.சு.ரவிச்சந்திரன், முன்னாள் நகர மன்ற தலைவர் பொன்.பாண்டியன், நிர்வாகிகள் தி.ஆ.கமலக்கண்ணன், இ.குப்பன், ராஜேஸ்வரி கைலாசம், வார்டு செயலாளர்கள் இ.கோட்டீஸ்வரன், டி.செல்வின், டி.ஆர்.திலீபன், கு.பிரபாகரன்,அ.பவளவண்ணன், ஜி.பாண்டியன், ஜி.எம்.கிஷோர், கே.வீனஸ், வி.சங்கர், ஆர்.சசிகுமார், அயூப் அலி, வசந்தகுமார், நாகலட்சுமி அழகிரி, எஸ் குமார், அ.அமர்நாத், ஆர்.ராஜி, உள்பட பலர் உள்ளனர்.

---

### செம்பனார்கோயிலில்

## ரூ.42 லட்சம் மதிப்பில் புதிய கட்டிடம் திறப்பு!

*மயிலாடுதுறை, பிப்.12-*

*மயிலாடுதுறை மாவட்டம் செம்பனார்கோயில் தெற்கு ஒன்றியம் எடுத்துக்கட்டி ஊராட்சியில் பூம்புகார் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியில் ரூ.42 லட்சம் மதிப்பில் புதிய கட்டிடங்கள் திறந்து வைக்கப்பட்டன. விழாவிற்கு எம்.எம்.சித்திக், மு.ஞானவேலன், நந்தினிஸ்ரீதர், ரபியாநர்கிஸ் பானு அப்துல் மாலிக் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மஞ்சுளா வரவேற்றார்.*

*விழாவிற்கு மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளர், பூம்புகார் சட்ட மன்ற உறுப்பினர் நிவேதா எம்.முருகன் தலைமை தாங்கி புதிய கட்டிடங்களை திறந்து வைத்து பேசினார். நிகழ்ச்சியில் செம்பனார்கோயில் தெற்கு ஒன்றியக் கழகச் செயலாளர் எம்.அப்துல் மாலிக், தகவல் தொழில் நுட்ப அணி தஞ்சை மண்டல பொறுப்பாளர் பி.எம்.ஸ்ரீதர், ஒன்றியக் குழு துணைத்தலைவர் பாஸ்கர், வட்டரா வளர்ச்சி அலுவலர் மீனா, மாவட்ட பிரதிநிதிகள் ஈச்சங்குடி இளங்கோ, கே.எஸ்.கருணா, ஏ.பி.ராஜா, ஒன்றிய நிர்வாகிகள் சிவக்குமார், முத்துராஜா, பாஸ்கர், கந்தசாமி, நெசவாளர் அணி துணை அமைப்பாளர் பாண்டு, மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் வினோத்பாண்டியன், மாவட்ட சிறுபான்மை அணி துணைஅமைப்பாளர் எம்.எம். முசாதிக், மாவட்ட மீனவர் அணி துணை அமைப்பாளர் செல்வம், ஒன்றிய குழு உறுப்பினர்கள் ஜெயந்திகார்த்தி, அறிவழகன், பரிதாஇளங்கோவன், ஊராட்சி மன்றத் தவைர்கள் சிவக்குமார், சம்சாத்ரபீக், பைலட், சங்கீதாராஜா மற்றும் ஒன்றிய, கிளைக் கழக நிர்வாகிகள், ஊராட்சி மன்ற துணைத்தலைவர், உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.*



தலைமைச் செயலகத்தில், நேற்று முன்தினம் (10.02.2024) தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா, மற்றும் ஒன்றிய அரசின் குடிநீர் வழங்கல் துறையின் அரசு செயலாளர் திருமதி. வினித் மகாஜன், ஆகியோர் தலைமையில், ஜல் ஜீவன் இயக்கம் மற்றும் தூய்மை பாரதம் திட்டம் (கிராமப்புறங்கள்) ஆகிய திட்டங்களில் ஒப்புதல் வழங்கப்பட்ட பல்வேறு திட்டங்களின் செயல்பாடுகள் குறித்தும், வரும் ஆண்டில் இத்திட்டங்களின் கீழ் மேற்கொள்ளப்படும் பணிகள் குறித்தும் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் ஒன்றிய அரசின் கூடுதல் செயலாளர், இணைச் செயலாளர், இயக்குநர்கள் மற்றும் தமிழ்நாடு அரசின் நெடுஞ்சாலைத் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறையின் அரசு முதன்மைச் செயலாளர், ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சித் துறையின் அரசு முதன்மைச் செயலாளர், ஊரக வளர்ச்சி இயக்குநர், தமிழ்நாடு குடிநீர் வழங்கல் துறையின் உயர் அலுவலர்கள் கலந்துகொண்டார்கள்.





தி.மு.க. இளைஞரணிச் செயலாளரும், அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாளை முன்னிட்டு கோவை வடக்கு மாவட்ட திமுக விளையாட்டு மேம்பாட்டு அணி சார்பில் மாபெரும் கிரிக்கெட் போட்டி மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா கோவைப்புதூரில் நடந்தது. இதில் விளையாட்டு மேம்பாட்டு அணி செயலாளர் தயாநிதி மாறன் எம்.பி. பரிசுகள் வழங்கி பேசினார். அருகில் சண்முகசுந்தரம் எம்பி, மாவட்ட செயலாளர் தொ.அ.ரவி, தொண்டாமுத்தூர் தொகுதி பொறுப்பாளர் சிந்து ரவிச்சந்திரன், துணை மேயர் வெற்றிச்செல்வன் உள்ளிட்டோர் உள்ளனர்.

தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி

## வட்டி 8.25 சதவீதமாக உயர்வு!

சென்னை, பிப்.12-

தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை அமைச்சர் பூபேந்திர யாதவ் தலைமையில் தொழிலாளர் வருங்கால வைப்புநிதி அமைப்பின் (இபிஎஃப்ஓ) மத்திய வாரியக் குழுவின் 235 ஆவது கூட்டம் சனிக்கிழமை நடைபெற்றது. அக்கூட்டத்தில் அமைப்பைச் சேர்ந்த சுமார் 8 கோடி சந்தாதாரர்களுக்கு 2023-24 நிதியாண்டுக்கான வட்டியை 8.25 சதவீதமாக உயர்த்தி வழங்க நிதியமைச்சகத்துக்கு பரிந்துரை அளிக்கப்பட்டது.

நிதி அமைச்சகம் ஒப்புதல் அளித்ததும் வட்டி உயர்வு குறித்த அரசின் அதிகாரபூர்வ அறிவிக்கை வெளியிடப்படும். அதன்பின் உறுப்பினர்களின் கணக்கில் உயர்த்தப்பட்ட வட்டியை இபிஎஃப்ஓ செலுத்தும்.

கடந்த 2021-22ஆம் ஆண்டில் வருங்கால வைப்பு நிதிக்கான வட்டி 8.1சதவீதமாகவும் 2022-23-ஆம் ஆண்டில் 8.15 சதவீதமாகவும் இருந்தது. நிகழாண்டு ஏப்ரல் மே மாதங்களில் மக்களவைத் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில் வட்டி சதவீதம் உயர்த்தப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

எடப்பாடி பழனிச்சாமி, வேலுமணி வீட்டில் சி.பி.ஐ., ஈ.டி., ஐ.டி. ரெய்டு செல்லாததற்கு

# அ.தி.மு.க. - பா.ஜ.க. இடையே ரகசிய கூட்டணி தொடர்கிறது!

## தயாநிதி மாறன் எம்.பி. பேச்சு!

கோவை, பிப். 12-

எடப்பாடி பழனிச்சாமி, வேலுமணி வீட்டில் சி.பி.ஐ., ஈ.டி., ஐ.டி. ரெய்டு செல்லாததற்கு அ.தி.மு.க. - பா.ஜ.க. இடையே ரகசிய கூட்டணி தொடர்கிறது என்று தயாநிதி மாறன் எம்.பி. தெரிவித்து உள்ளார்.

கோவை வடக்கு மாவட்ட திமுக விளையாட்டு மேம்பாட்டு அணி சார்பில் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாளை முன்னிட்டு 64 அணிகள் பங்கேற்ற மாபெரும் கிரிக்கெட் போட்டி நடத்தப்பட்டது.

இதன் இறுதிப் போட்டி கோவைப்புதூர் மைதானத்தில் நேற்று முன்தினம் நடந்தது. போட்டியை தி.மு.க. விளையாட்டு மேம்பாட்டு அணி செயலாளரும், மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினருமான தயாநிதி மாறன் துவக்கி வைத்தார். திருப்பூர் மெக்ஸிம் நைஸ் மற்றும் கோவைப்புதூர் ஸ்மால் பாய்ஸ் அணிகளுக்கு இடையே போட்டி நடந்தது.

இந்த போட்டியை தயாநிதி மாறன் எம்.பி. கண்டு ரசித்தார். இதில், திருப்பூர் அணி நிர்ணயிக்கப்பட்ட இலக்கை எட்டி வெற்றி பெற்றது.

கோவைப்புதூர் ஸ்மால் பாய்ஸ் அணி இரண்டாம் இடம் பிடித்தது.

இதனை தொடர்ந்து கிரிக்கெட் போட்டி பரிசளிப்பு விழா மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நடந்தது. தயாநிதி மாறன் எம்.பி. வெற்றி பெற்ற அணி வீரர்களுக்கு பரிசு மற்றும் கோப்பைகளை வழங்கினார்.

இதில், முதல் பரிசாக 1.75 லட்சம் திருப்பூர் அணிக்கும், இரண்டாவது பரிசு வென்ற கோவைப்புதூர் அணிக்கு 75 ஆயிரம் பரிசும், 3-ஆம் பரிசு வென்ற கோவை சகல அணி மற்றும் 4வது பரிசை வென்ற உடுமலை வெற்றி அணியினருக்கு தலா 25 ஆயிரம் வழங்கப்பட்டது. மேலும், வீரர்களுக்கு கிரிக்கெட் கிட் பேக் வழங்கப்பட்டது. தொடர்ந்து பெண்களுக்கு தையல் இயந்திரங்கள் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டன. இதில், கோவை வடக்கு மாவட்ட கழக செயலாளர் தொண்டாமுத்தூர் ரவி, பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர் சண்முகசுந்தரம், வடக்கு மாவட்ட திமுக விளையாட்டு மேம்பாட்டு அணி மாவட்ட அமைப்பாளர் தியாகராஜன் உள்பட பலர் கலந்துகொண்டனர்.

நிகழ்ச்சியில், தயாநிதி மாறன் எம்.பி. பேசியதாவது:

கிரிக்கெட் போட்டி மட்டுமின்றி தையல் மிஷின் அளிப்பது உள்ளிட்ட 10 நிகழ்ச்சிகளை உள்ளடக்கிய நிகழ்ச்சியாக இதனை தொண்டாமுத்தூர் ரவி மாற்றியுள்ளார். அவருக்கு நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன். அவர் செந்தில் பாலாஜியின் சிஷ்யன் என நிரூபித்துள்ளார். செந்தில் பாலாஜி மீது வேண்டும் என்றே பொய்யான வழக்குகள் போட்டுள்ளனர். அவர் சிறையில் இருந்தால் கோவை மாவட்டத்தில், அதுவும் கொங்கு மண்டலத்தில் பா.ஜ.க.வும், அ.தி.மு.க.வும் வெற்றி பெறலாம் என நினைத்துள்ளனர். ஆனால், அவர் சிறையில் இருந்தாலும் அவருக்கு வெற்றியை கொங்கு மக்கள் காணிக்கையாகத் தருவார்கள் என நம்புகிறேன்.

வேலுமணியை நான் குறை சொல்லவில்லை. உங்கள் தலைமை எடப்பாடி பழனிசாமி. தேர்தல் வரப்போகிறது. ஒரு மாசம் வரைக்கும் நீங்க யாருடன் கூட்டணி வைத்து இருந்தீர்கள். நீங்கள் பா.ஜ.க. வுடன் கூட்டணி வைத்திருந்தபோது கிட்டதட்ட 2016-2019 வரை 40 எம்.பி.களை அ.தி.மு.க. வைத்திருந்தது. இன்று பொள்ளாச்சி எம்.பி. சண்முகசுந்தரத்தை பார்த்து "நீங்கள் என்ன செய்தீர்கள்?" என கேள்வி எழுப்புகிறீர்கள்.

ஆனால், 5 ஆண்டுகளில் நீங்கள் வாய் திறந்து உள்ளீர்களா?. பொள்ளாச்சி எம்.பி. இதுவரை 216 கேள்விகளை கேட்டுள்ளார். நீங்கள் யாராவது தமிழ்நாட்டின் உரிமைக்காக ஒரு கேள்வியாவது கேட்டு உள்ளீர்களா? இப்போது, தமிழ்நாட்டில் இருந்து 38 எம்பிக்கள் சென்று ஒன்றிய அரசை போட்டி போட்டுக்கொண்டு கேள்வி கேட்டு கொண்டு இருக்கிறோம்.

### தமிழ்நாடு தலைநிமிர்ந்து நிற்கிறது

கடந்த நாடாளுமன்றத்தில் தமிழ்நாட்டில் இருந்து இதுபோல் யாரும் கேள்வி கேட்டது இல்லை. யாரும் தமிழ்நாட்டை திரும்பிக் கூட பார்க்கவில்லை. ஆனால், இந்த முறை தி.மு.க. ஆட்சிக்கு வந்த பிறகு நாடாளுமன்றமே தலைகீழாக இருக்கிறது. தமிழ்நாடு தலைநிமிர்ந்து நிற்கிறது. இதற்கு காரணம் தமிழ்நாடு முதல்வர் மு.க. ஸ்டாலின்தான். அவர் பதவி ஏற்கும்போது தமிழ்நாட்டை இந்தியாவின் முதல் மாநிலமாக மாற்ற வேண்டும் என கூறினார். அதேபோல் தலைசிறந்த முதலமைச்சர் என்றால் எனக்கு பெருமை இல்லை. தமிழ்நாடு முதல் மாநிலமாக இருக்க வேண்டும் என கூறியவர். அவர் கூறிய மூன்று மாதத்தில் இந்தியா டுடே கூறுகிறது தமிழ்நாடு சிறந்த மாநிலம் என்று.

### முதல்வரின் முயற்சி

முதல்வரின் முயற்சியால் உலக முதலீட்டாளர்கள் தமிழ்நாட்டுக்கு வந்து தொழில் துவங்கி லட்சக்கணக்கான பணத்தை இங்கு முதலீடு செய்து வருகின்றனர். இதனை திறம்பட செய்து உள்ளார்.

உதயநிதி ஸ்டாலின் விளையாட்டு துறை அமைச்சராக வந்த பிறகு உலக அளவில் செஸ் போட்டி, கேலோ இந்தியா நடத்தி உள்ளார். கேலோ இந்தியா போட்டி சென்னை, திருச்சி, கோவை, மதுரை என 4 நகரங்களில் நடந்தது.

இதன் பயன் யாருக்கு என்றால் உங்கள் குழந்தைக்குதான் கிடைக்கும். இதனால், எந்த போட்டிக்கு எங்கு பயிற்சி என்பதை குழந்தைகளால் கண்டறிய முடிகிறது. அவர்கள் ஒலிம்பிக் செல்லும் வகையில் பயிற்சி அளிக்கப்படுகிறது. கேலோ இந்தியா பதக்கப் பட்டியலில் உதயநிதி ஸ்டாலின் பொறுப்பேற்ற பிறகு இரண்டாவது இடத்திற்கு முன்னேறி வந்துள்ளது. தமிழ்நாடு அனைத்து துறைகளிலும் சிறந்து விளங்கி வருகிறது.

### மதவெறி கலாச்சாரம்

நாம் யாருக்கும், எந்த மொழிக்கும், எந்த மதத்திற்கும் எதிரிகள் இல்லை. அனைவரும் சமம். பிறப்பால் யாரும் உயர்ந்தவர் இல்லை. தாழ்ந்தவர் இல்லை. ஆனால், கடந்த 10 ஆண்டுகளாக பா.ஜ.க.வின் மோடி அரசு மத வெறி அரசியலில் ஈடுபட்டு வருகிறது.

இந்த மதவெறி கலாசாரத்தை பயன்படுத்தி பிரிக்கலாம் என நினைக்கின்றனர். ஏற்கனவே, இரண்டு முறை தேர்தலிலும் அதற்கு சரியான பதில் பொதுமக்கள் அளித்துள்ளீர்கள். தமிழ்நாட்டில் மதவெறிக் கலாசாரம் நடக்கவே நடக்காது. ஆனால், நமக்கு வர வேண்டிய வரி பணத்தில் ரூ.1 ஒன்றிய அரசுக்கு கொடுத்தால் ரூ.29 பைசா தான் தமிழகத்திற்கு வருகிறது.

ஆனால், பா.ஜ.க. ஆட்சி செய்யும் மத்திய பிரதேச அரசு ஒரு ரூபாய் கொடுத்தால், அவர்களுக்கு ஒன்றிய அரசு ரூ.2.17 காசு அளிக்கிறது. நம் வரிப்பணத்தில் அவர்கள் செழிக்கிறார்கள். அதனை நாம் தவறு என கூறவில்லை. நிதி பங்கீட்டில் அனைவருக்கும் பயனடைந்து மொத்தமாக வர வேண்டும். ஆனால், நமக்கு வர வேண்டிய பணத்தை தராமல் வேண்டும் என்றே பா.ஜ.க. அரசு இழுத்தடிக்கிறது. தமிழ்நாடு முன்னேறக்கூடாது. தமிழ்நாடு முன்னேறினால் அவர்களுக்கு தாங்காது. எனவே, நமது எதிரி பா.ஜ.க. தான். அதற்கு துணை போவது அதிமுக தான்.

தெளிவாக கோவை பெண்கள் சிந்திப்பார்கள். உங்கள் சிந்தனைக்கு விடுகிறேன். செந்தில் பாலாஜி மீது பொய் வழக்கு போட்டு கைது செய்தனர். இன்றைக்கு அ.தி.மு.க.வின் எடப்பாடி பழனிச்சாமி, வேலுமணி மீது பல வழக்குகள் உள்ளன. கூட்டணி விட்டு வெளியில் வந்தும் இவர்களின் மீது சிபிஐ, ஈடி, வருமான வரித்துறையினர் யாராவது சென்றார்களா?. ஏன் செல்லவில்லை என்றால் அ.தி.மு.க., பா.ஜ.க. இடையே ரகசிய கூட்டணி இன்னும் தொடர்கிறது என்பதை புரிந்துகொள்ள வேண்டும்.

சண்டை போடுற மாதிரி போடுவோம், விவாகரத்து செய்வதுபோல செய்வோம். ஆனால் ஒரே அறையில்தான் இருப்போம் என்பது போன்றது. அவர்கள் உங்களை ஏமாற்றப் பார்க்கிறார்கள். நீங்கள் மக்கள் ஏமாறக்கூடாது. மீண்டும் சண்முகசுந்தரத்திற்கு வாய்ப்பு அளித்தால் அவரை வெற்றி பெற வைக்க வேண்டும்.

இவ்வாறு தயாநிதி மாறன் எம்.பி. கூறினார்.




முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு, இராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் ஐட்ரீம் இரா.மூர்த்தி ஏற்பாட்டில், இராயபுரம் கிழக்கு பகுதி, காசிமேடு திரௌபதி அம்மன் கோவில் அருகில் நடைபெற்ற நிகழ்ச்சியில் 2500 பேருக்கு நலத்திட்ட உதவிகளை சென்னை வடக்கு மாவட்ட செயலாளர் தா.இளைய அருணா, கலாநிதி வீராசாமி எம்.பி., இராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் ஐட்ரீம் இரா.மூர்த்தி ஆகியோர் வழங்கினர். உடன் கிழக்கு பகுதிச் செயலாளர் இரா.செந்தில்குமார், வடடச் செயலாளர் ஆர்.வி.கணேஷ், மாவட்ட, பகுதி, வட்டக் கழக நிர்வாகிகள், அணிகளின் நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் திரளாக பங்கேற்றனர்.

# கல்விக்கண் திறந்தவர் காமராசர்; கணினிக்கண் திறந்தவர் கலைஞர்!



கல்வி பெறுவதின் அருமை பெருமைகளைச் சொல்லி மாளாது. "யாதானும் நாடாமால் ஊராமால் " என்பதனால் கற்றோர்க்கு, "யாதும் ஊரே யாவரும் கேளிர் " என்னும் உலகக் கண்ணோட்டம் எளிதில் கைவரப் பெற்று, மானுட சமூகம் முழுவதையும் ஆரக் கட்டி அணைத்திடும் ஆழ்ந்த மன வளத்தைப் பெற்றிருந்தோர் பண்டைத் தமிழர்.

இடைக் காலத்தில், இனம் - மொழிப் பெருமை அற்றவர் தம் ஆதிக்கத்தினால், கல்வியின் அருமையை அறியாது, நடைப் பிணமாய் இருந்துவந்த தமிழினத்தை, கல்வியின் முதன்மை இன்பத்தைச் சொல்லித் தட்டி எழுப்பி உயிர் கொடுத்தவர் தந்தை பெரியார்; ஆட்சி அதிகாரம் கிட்டியதும், ஊர் தோறும் பள்ளிகளைக் கட்டி, கல்வி வாசனையையே அறியாதிருந்த பிற்படுத்தப்பட்ட தாழ்த்தப்பட்ட சமூகங்களின் கண்களைத் திறந்தவர் கர்மவீரர் காமராசர்.



**பெருந்தலைவர் காமராசர் தந்த பள்ளிக் கல்வி மட்டும், நாளும் வளர்ந்துவரும் இன்றைய உலகில் போதாதென்றுணர்ந்து, முத்தமிழறிஞர் கலைஞர், பள்ளிக் கல்வியின் அடுத்த கட்டமாக உயர் கல்வியை வழங்கிப் பரப்பியதுடன், கணினிக் கல்வியையும் கனிவுடன் இணைத்து வழங்கி, தமிழறிவை மெருகேற்றித் தக்கபடி நவீன மயப்படுத்தி, தமிழினம் உய்யவும் உயரவும் உரிய வழி அமைத்துத் தந்தார்.**

**கலைஞரைத் தொடர்ந்து வந்து, திக்கெலாம் போற்றும் 'திராவிட மாடல்' ஆட்சி நல்கிவரும் சாதனைச் செல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமிழ் இனத்தை மேலும் உயர்த்திட, கணினிக் கல்வியை மொழி தொழில் நுட்பம் எனும் முன்னேற்றத்திற்கான அடுத்த உயரத்திற்கு இட்டுச் செல்லும் அரிய பணியை, இந்தியாவிலேயே முதன் முதலாக 'பன்னாட்டுக் கணித்தமிழ் 24' என்னும் மாநாடு நடத்திச் செயலூக்கம் காட்டியிருக்கிறார்.**

மண்ணுக்குள் புதைந்திருக்கும் வேர்கள் கண்ணுக்குத் தெரியாது. வளர்ந்து மரமாகி நிழல்தரும் காலத்திலேதான், எண்ணத்தில் இதந்தரும் குளிர்ச்சி வீசும். அதைப் போல, கலைஞர் உள்ளங்கையில் உலகத்தைக் காட்டிட, கணினிக் கண்களைத் திறந்த போது, பலருக்குத் தெரியாது, அது மகாவிருட்சமாக வளரும் என்பது. நமது திராவிட நாயகர் தற்போது நடத்தியிருக்கும் 'பன்னாட்டுக் கணித் தமிழ் 24' மாநாடும், நெருங்கும் எதிர் காலத்தில் வாழ்வியல் வாய்ப்புகளைப் பெருக்கி, வளம்பல கொழித்திடச் செய்யும்.

**" மானுட சமுதாயத்தின் சகல துறைகளையும், தொழில் வளர்ச்சியின் ஒவ்வொரு பிரிவையும், தகவல் தொழில் நுட்பம் குறிப்பாக 'e' என்ற ஒரை முத்து மந்திரம் ( electronic) பின்னிப் பிணைந்து, வளர்த்து வருகிறது" என்ற கலைஞரின் 2000 ஆம் ஆண்டுக் கருத்து, அவர் எவ்வளவு பெரிய தொலை நோக்குச் சீலர் என்பதைக் காலம் உணர்த்தி வருகிறது. நிகழ் காலத்துடன் எதிர் காலத்தை நிரல்படக் கலந்து வழங்கும் வித்தையைக் கற்ற வித்தகர் கலைஞர்.**



கலைஞர் அப்போது காட்டிய சாகசத்தை, அவர் வழி நடக்கும் அருமந்தத் தலைவர் மு.க.ஸ்டாலின், இப்போது காட்டியிருக்கிறார்.

Natural Language Processing Tools, Artificial Intelligence, Machine Learning, Machine Translation, Sentimental Analysis, Large Language Model, Automatic Speech Recognition போன்ற உயர் தொழில் நுட்பங்களை நம் தாய் மொழித் தமிழில் உருவாக்கிப் பயன்படுத்திட நமது முதல்வர் முயற்சிகளை மேற்கொண்டுள்ளார். அந்தத் தொழில் நுட்பங்களை, விதைகளாகத் தமிழ் மண்ணில் ஊன்றியிருக்கிறார். விரைந்துவரும் எதிர்காலத்தில் அவை, ஆக்கப் பூர்வமான விளைவுகளை வளர்த்துப் பெரிதாக்கும்; அப்போது தெரியும், கலைஞரையொட்டி வாழையடி வாழையென வரும் தொலை நோக்கு அணுகு முறையாளர் அவர் என்பது.

கலைஞர் 1999 ல் நடத்திய " தமிழ்நெட் 99 "என்ற மாநாட்டில்தான், தமிழ் மென் பொருள் வளர்ச்சியில் அதுவரை குறிப்பிடத் தக்க முன்னேற்றம் ஏற்படாமல் இருந்த நிலைமையை மாற்றிட, தமிழ் விசைப் பலகையும், தமிழ்க் குறியீடுகளும் தரப்படுத்தப்பட்டு அறிவிக்கை செய்யப்பட்டன. அந்த மாநாட்டின் அடுத்தடுத்த கட்டங்களாக, 2008 ல் மாநிலத் தரவு மையத்தையும், தமிழகம் முழுவதும் உள்ள அரசு அலுவலகங்களை இணைக்கும் பெரும் பரப்பு வலை அமைப்புத் திட்டத்தையும், அரசு மேல்நிலைப் பள்ளிகளில் கணினிக் கல்வியையும் தொடங்கி, நிர்வாக நேர்த்திக்கும், தமிழ் நாட்டு இளைஞர்களின் ஒளிமயமான எதிர்காலத்திற்கும், கால்கோள் நடத்தி வைத்தார் கலைஞர்.

**1972 ஆம் ஆண்டிலேயே முதல்வர் கலைஞர், மின்னணுப் பிரிவை உருவாக்கினார். மின்னணுத் தொழில்களை வளர்த்திடும் நோக்கில் 1975 ஆம் ஆண்டில், மின்னணுத் தொழில்கள் கழகம் தொடங்கப்பட்டது. தகவல் தொழில் நுட்பவியல் துறையைத் தனித் துறையாக உருவாக்கிய கலைஞர், தமது தலைமையில் பணி முனைப்புக் குழு ( Task Force ) ஒன்றையும் ஏற்படுத்தினார். தகவல் தொழில் நுட்பக் கொள்கை வகுத்த முதல் மாநிலம் என்ற பெருமையைத் தமிழ்நாடு ஈட்டியது. இப்படி எண்ணற்ற காரியங்களை அடுக்கடுக்காக நிறைவேற்றியவர் கலைஞர்.**

இன்றைய உலகம், செயற்கை நுண்ணறிவை மையமாகக் கொண்டு இயங்கத் தொடங்கியிருக்கிறது. இது எப்படி வளரும், எதுவரை போகும், எவ்வாறெல்லாம் மானுட வாழ்வுக்குள் நுழைந்து, அதன் பரிமாணங்களைத் தீர்மானிக்கும் என்ற பரப்பளவு, கனம், நிறை, காலம் போன்றவற்றை நிர்ணயம் செய்வது உடனடியாக இயலாத காரியம்.

திராவிட மாடல் ஆட்சியின் தலைவர் இப்போது நடத்தியிருக்கும் "பன்னாட்டுக் கணித்தமிழ் மாநாடு", அதில் உருவான முன்னெடுப்புகள், செயற்கை நுண்ணறிவில் நம் தமிழ்மொழி சிறிதும் தாமதமின்றி நுழைந்து, தடைப்படாமல் பயணிக்க உறுதியாக உதவும். ஆங்கிலம் போன்ற மொழிகளுக்கு மென் பொருட்கள் வரும்போதே, பின்தங்கி விடாமல், தமிழுக்கும் உயரிய தரத்துடன் வந்தாக வேண்டும் என்ற அவரது தாய்மொழி ஆர்வமும், அழுத்தமும், திராவிட இயக்கப் பார்வையின் தீர்க்க நிலை ஆகும்.

**கல்விக்கண் திறந்தவர் காமராசர்;**
**கணினிக்கண் திறந்தவர் கலைஞர்;**
**தகவல் தொழில் நுட்பத்தின் பல்முனை வளர்ச்சியில்**
**தமிழைத் தகவமைப்பவர் திராவிட நாயகர் !**

• • •

**கி.இராஜமாணிக்கம்**



கடந்த 4 நாட்களுக்கு முன்பு, உதகை லவ்டேல் காந்திநகர் பகுதியில் ஏற்பட்ட மண் சரிவில் சிக்கி உயிரிழந்த 6 பேரின் குடும்பங்களுக்கு நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.இராசா சார்பில் தலா 1 லட்சம் ரூபாயும், வீட்டு வசதித்துறை அமைச்சர் சு.முத்துசாமி சார்பில் தலா 50 ஆயிரம் ரூபாயும் வழங்கி ஆறுதல் கூறினர். உடன் சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன், மாவட்ட கழகச் செயலாளர் பா.மு.முபாரக் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.



சென்னை, எழும்பூர், தாளமுத்து நடராஜன் மாளிகையில் உள்ள சென்னை பெருநகர வளர்ச்சிக் குழும அலுவலகக் கூட்டரங்கில் நேற்று (11.02.2024) இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் மற்றும் சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழும அமைச்சர் மற்றும் தலைவருமான பி.கே.சேகர்பாபு சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்திற்கு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் புதிதாக தேர்வு செய்யப்பட்ட 12 உதவி பொறியாளர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார். இந்நிகழ்வின் போது வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை செயலாளர் சி.சமயமூர்த்தி, சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தின் உறுப்பினர் செயலர் அன்சுல் மிஸ்ரா, மாவட்ட வருவாய் அலுவலர்/நிர்வாக அலுவலர் (பொ) திருமதி.மு.இந்துமதி மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் பங்கேற்று சிறப்பித்தனர்.

### ஒன்றிய நிதி அமைச்சரின்

# வெற்று வார்த்தைகளால் தமிழ்நாட்டு மக்கள் இனியும் ஏமாற மாட்டார்கள்!

## மக்களவையில் நிதிநிலை அறிக்கை விவாதத்தில், எஸ். ஜெகத்ரட்சகன் கடும் விமர்சனம்!

புதுடெல்லி, பிப்.12

திராவிட முன்னேற்றக் கழக, அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினர், டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன் 8.2.2024 அன்று மக்களவையில் ஒன்றிய அரசின் நிதி அமைச்சர் நிர்மலா சீத்தாராமனின், நிதிநிலை அறிக்கை, “எங்கும் தண்ணீர்,எங்கும் தண்ணீர், ஆனால் ஒரு துளியை கூட குடிக்க இயலாது” என்ற ஆங்கில கவிஞர் சாமுவேல் டெய்லர் கோலிரிட்ஜ் அவர்களின் வார்த்தைக்கு ஒப்பானது என்றும் ஒன்றிய நிதி அமைச்சரின் வெற்று வார்த்தைகளால், தமிழ்நாடு மக்கள், இனியும் ஏமாறத் தயாராக இல்லை என்றும், நிதிநிலை அறிக்கை விவாதத்தின் போது சரமாரியான கேள்விகளை எழுப்பினார்.

இது குறித்து எஸ். ஜெகத்ரட்சகன் மக்களவையில் பேசியதாவது:

முதற்கண் எங்களை வழிகாட்டும் தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களுக்கும், எங்களின் அரசியல் ஆசான், தமிழகத்தின் விடிவெள்ளி, முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களுக்கும் நிதி நிலை அறிக்கை விவாதத்தில் எனது கருத்துக்களை கூற வாய்ப்பளித்தமைக்காக எனது உளங்கனிந்த நன்றியை உரித்தாக்குகிறேன்.

நாங்கள் திராவிட இனத்தை சேர்ந்தவர்கள் என்று கூறிக் கொள்வதில் பெருமையடைகிறேன். உலக நாடுகள் பாராட்டும் வகையில், தமிழ்நாட்டில் திராவிட மாடல் ஆட்சி சிறப்பாக நடைபெற்று வரும் இதே வேளையில், ஒன்றிய நிதி அமைச்சரின் நிதிநிலை அறிக்கை, ஆங்கில கவிஞர் சாமுவேல் டெய்லர் கோலிரிட்ஜ் அவர்களின் வார்த்தைகளை எனக்கு நினைவுபடுத்துகிறது.ஆம்!

**கற்பனை அறிவிப்புகள்!**

“எங்கும் தண்ணீர், எங்கும் தண்ணீர் ஆனால், ஒரு துளியை கூட குடிக்க இயலாது”

இதைப் போலவே, நிர்மலா சீத்தாராமனின், தேன் தடவிய வெற்று வார்த்தைகளாலும், கற்பனையான அறிவிப்புகளாலும், இந்திய மக்கள் சந்தித்து வரும், துயரமிக்க



பிரச்னைகளுக்கு தீர்வுகள் கிடைத்து விடுமா?.

நிதி அமைச்சரின், நிதிநிலை அறிக்கை தொலைக்காட்சிகளில் அவ்வப்போது வரும் அவசரச் செய்திகளை போன்றுள்ளது என்றும், கடந்த பத்தாண்டுகளில் எவ்வளவு அவசரச் செய்திகளை இந்த ஒன்றிய அரசு அளித்துள்ளது என்பதை அறிந்து தமிழ்நாடு மக்கள் கவலை கொண்டுள்ளார்கள்.

இந்த நாட்டு மக்களை, மதத்தினாலும்,மொழியாலும், சாதிகளாலும், ஏற்றத்தாழ்வுடன் கூடிய பொருளாதாரத்தினாலும், பிரித்து அனைத்தையும் அவசரச் செய்திகளாகவே இந்த அரசு மாற்றிவிட்டது என்றும், வெற்று அறிவிப்புகளால் இனியும் இந்திய மக்களை ஏமாற்ற இயலுமா?.

ஒன்றிய அரசின் பொருளாதாரக் கொள்கைகளால் அதிகரித்து வரும் பணவீக்கம், உயர்ந்து வரும் வேலை வாய்ப்பின்மை, பல்வேறு மாநிலங்களில் அதிகரித்து வரும் சமூக சீரழிவுகள் ஆகியன பற்றியும், இவற்றிற்கான தீர்வுகள் குறித்தும், நிதிநிலை அறிக்கையில் எந்த அறிவிப்பும் இல்லாதது இந்திய மக்களை கவலையடையச் செய்துள்ளது.

ஒன்றிய அரசின் புள்ளியியல் துறையின் தரவுகளின்படி,2023 டிசம்பர் மாதத்தில் இந்திய பணவீக்கம் 5.69 சதவீதமாக உள்ளது. ஏழைகள், நடுத்தர வர்க்கத்தினர் மட்டுமல்லாது அனைத்து தரப்பு மக்களும் நிதிநிலை அறிக்கை அறிவிப்புகளை குறித்து ஏமாற்றம் அடைந்துள்ளார்கள். கடந்த பத்தாண்டுகளாகவே, பாரதிய ஜனதா கட்சியின் விளம்பரத்திற்காகவே இந்த அரசின் அறிவிப்புகள் பயன்பட்டு உள்ளன.

ஒன்றிய அரசின் நிதிநிலை அறிக்கையில் நாட்டின் பொருளாதாரத்திற்காக ஓய்வின்றி உழைத்து வரும் தொழிலாளர்களுக்கான திட்டங்கள் எதுவும் இல்லை . பணக்காரர்களை மேலும் பணக்காரர்களாக மாற்றவும் ஏழைகளை மேலும் ஏழைகளாக மாற்றவும் இந்த அரசின் கொள்கைகள் துணை போவது ஏன்?.

**காற்று நிரம்பிய பலூன்**

நிதி அமைச்சரின் வெற்று அறிவிப்புகள் காற்று நிரம்பிய பலுனை போன்றுள்ளது, அது எப்போது வேண்டுமானலும் உடையும், 2023-24 ஆண்டிற்கான வருமான அளவு 13 சதவீதம் அளவிற்கு உயர்ந்துள்ள போதிலும், செலவினங்களின் அளவு 7 சதவீதம் அளவிற்கு மட்டுமே ஏன் வழங்கப்பட்டுள்ளது?. இது மொத்த உற்பத்தி பெருக்கத்தின் வளர்ச்சியை விட செலவினங்களின் சதவீதம் குறைந்தது ஏன்?.

சமூக நலத் திட்டங்களுக்கான செலவீனம் கட்டமைப்புக்களுக்கான நிதியுதவியும் குறைக்கப்பட்டுள்ளதன் மூலம், நாட்டின் எதிர்காலமும், பொருளாதார அடிப்படையும் சீரழிக்கப்பட்டுள்ளது. நிர்வாக செலவுகள் மட்டுமே அதிகரித்துள்ளது. விவசாயம், கல்வி, சுகாதாரம், சமூக நலத் திட்டங்கள், தாழ்த்தப்பட்டோர் மற்றும் பட்டியலின மேம்பாடு ஆகியவற்றிற்கான நிதியளவு குறைக்கப்பட்டது ஏன்?.

**முதல்வர் மு.க.ஸ்டாலின் எழுப்பிய கேள்வி!**

மேலும், நகரங்களில் அதிகரித்து வரும், வேலைவாய்ப்பின்மையைக் குறைக்க எந்த அறிவிப்புகளும், நிதிநிலை அறிக்கையில் கூறப்படாதது ஏன்? இளைஞர்கள், பெண்கள், விவசாயிகள் இவர்களின் துயர்துடைக்க செலவினங்கள் அதிகரிக்கப்படாது ஏன்?. தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் இது குறித்து ஏற்கனவே கேள்வி எழுப்பியுள்ளார்.

கிராமப்புற இளைஞர்களிடையே வறுமையை குறைக்கவும், விவசாயிகளின் வருமானத்தை பெருக்கவும்,அனைத்து பயிர்களுக்குமான டாக்டர் சுவாமிநாதன் அறிக்கையை குறித்த அறிவிப்புகள் ஏதும் நிதிநிலை அறிக்கையில் இல்லை, வெற்று வார்த்தைகள் ஜாலங்கள் மட்டுமே நிதிநிலை அறிக்கையில் உள்ளன. பிரதம மந்திரி வீட்டுவசதி திட்டம், பிரதம மந்திரி கிராமச் சாலைகள் திட்டம், போன்றவற்றிற்கு 2022-23 ஆண்டை விட குறைந்த நிதியே ஒதுக்கப்பட்டுள்ளது ஏன்?.

விவசாயத்திற்கு இன்றியமையாத உரங்கள்,வேலை வாய்ப்பு உறுதி திட்டம், நகர்ப்புற வளர்ச்சி, பெண்களுக்கான மற்றும் குழந்தைகளுக்கான திட்டங்கள் போன்ற அனைத்து துறைகளுக்கும் ரூபாய் 60,470 கோடிகள் அளவிற்கு நிதி ஒதுக்கீடு குறைக்கப்பட்டுள்ளதுடன் குறிப்பாக உரத்துறைக்கு ரூபாய் 62,445 கோடிகள் குறைக்கப்பட்டுள்ளது விவசாயத் துறையை பெரிதும் பாதிக்கும்.

மகாத்மா காந்தி கிராமப்புற வேலைவாய்ப்பு உறுதி திட்டத்திற்கு சென்ற ஆண்டைவிட ரூ.4,806 கோடிகள் குறைக்கப்பட்டுள்ளது என்றும், 2047 ஆண்டில் இந்திய பொருளாதாரம் 3000 கோடிகள் அமெரிக்க டாலர் அளவிற்குஉயர வேண்டுமானால், குறைந்த பட்சம் ஆண்டின் மொத்த உற்பத்தி பெருக்கத்திற்கான அளவு 9.55 சதவீதமாக இருக்க வேண்டும் ஆனால், கடந்த பத்தாண்டுகளில் 6 சதவீதத்தை கூட தாண்டாத நிலையில் நிதி அமைச்சர் ஏன், வெற்று வார்த்தைகளை கூறுகின்றார்?.

தேசப்பிதா மகாத்மா காந்தியின் வார்த்தைகளில் சொல்ல வேண்டுமானால், ஒன்றிய அரசின் கடைபிடிக்கபடாத உறுதி மொழிகள் அனைத்தும் உண்மைக்கு புறம்பானதாகும் என்று கூறினால் அது மிகையில்லை. எனவேதான் நிதி நிலை அறிக்கையின் வெற்று வார்த்தைகளால் தமிழ்நாடு இனியும் ஏமாற மாட்டார்கள் என உறுதியாக நம்பலாம்.

ஏழை மற்றும் நடுத்தர மக்களிடம் நிலவி வரும் சமச்சீரற்ற நிதிநிலை, வாங்கும் சக்தி குறைந்து வருவது ஆகியவற்றிற்கான சிறப்பு திட்டங்கள் ஏதும் அறிவிக்கப்பட்டால் மட்டுமே இந்திய பொருளாதாரத்தை காப்பாற்ற இயலும் என்பதோடு 2023-23 ஆண்டிற்கான மொத்த உற்பத்தி பெருக்க குறியீடு 7.3 சதவீதமாக இருக்குமா? என்பது கேள்விக்குறியே?

**விவசாயிகள் வருமானம் உயர வழியில்லை!**

பொதுமக்கள் பயன்படுத்தும் உணவு தானியங்கள் காய்கறிகள், பழங்கள் போன்றவற்றின் விலை கட்டுக்கு அடங்காமல் உயர்ந்து பொதுமக்களை வாட்டி வதைக்கும் அதே நேரத்தில், விலைவாசி உயர்வினால் உண்மையான விவசாயிகளுக்கு வருமானத்தை அதிகரிக்க எந்த உதவியும் கிடைக்கவில்லை.

மேலும், உயர்ந்து வரும் விலை வாசியை தடுக்கும் முயற்சியாகவே, இந்திய ரிசர்வ் வங்கி மற்ற வங்கிகளுக்கு கடன் அளிக்கும் ரிபோரேட் விகிதத்தை 6.5 சதவீதமாக உயர்த்தியுள்ளது என்றும், எனவே ஒன்றிய அரசு விலைவாசிஉயர்வை தடுக்க திறனற்றதாகி விட்டது ஏன்? என்பது வெள்ளிடைமலையாக தெரிகிறது. நிதி அமைச்சரின் அறிவிப்புகள் மூதலீடுகளை அதிகரிக்க முக்கியத்துவம் அளித்த போதிலும், தொழிலாளர்களின் வேலை வாய்ப்பை பெருக்குவதில் முற்றிலும் தவறி விட்டது. ஏழை மக்களுக்கும், நடுத்தர மக்களுக்கும், வரி செலுத்துவோருக்கும் இந்த நிதிநிலை அறிக்கையில் ஏமாற்றமே பரிசாக அளிக்கப்பட்டுள்ளது.

வருமான வரி விகிதங்களில் குறைப்பு ஏதும் செய்யப்படவில்லை. மொத்தத்தில் நிதி நிலை அறிக்கை இந்திய மக்களின் நலனை கருத்தில் கொள்ளவில்லை. இந்த நிதி நிலை அறிக்கையினால் இந்த ஆண்டிலோ வரும் ஆண்டிலோ எந்த பயனும் ஏற்படாது என்பது இந்திய மக்கள் அனைவருக்கும் தெளிவாகி விட்டது.

இவ்வாறு டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன், ஒன்றிய அரசிடம் கேள்விகள் எழுப்பி உறுப்பினர்களின் கவனத்தை ஈர்த்தார்.

### அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாளை முன்னிட்டு

# சிவகங்கையில் மாபெரும் மாட்டுவண்டி பந்தயம்!

சிவகங்கை, பிப். 12 -

சிவகங்கை தெற்கு ஒன்றியக் கழகம் மற்றும் இளைஞரணி சார்பாக இளைஞர்நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சரும், மாநில இளைஞரணி செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாளை முன்னிட்டு 2வது ஆண்டு மாட்டுவண்டி எல்கைப்பந்தயம் சிவகங்கை தெற்கு ஒன்றிய செயலாளர் எம். ஜெயராமன் தலைமையில் மதுரை சாலையில் நடைபெற்றது.

இந்த பந்தயத்தில் பெரிய மாடு21ம், 62 ஆக மொத்தம் 83 மாடுகள் பங்கேற்றது.

சிறிய மாடு ஆகியோர் மாட்டுவண்டி பந்தயம் நடைபெற்றது.

இந்த மாட்டு வண்டி பந்தயத்தை மானாமதுரை கிழக்கு ஒன்றிய கழகச் செயலாளர் துரை. ராஜாமணி, சிவகங்கை நகர் கழகச் செயலாளர்சி.எம். துரை .ஆனந்த், மாவட்ட மகளிர் தொண்டரணி துணைமைப்பாளர் திலகவதி கண்ணன் ஆகியோர் துவக்கி வைத்தார்கள்.

பெரிய மாட்டில் முதல் பரிசினை அவனியாபுரம் மோகனகுமார் இரண்டாவது பரிசினை கல்லுப்பட்டி குறுந்தடியான் சேர்வை மூன்றாவது பரிசினை தையல் நாயகி கருப்பையா, நான்காம் பரிசினை ஜெய்ஹிந்த்புரம் அக்னி முருகன், ஆகியோர் பெற்றார்கள்.

சிறிய மாடுகள் 62 சிறிய மாடுகள் பங்கேற்றதால் மூன்று பிரிவாக பந்தயம் நடைபெற்றது. இதில் முதல் பரிசுகளை பூவந்தி ஞான பாண்டி அம்பலம், கல்லுப்பட்டி குருந்தடியான், பொய்யாநல்லூர்அபீக்முகமது, இரண்டாவது பரிசுகளை அதிகரை வேங்கை கோனார் நாட்டரசன் கோட்டை ராமையா, ஸ்கெட்ச் முத்துகுமார், மூன்றாவது பரிசினை அவனியாபுரம் எஸ்.கே.ஆர், ஆட்டுகுளம் கோமாளிவீரன் அம்பலம்,குமார பட்டிஜெயராஜ், நான்காவது பரிசுகளை நெய்வாசல் பெரியசாமி,செம்பனூர். . பசும்பொன்பாலா, அவனியாபுரம் முருகன் , ஐந்தாம் பரிசுகளை கோட்டநத்தம் பட்டி மகாதேவன், தேவதானப்பட்டி எஸ்.எஸ்.சரவணன், நகரம் பட்டி வைத்யா ஆகியோர் பெற்றார்கள். மாட்டு வண்டி ஓட்டி வந்த சாரதிக்கும் பரிசுகள் வழங்கப்பட்டது .


இந்த நிகழ்ச்சியில் மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் எஸ். எம்.மதிவாணன், மாவட்ட சுற்றுப்புறச் சூழல்அணி அமைப்பாளர் குமணன், மானாமதுரை ஒன்றியக்குழு துணைத்தலைவர் முத்துச்சாமி மாவட்ட ஆதி திராவிடர் நலக்குழு அமைப்பாளர் சிங்கமுத்து தெற்கு ஒன்றிய கழக நிர்வாகிகள் பஞ்சவர்ணம், தங்கச் செல்வம், தவனேஸ், செல்வம், செந்தில்,

சிலம்பரசன், மூக்குத்தி பாலா, தங்கசாமி, முத்துக்குமார் ஒன்றிய கவுன்சிலர்கள் ரமேஷ், வேல்முருகன், மகளீரணி துணைஅமைப்பாளர் மஞ்சுளா, டாமின் குமார்,பன்னீர், நகர்மன்ற உறுப்பினர் ஜெயகாந்தன் ராமதாஸ் ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

முன்னதாக தெற்கு ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர் அழகுசுந்தரம் வரவேற்றுப் பேசினார்.

ஒன்றியகவுன் சிலர் வேல் முருகன் நன்றி கூறினார். மாட்டுவண்டி பந்தய ஏற்பாடுகளை தெற்குஒன்றிய கழக செயலாளர் எம்.ஜெயராமன் தலைமையில் இளைஞரணி அமைப்பாளர் தங்கம் செல்வம் துணை அமைப்பாளர்கள்ஏ.எஸ். அழகுசுந் தரம், எம். விஜய் சேதுபதி, ஜி.ஆர். சிலம்பரசன், மற்றும் விழா குழுவினர் செய்திருந்தார்கள்.

இந்த மாட்டுவண்டி பந்தயத்தில் அறந்தாங்கி, மதுரை, ராம நாதபுரம், தேனி, திண்டுக்கல் , உட்பட தென்மாவட்டங்களில் இருந்து ஏராளமான மாடுகள் பங்கேற்றது.



சென்னை,அம்பத்தூர் தாலுகாவிற்குப்பட்ட ஆத்துப்பட்டு 86வது வார்டில் தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகள் முன்னேற்ற சங்க பெயர் பலகையை மாநிலத் தலைவர் ரெ.தங்கம் திறத்து வைத்தார். மாநில பொதுச்செயலாளர் எஸ்.சரவணகுமார், மாநில பொருளாளர் டாக்டர் எஸ்.நசீம், தி.மு.கழக நிர்வாகி எஸ்.சாலமன்,மாநில துணை பொதுச்செயலாளர்கள் க.இளங்கோவன், மாநில செயற்குழு உறுப்பினர் எஸ்.விவேக்,சென்னை மாவட்ட செயலாளர் வி.தர்மலிங்கம்,மாவட்ட நிர்வாகிகள் எம்.சுந்தரதேவன், தென் சென்னை மாவட்ட செயலாளர் கி.பத்மநாபன், நிர்வாகிள் ஜெ.அக்பர், எம்.பெரியசாமி, வி.மோகன்ராஜ், ஏ.அருள்,என்.ஏழுமலை, மகளிர் நிர்வாகிகள் ஏ.செரினா, வி.பச்சையம்மாள், சி.மனோகரி, எஸ்.ஜெயபாரதி ஆகியோர் பங்கேற்றனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### மாங்காடு எம்.வி. சோலையப்பன்

### பிப்ரவரி 12 (1972)



கழகம் துவக்கிய காலத்திலேயே கழகக் கொள்கையில் ஈடுபாடு கொண்டு, பேரறிஞர் அண்ணாவின் அன்பைப் பெற்று, காங்கிரஸ் ஆட்சியில் பல்வேறு கொடுமைகளுக்கு ஆளாகி தமது பகுதியில் கழகம் வளர்த்த தளகர்த்தர்களில் ஒருவர்.

தலைவர் கலைஞர், பொதுச்செயலாளர் பேராசிரியர் ஆகியோரின் நன்மதிப்பையும் பெற்றவர்.

மாங்காடு பேரூராட்சி தலைவராகவும் – குன்றத்தூர் ஊராட்சி ஒன்றிய பெருந்தலைவராகவும் பொறுப்பு வகித்தவர். கழகத்தின் முதல் ஒன்றியப் பெருந்தலைவர் என்ற சிறப்பைப் பெற்றவர்.

கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர். தன் இறுதிகாலம் வரை கழகத்திற்காக பாடுபட்டவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

### 109 அ வட்ட துணைச் செயலாளர்

# எ.விஜயகுமார் தந்தை ப.ஆறுமுகம் மறைவு!

சென்னை பிப்:12

சென்னை மேற்கு மாவட்டம், ஆயிரம் விளக்கு மேற்கு பகுதி, 109அ வட்ட துணைச் செயலாளர் எ. விஜயகுமாரின் தந்தை ப.ஆறுமுகம் நேற்று (11.02.2024) மதியம் 2:00 மணியளவில் இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.



தகவல் அறிந்து கழகத்தினர் அன்னாரின் உடலுக்கு

**கழகத்தினர் அஞ்சலி!**

மலர் மாலைகள் வைத்து அஞ்சலி செலுத்தினர்.

அன்னாரின் இறுதி ஊர்வலம் இன்று (12.02.2024 ) மாலை 3:30 மணியளவில் (எண்.127, இன்பராஜபுரம், சூளைமேடு) அன்னாரின் இல்லத்தில் இருந்து புறப்பட்டு நுங்கம்பாக்கம் இடுகாட்டில் நல்லடக்கம் செய்யப்படும்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கவிஞர் குடியரசு

### பிப்ரவரி 12 (2002)



“திராவிட இயக்கத்தின் தீப்பொறிக் கவிஞராகவும், எரிமலைக் கனல் உமிழும் எழுச்சிக் கவிஞராகவும் திகழ்ந்தவர். தத்துவக் கவிஞர் குடியரசு.

“என் தலைமையில் பகுத்தறிவுப் பாடல்களை – இன உணர்வுக் கவிதைகளை வழங்கியவர்” என தலைவர் கலைஞர் அவர்களால் நினைவு கூறப்பட்டவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**





தமிழ்நாட்டு மீனவர்களைப் பாதுகாக்கத் தவறிய மோடி அரசைக் கண்டித்து இராமேசுவரத்தில் கழக அமைப்பு செயலாளர் ஆர்.எஸ்.பாரதி தலைமையில் இராமநாதபுரம் மாவட்ட கழகச் செயலாளர் காதர் பாட்ஷா முத்துராமலிங்கம் எம்.எல்.ஏ, முன்னிலையில் கழக மீனவரணிச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் ஒருங்கிணைப்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில், 6 மாவட்டங்களைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான மீனவர்கள் கலந்துகொண்டு ஒன்றிய அரசுக்கு எதிராக கண்டன முழக்கமிட்டனர்.

### கிளாம்பாக்கம் கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையத்தில் ஆய்வு!

# போதிய பேருந்துகளை இயக்கவில்லை என்பது திட்டமிட்ட வதந்தி!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு - எஸ்.எஸ்.சிவசங்கர் பேட்டி!

சென்னை, பிப்.12

கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையத்தில் இருந்து போதிய பேருந்துகள் இயக்கவில்லை என்பது திட்டமிட்ட வதந்தி - என்று போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் கூறினார்.

சென்னை வெளிவட்ட சாலை, முடிச்சூரில் கட்டப்பட்டு வரும் புதிய ஆம்னி பேருந்துகளுக்கான நிறுத்தும் (Idle Parking for Omni Buses) இடத்தையும் மற்றும் செங்கல்பட்டு மாவட்டம், கிளாம்பாக்கம், கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையத்தில் வார இறுதி நாட்கள் மற்றும் முகூர்த்த நாட்களில் அரசு போக்குவரத்துக் கழக பேருந்துகள் இயக்கம் குறித்தும் இம்முனையத்திலிருந்து கூடுதல் பேருந்துகள் இயக்குவது குறித்தும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும அமைச்சர் மற்றும் தலைவரும் (ம) இந்து சமயம் அறநிலையத்துறை அமைச்சருமான பி.கே.சேகர்பாபு மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் ஆகியோர் நேற்று (11.2.2024), நேரில் சென்று ஆய்வு செய்தனர்.

பின்னர் போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் செய்தியாளர்களிடம் பேசும்போது தெரிவித்ததாவது:

கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையத்தில் தெற்கு நோக்கிச் செல்லும் பேருந்துகளில் பயணம் செய்யும் பயணிகளுக்காக கடந்த இரு தினங்களில் 3338 பேருந்துகள் இயக்கப்பட்டன.

இந்நிலையில் திருச்சி, தஞ்சாவூர், கும்பகோணம் மற்றும் திருவண்ணாமலை ஆகிய பகுதிகளுக்கு போதுமான அளவில் பேருந்துகள் இயக்கப்படவில்லை என புகார்கள் எழுந்து நிலையில் நாள் ஒன்றுக்கு திருச்சிக்கு 199 பேருந்துகளும், கும்பகோணத்திற்கு 125 பேருந்துகளும், திருவண்ணாமலைக்கு 283 பேருந்துகளும், இயக்கப்பட்டுள்ளன. இது மேற்கண்ட பகுதிகளுக்கு கடந்த பொங்கல் பண்டிகைக்கு இயக்கப்பட்ட எண்ணிக்கைகளை விட அதிகம்.

கடந்த வெள்ளி (9.2.2024) இரவு மதுராந்தகம் அருகே ஏற்பட்ட சாலை விபத்தின் காரணமாக போக்குவரத்து சுமார் 2 மணி நேரத்துக்கு மேல் பாதிக்கப்பட்ட நிலையில் போதுமான அளவில் பேருந்துகள் உரிய நேரத்திற்குள் கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையத்திற்கு வருகை தராத காரணத்தால் பயணிகள் மேற்கண்ட புகார்களை தெரிவித்துள்ளனர். வார இறுதியினை கருத்தில் கொண்டும், முகூர்த்த தினங்களை கருத்தில் கொண்டும் தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம் மற்றும் தமிழ்நாடு அரசு விரைவு போக்குவரத்து கழகங்கள் முன்கூட்டியே திட்டமிட்டு பயணிகளுக்கு தேவையான கூடுதல் பேருந்துகளை இயக்கி வருகின்றனர்.

**இரவு முழுவதும் பேருந்துகள்!**

பொதுவாக இரவு 12 மணிக்கு மேல் புறநகர் பேருந்துகள் பெரும்பாலும் இயக்கப்பட்டுவதில்லை. அதன் பின்னர் அதிகாலை 4 மணி முதலே பேருந்துகளின் இயக்கம் தொடங்கும். இந்நடைமுறையே கோயம்பேடு பேருந்து நிலையத்திலும் பின்பற்றப்பட்டு வந்தது. தற்போது புதிதாக கிளாம்பாக்கம் கலைஞர் நூற்றாண்டு பேருந்து நிலையம் திறக்கப்பட்ட பின்னர் பயணிகள் இரவு முழுவதும் பேருந்துகள் இயக்கப்பட வேண்டும் என்றும் பேருந்துகளில் பயணம் செய்ய இருக்கை வசதிகள் செய்து தரப்பட வேண்டும் என்றும் கூறி கூடுதல் பேருந்துகளை இயக்க கூறுகின்றனர். பேருந்துகள் மற்றும் பேருந்து ஓட்டுநர்கள் மற்றும் நடத்துனர்களின் இருப்பினை கருத்தில் கொண்டு இரவிலும் தற்போது கூடுதல் பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றது.

வடசென்னை பகுதியைச் சேர்ந்தவர்கள் பயணிப்பதற்கு ஏதுவாக 20 சதவிகித பேருந்துகள் மாதவரத்தில் இருந்து இயக்கப்படுகிறது, காரணம் திருவொற்றியூர், ராயபுரம் பகுதியில் இருக்கின்றவர்கள் மற்றும் மாதவரம், ஆவடி, அம்பத்தூர் போன்ற பகுதியில் இருக்கின்றவர்கள் கிளாம்பாக்கம் வந்து செல்வது சிரமமாக இருக்கும் என்ற காரணத்தினால் தான். மீதி 80 சதவிகித பேருந்துகளும் கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையத்தில் முழுமையாக இயக்கப்படுகிறது. எனவே பேருந்து வசதிகள் முழுமையாக வழங்கப்படுகிறது. இன்றைக்கு திருமண நாட்கள், விடுமுறை நாட்களில் கூடுதல் பேருந்துகள் தேவைப்படுகிறது. கூடுதலாகவும் பேருந்துகள் ஏற்பாடு செய்யப்படுகிறது. அதை தாண்டி மாநகரப் போக்குவரத்து பேருந்துகளும் எடுத்து இயக்கப்படுகிறது. எனவே எந்த குழப்பமும் தேவையில்லை என்பது தான், இந்த நேரத்தில் நான் வைக்கும் வேண்டுகோள். கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையத்தில் போதிய பேருந்துகள் இயக்கவில்லை என்பது திட்டமிட்ட வதந்தி.

**தீர்ப்பை தவறாகப் புரிந்துகொண்ட ஆம்னி உரிமையாளர்கள்**

கடந்த 24.1.2024 முதல் தெற்கு நோக்கி செல்லும் அனைத்து ஆம்னி பேருந்துகளும் கிளாம்பாக்கம் கலைஞர் நூற்றாண்டு பேருந்து நிலையத்திலிருந்து மட்டுமே இயக்கப்பட வேண்டும் என்ற தமிழ்நாடு அரசின் உத்தரவினை எதிர்த்து ஆம்னி பேருந்து உரிமையாளர்கள் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்து இருந்த நிலையில் கடந்த வெள்ளி (9.2.2024) அன்று சென்னை உயர்நீதி மன்றம் போரூர் சுங்கச்சாவடி மற்றும் சூரப்பட்டு சுங்கசாவடி ஆகிய இரண்டு இடங்களில் மட்டுமே ஆம்னி பேருந்துகளுக்கு பயணிகளை ஏற்றவும் இறக்கவும் அனுமதி அளித்துள்ளது. சென்னை உயர்நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட தீர்ப்பினை தவறுதலாக புரிந்து கொண்டு கோயம்பேட்டில் இருந்து ஆம்னி பேருந்துகளை இயக்க நீதிமன்றம் அனுமதி அளித்துவிட்டதாக ஆம்னி பேருந்து உரிமையாளர்கள் ஊடகங்களில் தெரிவித்து வருகின்றனர்.

இது தொடர்பாக அரசு தலைமை வழக்கறிஞருடன் ஆலோசிக்கப்பட்டதன் அடிப்படையில் நாளை (12.2.2024) திங்கட்கிழமை உரிய தெளிவுரை கோரி நீதிமன்றத்தில் முறையிட உள்ளோம்.

போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் தெரிவித்தார்.

**அமைச்சர் பி.கே.சேகர்பாபு பேட்டி!**

சென்னை பெருநகர வளர்ச்சி குழும அமைச்சர் (ம) தலைவரும் (ம) இந்து சமய அறநிலையத்துறை அமைச்சருமான பி.கே.சேகர்பாபு செய்தியாளர்களிடம் பேசும்போது தெரிவித்ததாவது:

முதலமைச்சர் அவர்கள் செங்கல்பட்டு மாவட்டம், கிளாம்பாக்கத்தில் ரூ.393.74 கோடி மதிப்பீட்டில் 88.52 ஏக்கர் பரப்பளவில் கட்டப்பட்டுள்ள இந்தியாவின் மிகப்பெரிய பேருந்து நிலையங்களுள் ஒன்றான “கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையத்தை” 30.12.2023 அன்று திறந்து வைத்து, பொதுமக்கள் பயன்பாட்டிற்கு அர்ப்பணித்தார்கள். இப்பேருந்து முனையத்தை முழுமையாக மக்கள் மகிழ்ச்சியோடு பயன்படுத்துகின்ற அளவிற்கு அனைத்து தேவையான கூடுதல் வசதிகளும் செய்யப்பட்டு வருகிறது.

காஞ்சிபுரம் மாவட்டம், சென்னை வெளிவட்ட சாலை, முடிச்சூரில் கட்டப்பட்டு வரும் புதிய ஆம்னி பேருந்துகளுக்கான நிறுத்தும் (Idle Parking for Omni Buses) 5 ஏக்கர் பரப்பளவில் ரூபாய் 27.98 கோடி மதிப்பீட்டில் 150 பேருந்துகள் நிறுத்துமிடம் 1வது கட்டடத்தில் : தரை தளம் உணவகம், முதல் தளம் தங்கும் அறைகள் (Dormitory) (5,388 சதுர அடி), இரண்டாவது தளத்தில் ஆபரேட்டர் அறை (500 சதுர அடி), 2வது கட்டடத்தில் : தரை தளம் மற்றும் முதல் தளத்தில் தங்கும் அறைகள் (5388 சதுர அடி), இரண்டாவது தளத்தில் ஆபரேட்டர் அறை (500 சதுர அடி) என மொத்தம் 300 எண்ணிக்கையிலான தங்கும் அறைகள் கட்டப்பட்டு வருகிறது. இக்கட்டிடமானது முழுமையாக பணிகள் நிறைவு செய்யப்பட்டு ஆம்னி பேருந்து நிலையம் நிச்சயமாக பயன்பாட்டிற்கு வரும். ஆகவே, ஆம்னி பேருந்து நிலையம் ஏப்ரல் மாத இறுதிக்குள் கட்டி முடிக்கப்பட்டு, ஆம்னி பேருந்துகள் நிறுத்துவதற்குண்டான வசதிகள் செய்து தரப்படும்.

கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையத்தில் வார இறுதி நாட்கள் மற்றும் முகூர்த்த நாட்களில் அரசு போக்குவரத்துக் கழக பேருந்துகள் இயக்கம் குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. கடந்த இரண்டு நாட்கள் மட்டும் சுமார் 1,00,000க்கு மேற்பட்ட பயணிகள் இப்பேருந்து முனையத்தை பயன்படுத்தி உள்ளனர். இம்முனையத்திலிருந்து கூடுதல் பேருந்துகள் இயக்கப்பட்டும் வருகின்றன.

பேருந்து முனையத்திற்கு வரும் பயணிகள் எளிதாக சென்னை நகரப் பகுதிகளை அடையும் வகையில் 698 மாநகர பேருந்துகள் மூலம் தினசரி 4651 நடைகள் இயக்கப்பட்டு வருகிறது. சென்னையின் அனைத்து பகுதிகளுக்கும் கிளாம்பாக்கம் பேருந்து முனையத்திலிருந்து மாநகரப் பேருந்துகள் மூலமாக நேரடி பேருந்து சேவை தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இது தவிர, பயணிகளின் வசதிக்காக ப்ரீபெய்ட் ஆட்டோ வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேலும் பயணிகளின் வசதிக்காக வாடகை கார்கள் வசதியும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. வாடகை கார்கள் மற்றும் ஆட்டோவிற்கான ப்ரத்யேக பார்க்கிங் வசதியும் செய்து தரப்பட்டுள்ளது. கிளாம்பாக்கம் பேருந்து முனையத்திலிருந்து அருகில் உள்ள மாநகர பேருந்து நிலையத்திற்கு பயணிகள் எளிதாக செல்லும் பொருட்டு 4 இலவச பேருந்துகள் தினம் இயக்கப்பட்டு வருகிறது.

**6 மாதங்களில் புதிய ரயில் நிலையம்!**

இம்முனையத்தில் வெளியூர் பேருந்துகள் மற்றும் சென்னை மாநகர் பேருந்துகள் (MTC) நிற்கும் இடத்திற்கும் இடையில் பயணிகள் சுலபமாக செல்வதற்காக சாய்வு தளம் மற்றும் படிக்கட்டுகள் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. பொதுமக்களின் வசதியை மேம்படுத்தவும், போக்குவரத்து நெரிசலைக் குறைக்கவும் கிளாம்பாக்கத்தில் புதிய ரயில் நிலையம் அமைப்பதற்காக ரூ.20 கோடி ரயில்வே துறைக்கு வழங்கப்பட்டு, 6 மாதங்களில் இரயில் நிலையம் அமைக்கப்படும் என தெற்கு ரயில்வே அறிவித்துள்ளது.

மேலும், இம்முனையத்தின் எதிர்புறம் உள்ள GST சாலையின் குறுக்கே கிளாம்பாக்கம் ரயில் நிலையத்தை இணைக்கும் நடை மேம்பாலம் (Sky Walk) பணிகள் தொடங்கப்பட்டுள்ளது. சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனத்தின் (CMRL) மூலம் கிளம்பாக்கத்தில் ஒரு புதிய மெட்ரோ ரயில் நிலையமும் வெகு விரைவில் அமையவுள்ளது.

மேலும் இப்பேருந்து முனைய சென்னை மாநகர் போக்குவரத்து பேருந்து நுழைவாயிலில் ரூ.4.80 கோடி மதிப்பீட்டில் முகப்பு வளைவு அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது, இம்மாத இறுதிக்குள் பணிகள் முடிவடைந்து விடும்.

இப்பேருந்து முனையத்தை மக்கள் முழுமையாக மகிழ்ச்சியோடு பயன்படுத்துகின்ற அளவிற்கு அனைத்து தேவையான கூடுதல் வசதிகளும் செய்யப்பட்டு வருகிறது. மேலும் பயணிகளின் தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் இப்பேருந்து முனையத்தில் தரமான மற்றும் சுகாதாரமான முறையில் மலிவு விலை உணவகங்கள் வெகு விரைவில் திறக்கப்படும் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் பி.கே.சேகர்பாபு தெரிவித்தார்.

இந்த ஆய்வின்போது சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும உறுப்பினர் செயலர் அன்சுல் மிஸ்ரா, தலைமை நிர்வாக அலுவலர் ஜெ.பார்த்தீபன், போக்குவரத்து இணை ஆணையர் (விதிகள்) ஆ.ஆ.முத்து, SETC பொது மேலாளர் (இயக்கம்) குணசேகரன், MTC பொது மேலாளர் (தொழில்நுட்பம்) ஆர்.சுந்தர பாண்டியன், TNSTC துணை மேலாளர் (இயக்கம்) ரவி, சி.எம்.டி.ஏ., செயற்பொறியாளர்கள் ராஜன் பாபு, பாலமுருகன் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உடனிருந்தனர்.



சென்னை வெளிவட்ட சாலை, முடிச்சூரில் கட்டப்பட்டு வரும் புதிய ஆம்னி பேருந்துகளுக்கான நிறுத்துமிடத்தை (Idle Parking for Omni Buses) சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும அமைச்சர் மற்றும் தலைவரும் (ம) இந்து சமயம் அறநிலையத்துறை அமைச்சருமான பி.கே.சேகர்பாபு மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் ஆகியோர் நேற்று (11.2.2024), நேரில் சென்று பார்வையிட்டு கள ஆய்வு செய்தார்கள். இந்த ஆய்வின்போது சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும உறுப்பினர் செயலர் அன்சுல் மிஸ்ரா, மாநகர் போக்குவரத்துக் கழக பொது மேலாளர் ஆர்.சுந்தரபாண்டியன், சி.எம்.டி.ஏ., செயற்பொறியாளர்கள் ராஜன் பாபு, பாலமுருகன் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உடனிருந்தனர்.

### தி.மு.க. நாடாளுமன்றத் தேர்தல் அறிக்கை தயாரிக்கும் குழுவினர்

# 20 மாவட்டங்களைச் சேர்ந்த மக்களைச் சந்தித்து பரிந்துரைகளைப் பெற்றனர்!

சேலம்,பிப்.12-

2024 மக்களவை தேர்தலையொட்டி, தேர்தல் அறிக்கை தயாரிப்பதற்காக தி.மு.க. துணைப் பொதுச்செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. தலைமையில் 11 பேர் கொண்ட குழு அமைக்கப்பட்டுள்ளது. தி.மு.க. தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலினின் அறிவுரைப்படி இக்குழு பிப்ரவரி 5 ஆம் தேதி முதல், தமிழ்நாட்டின் முக்கிய நகரங்களுக்கு சென்று மக்களை நேரில் சந்தித்து பரிந்துரைகளை பெறும் பணியை தொடங்கி உள்ளது. ‘உரிமைகளை மீட்க ஸ்டாலினின் குரல் நாடாளுமன்றத்தில் ஒலித்திட வேண்டிய தமிழ்நாட்டின் கருத்துகள்’ என்ற தலைப்பில், பல்வேறு தரப்பினரின் கருத்துகளைக் கேட்டு வருகிறது.

திமுக தேர்தல் அறிக்கை தயாரிப்பு குழு நேற்று (11/02/2024) சேலம் மாவட்டத்தில் மக்களை சந்தித்தனர். சேலத்தில் அமைந்துள்ள ஹோட்டல் சென்னிஸ் கேட்வே இல் திமுக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி தேர்தல் அறிக்கையில் இடம்பெற வேண்டிய பொதுமக்களின் கோரிக்கைகளைப் பெற்றார். அதில் சேலம், நாமக்கல், கள்ளக்குறிச்சி மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் பங்கேற்றனர்.

திமுக விவசாய அணிச் செயலாளர் ஏ.கே.எஸ்.விஜயன், திமுக வர்த்தகர் அணி துணைத் தலைவர் கோவி. செழியன், கே.ஆர்.என். ராஜேஸ்குமார் எம்.பி., திமுக மாணவரணிச் செயலாளர் சி.வி.எம்.பி.எழிலரசன் எம்.எல்.ஏ., திமுக அயலக அணிச் செயலாளர் எம்.எம்.அப்துல்லா எம்.பி., திமுக மருத்துவ அணிச் செயலாளர் மருத்துவர் எழிலன் நாகநாதன் எம்.எல்.ஏ., சென்னை மாநகர மேயர் பிரியா ஆகியோர் பரிந்துரைகளை மக்களிடமிருந்து பெற்றனர்.

இந்நிகழ்ச்சியில் சேலம் கிழக்கு மாவட்டச்செயலாளர் சிவலிங்கம், சேலம் மத்திய மாவட்டச்செயலாளர் இராஜேந்திரன், மக்கள் பிரதிநிதிகள், திமுக நிர்வாகிகள் பங்கேற்றனர்.

கொலுசு உற்பத்தியாளர் சங்கங்கள், லாரி உரிமையாளர்கள், வணிகர் சங்கங்கள், விவசாயிகள், மாற்றுத்திறனாளிகள், மக்கள் நலச்சங்கங்கள், செவிலியர்கள், தொழில் முனைவோர், பல்வேறு அமைப்புகளைச்சேர்ந்தவர்கள், அரசு ஊழியர்களின் பிரதிநிதிகள் உள்ளிட்ட அனைத்துத் தரப்பினரும் தேர்தல் அறிக்கையில் இடம்பெற வேண்டிய அம்சங்கள் குறித்த பரிந்துரையை ஆர்வமுடன் வழங்கினர்.

### தி.மு.க. அயலக அணி வெங்கடேசன் - ஆரிஃப் மக்பூல் மேற்கொண்ட முயற்சியால்

# சவுதி அரேபியாவிலிருந்து தமிழர்கள் 26 பேர் தாயகம் திரும்பினர்!

தம்மாம், பிப்.12 -

சவுதி அரேபியா தம்மாம் கிழக்கு மண்டலம் திமுக அயலக அணி மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் இந்திய நலச்சங்கம் இணைந்து மயிலாடுதுறை வெங்கடேசன், திருச்சி ஆரிஃப் மக்பூல் ஆகியோர் தலைமையில் முகவை சீனி முஹம்மத், துறையூர் கமால் ஆகியோர் முன்னிலையில் தமிழர்கள் மற்றும் இந்தியாவிலுள்ள பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்த 2 பேரை தாயகம் திரும்ப அனைத்து உதவிகளும் செய்து அவர்களை இந்தியாவிற்கு அனுப்பி வைத்தனர்.

தமிழ்நாடு மற்றும் இந்தியாவைச் சேர்ந்தவர்களில் சிலருக்கு ஓர்க் பர்மிட் இல்லாமல் காலாவதியான காரணத்தினால், வேலை செய்ய முடியாமல் நாடு திரும்ப முடியாமல் தவித்து வந்தனர். இவர்கள் அனைவருக்கும் சட்டபூர்வமாக அனைத்து உதவியும் மயிலாடுதுறை வெங்கடேசன் செய்தார். மேலும் இவர்களுக்கு நாடு திரும்ப அனைத்து உதவிகளும் செய்து தரப்பட்டது

துபாய் மீரான் தமிழர்களை மீட்டு தாயகம் அனுப்ப வலியுறுத்தி வந்தார். இதில் ஒரு சிலருக்கு விமானப் பயணச் சீட்டுக்கு பணமும் இல்லாமல் காரணத்தினால் அஞ்சப்பர் உணவகம் டாக்டர் பத்மநாதன் மற்றும் சிவப்பிரகாசம் ஆகியோர் உதவினார்கள். இவர்கள் மொத்தம் 26 பேர்களையும் தமிழ்நாட்டிற்கு அனுப்பி வைத்தனர்.

இந்நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக யுனிவர்சல் நிறுவனத்தைச் சேர்ந்த தொழிலதிபர் பக்ருதீன் அப்துல் மஜீத் கலந்து கொண்டார்.

26 நபர்களுக்கும் தேவையான உதவிகளை மற்றும் பரிசுகளை தொழில் அதிபர் நசுருதீன் அஹமத் பிரேம்நாத் நாசு சவுக்கத் அலி, த.மு.மு.க. இஸ்மாயில், டாக்டர் ஆதிர், (ஆந்திர பிரதேசம்) இலியாஸ் (கேரளா) குத்துஸ் (கர்நாடகா) நதீம் (மகாராஷ்ட்ரா) அஹமது, (தெலுங்கானா) நபீஸ் (பெங்களூர்) வழங்கினார்.

அதுபோது ஏர்போர்ட் கணேசன், கள்ளக்குறிச்சி ஃபாரூக், காரைக்கால் ஃபாரூக் ராஜா, சென்னை ஜியான், அப்துல் ரஹ்மான், சென்னை இம்ரான், ரிஷி உணவகம் சாகுல், முகவை சபிக் அகமது, முகவை முகமது யாசர் மற்றும் அனைத்து நிர்வாகிகளும் உடனிருந்தனர்.



வருகின்ற மார்ச் 1ஆம் தேதி அன்று கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பிறந்த நாளை முன்னிட்டு திருவேற்காடு நகராட்சி 8-வது வார்டில் 700 பெண்களுக்கு நல உதவி மற்றும் 10 மகளிர் சுய உதவி குழுக்களுக்கு வேளாண் கூட்டுறவு வங்கி மூலம் கடன் தொகை வழங்கும் நிகழ்ச்சி நகரச் செயலாளர் என்.இ.கே.மூர்த்தி தலைமையில் நடைபெற்றது. இந் நிகழ்ச்சியில் மாவட்டக் கழகச் செயலாளர் ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ 700 பெண்களுக்கு பால் குக்கர் மற்றும் புடவை வழங்கி 75 லட்ச ரூபாய் மதிப்பில் கடன் தொகை ஆணையம் பயனாளிகளிடம் வழங்கினார் . உடன் கே.ஜெ.ரமேஷ், பிரபு கஜேந்திரன், ராங்கதுரை, நடராஜ், செல்லதுரை, ஜெ.சரவணன், பிரியகுமார், உமாபதி, பரிசமுத்து, குமார், பி.வி.கே.கண்ணன், கெஜ, பன்னீர்செல்வம், ஐடி.அரசன், அசைதம்பி, இளங்கோ, காந்தி, என்.ராஜி, சாந்திராஜா, பேபிஸ்ரீ, தங்கம் செல்வி, நரேஷ், நாராயணன், உள்பட பலர் உள்ளனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### திருச்சி மா. பாலகிருஷ்ணன்

### பிப்ரவரி 12 (2010)



பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர், பொதுச்செயலாளர் பேராசிரியர் ஆகியோரின் நன்மதிப்பை பெற்றவர்.

திருச்சி மாவட்டக் கழகப் பொருளாளராக மூன்று முறை தேர்ந்தெடுக்கப்பட்டு பணியாற்றியவர்.

புரவலர் அன்பிலாருடன் இணைந்து பணியாற்றி பல்வேறு அறப்போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.

திருச்சி நகர்மன்றத் தலைவராக திறம்பட பணியாற்றி, மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

தி.மு.க. சொத்து பாதுகாப்புக்குழு உறுப்பினராக வாழ்நாளின் இறுதிவரை இருந்தவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**



கோவையில் கழக இளைஞர் அணிச் செயலாளரும் அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கோவை மேற்கு மாவட்டக் கழகத்தின் முன்னாள் செயலாளர் மறைந்த பையா (எ) கிருஷ்ணன் இல்லத்துக்கு சென்று, அவரது திருவுருவப்படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார். உடன் அமைச்சர் கே.என். நேரு மற்றும் கழகத்தினர் உள்ளனர்.



சைதை மேற்கு பகுதி 139. அ வட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஜி.ரஞ்சித் ஆர்.கீதா திருமண வரவேற்பு நிகழ்ச்சி வட்டச் செயலாளர் சை.மு.சேகர் தலைமையில் நடைபெற்றது. இதில் மாவட்டச் செயலாளரும் அமைச்சருமான மா.சுப்பிரமணியன் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினார். மேலும் பகுதிச் செயலாளர்கள். எம்.கிருஷ்ணமூர்த்தி, இரா.துரைராஜ், மாவட்ட அவைத் தலைவர் சைதை எஸ்.குணசேகரன், வழக்கறிஞர் எம்.ஸ்ரீதரன் எம்.சி, களக்காடி எல்லப்பன், வி.பி.ஜானகிராமன், சைதை த.சம்பத், சைதை ஆர்.ரமேஷ், ப.சுப்பிரமணி எம்.சி, தா.மோகன்குமார் எம்.சி, எம்.நாகா, அட்கோ கமலநாதன், டி.என்.சிவமணி, வீ.மதிவாணன், எம்.எஸ்.ஹரிபாபு, சைதை சாதிக், ஆர்.கிருஷ்ணகுமார், வெ.புருசோத்தமன், என்.தீனதயாளன், மா.ஏழுமலை, சுமதி தீனதயாளன், நியுகாலனி சம்பத், ஜி.ஏழுமலை, கொடி.து.சுரேஷ்பாபு, என்.ராஜேஷ் இரா.சத்யா, ம.சுகுமார், க.தீபன், ஜிம்.க.பிரபு, கொடி.பாலா, துளசி சந்திரசேகர், ப.தினகரன், கே.விஜயகுமார், ன்.ரமேஷ்,வி.வாசுதேவன்,எஸ்.கண்ணன், ப.எழிலரசன், ஆர்.தாமோதரன், எஸ்.சையத்ஜலால் ம.திலீபன்,து.வடிவேலன், எஸ்.பி.தினேஷ்குமார், ஆயில்.எம்.சரவணன், து.மா.பொ.சி, ஆர்.கண்ணன், ப.மோகன், கே.கோபாலகிருஷ்ணன், உ.மகேஷ்,டி.பிரவீன்குமார், டி.எம்.லாசர், எஸ்.ராஜேஷ், ரியாஸ், எஸ்.மணி, ஹரி, விக்கி,டி.தினேஷ், எஸ் தீபக்,ஜி.வெற்றிவேல் மற்றும் பலர் பங்கேற்றனர்.

### இராஜீவ் காந்தி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில்

# ரூ.65 கோடியில் புதிய நரம்பியல் பிரிவு கட்டிடம் அடிக்கல் நாட்டு விழா!

## எழும்பூரில் செவிலியர் பயிற்சிப் பள்ளியைத் திறந்து வைத்து அமைச்சர் மா.சுப்பிரமணியன் சிறப்புரை!

சென்னை, பிப்.11

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் 10.02.2024 அன்று சென்னை இராஜீவ் காந்தி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில், ரூ.65 கோடி மதிப்பில் புதிய நரம்பியல் பிரிவு கட்டிடப் பணி அடிக்கல் நாட்டி தொடங்கி வைத்து, பின்னர் சென்னை, எழும்பூர், நல வாழ்வு மற்றும் குடும்ப நல பயிற்சி மையத்தில், ரூ. 12.65 கோடி செலவில் கட்டப்பட்ட பயிற்சி பள்ளி, மற்றும் விடுதி கட்டிடம், அதிநவீன ஒலி ஒளி சாதனங்களுடன் கூடிய கலந்தாய்வு கூடம் ஆகியவற்றை திறந்து வைத்து, மிக்ஜாம் புயல் மற்றும் தென் மாவட்டங்களில் கனமழை பொழிந்த போது சிறப்பாக களப்பணியாற்றிய 7000 மருத்துவ பணியாளர்களுக்கு பாராட்டு சான்றிதழ்கள் மற்றும் பதக்கங்கள் வழங்கினார்கள்.

பின்னர் செய்தியாளர்களிடம் அவர் தெரிவித்ததாவது;

**நரம்பியல் துறை கட்டிடம் அடிக்கல் நாட்டுதல்**

இராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனையில், கடந்தாண்டு சட்டப்பேரவைக் கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது, நரம்பியல் துறை கட்டிடத்தில் தீ விபத்து ஏற்பட்டு பலத்த சேதமடைந்தது, நூற்றாண்டை கடந்த அந்த கட்டிடம் பாதிப்படைந்தபோது, உடனடியாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டது. 1 லட்சம் சதுரடியில் நரம்பியல் துறைக்கு புதிய கட்டிடம் அமைக்க அறிவிப்பு கடந்த ஆண்டு சட்டப்பேரவைக் கூட்டத் தொடரின் போது அறிவிக்கப்பட்டது. அதன்படி ரூ.65 கோடி மதிப்பீட்டில், 1,12,247 சதுரடி பரப்பளவில், நரம்பியல் துறைக்கு 4 தளங்கள் கொண்ட கட்டிடம் கட்டும் பணி இன்று தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

**துணை செவிலியர் பயிற்சி பள்ளி கட்டிடம் திறந்து வைத்தல்**

மேலும் எழும்பூரில் உள்ள துணை செவிலியர் பயிற்சி பள்ளியில் ரூ.12.65 கோடி மதிப்பீட்டில் 5 தளங்கள் கொண்ட, 6 பயிற்சி ஆய்வகங்கள், 40 விடுதி அறைகள், கலந்தாய்வு கூடம் ஆகிய வசதிகளுடன் புதிய கட்டிடம் இன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது. இந்த கட்டிடத்துடன் தமிழ்நாட்டில் மொத்தம் 11 இடங்களில் அரசு துணை செவிலியர் பயிற்சி பள்ளிகள் இயங்கி வருகின்றது. இதன் மூலம் 660 துணை செவிலியர் பயிற்சி மாணவிகள் Auxiliary Nurse Midwifery (ANM) பயிற்சியினை பெறுகின்றனர்.

பயிற்சி காலத்தில் மாதம் ரூ.500 உதவித் தொகையாக வழங்கப்பட்டு வருகிறது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அரசு கல்லூரிகளில் பயிலும் மாணவிகளுக்கு புதுமை பெண் திட்டத்தின் கீழ் ரூ.1000 வழங்கப்படும் என்று அறிவித்து செயல்பாட்டிற்கு கொண்டு வந்துள்ளார்கள். இதன் மூலம் 2,50,000 மாணவிகள் பயன்பெற்று வருகின்றனர். இந்த திட்டத்தின் கீழ் ANM செவிலியர் பயிற்சி பெறும் மாணவிகளுக்கும் ரூ.1000 வழங்கப்பட்டு வருகிறது. ஆக மொத்தம் 2 ஆண்டு காலம் ANM பயிற்சி மாணவிகளுக்கு தலா ரூ.36,000 ஊக்கத்தொகையாக வழங்கப்பட்டு வருகிறது.

1021 மருத்துவர்களில் சிலர் கர்ப்பிணித் தாய்மார்களாகவும் பிரசவித்த தாய்மார்களாகவும் உள்ள நிலையில் அவர்கள் விடுப்பு வழங்குவது தொடர்பான கேள்விக்கு பதில்

1021 மருத்துவர் பணியிடங்கள் கலந்தாய்வு மூலம் நடத்தப்பட்டு 20 சுகாதார மாவட்டங்களுக்கு பணியில் அமர்த்தும் பணி நடத்தப்பட்டது. இதில் 30 மருத்துவர்கள் கர்ப்பிணி தாய்மார்களாகவும், பிரசவித்த தாய்மார்களாகவும் உள்ளனர். முதலமைச்சர் அவர்கள் தி.மு.க. தேர்தல் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளபடி 9 மாத காலமாக இருந்த பிரசவ விடுப்பினை 12 மாத காலமாக மாற்றியுள்ளார்கள். மேற்குறிப்பிட்ட 30 கர்ப்பிணி மருத்துவர்கள் முதலில் பணியில் சேர வேண்டும், இப்படி பணியில் சேருவதற்கு 15 நாட்கள் கால அவகாசம் தரப்பட்டுள்ளது. அதன் பின்னர் இவர்கள் தங்களுடைய விடுப்பின் விவரத்தை எழுத்துபூர்வமாக எழுதித் தரவேண்டும், பின்னர் அரசு விதிமுறைகளின்படி இந்த மருத்துவர்களுக்கு விடுமுறை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் எழும்பூர் சட்டமன்ற உறுப்பினர் இ.பரந்தாமன், பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத்துறை இயக்குநர் மரு.தி.சி.செல்வவிநாயகம், மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்குநர் மரு.சங்குமணி, சென்னை மருத்துவக் கல்லூரி முதல்வர் மரு.தேரணிராஜன், நரம்பியல் மருத்துவத் துறை இயக்குநர் மரு.பாலசுப்பிரமணியன், நரம்பியல் அறுவை சிகிச்சை துறை இயக்குநர் மரு.இராகவேந்திரன், பொதுப்பணித் துறை செயற்பொறியாளர் கார்த்திகேயன், கூடுதல் இயக்குநர்கள், இணை இயக்குநர்கள், துணை இயக்குநர்கள், மருத்துவ பேராசிரியர்கள் மற்றும் செவிலியர்கள் கலந்துகொண்டனர்.



சவுதி அரேபியா தம்மாம் கிழக்கு மண்டலம் – திமுக அயலக அணி மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் இந்திய நலச்சங்கமும் இணைந்து மயிலாடுதுறை வெங்கடேசன், திருச்சி ஆரிஃப் மக்பூல் ஆகியோர் தலைமையில் முகவை சீனி முஹம்மத் துறையூர் கமால் ஆகியோர் முன்னிலையில் தமிழர்கள் மற்றும் இந்தியாவிலுள்ள பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்த 26 பேர்களை தாயகம் திரும்ப அனைத்து உதவிகளும் செய்து அவர்களை இந்தியாவிற்கு அனுப்பி வைத்தனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**சி.தங்கமுத்து**

**பிப்ரவரி 12 (2016)**



கழகம் துவக்கிய காலத்திலேயே கழகக் கொள்கையில் ஈடுபாடு கொண்டு பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர், பொதுச்செயலாளர் பேராசிரியர் ஆகியோரின் நன்மதிப்பையும் பெற்றவர்.

குளித்தலை வட்டம், கள்ளப்பள்ளி கிளைச் செயலாளராகவும், மாவட்டப் பிரதிநிதியாகவும் கழகப் பணியாற்றியவர்.

கழகம் நடத்திய மாநாடுகளிலும், போராட்டங்களிலும் கலந்து கொண்டவர்.

கழகம் அறிவித்த சட்ட எரிப்பு போராட்டத்தில் பங்கேற்று மூன்று மாதம் கடுங்காவல் தண்டனை பெற்றவர். தன் இறுதிகாலம் வரை கழகத்திற்காக பாடுபட்டவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

### கிராமப்புறங்களில் விவசாயம் சார்ந்த

# தொழில்களை ஊக்குவிக்க ஒன்றிய அரசு எடுத்த நடவடிக்கைகள் என்ன?

## மாநிலங்களவையில் கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் கேள்வி

நாமக்கல், பிப். 12-

ஒன்றிய அரசு கிராமப்புறங்களில் விவசாயம் சார்ந்த தொழில்களை ஊக்குவிக்களெடுத்த நடவடிக்கைகள் என்ன? என மாநிலங்களவையில் நாமக்கல் மாவட்டக் கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான.கே.ஆர்.என். இராஜேஸ்குமார், கேள்வி எழுப்பியுள்ளார்.

நாடாளுமன்ற கூட்டத்தொடர் தற்போது நடைபெற்று வரும் நிலையில், நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும் மாநிலங்களவை உறுப்பினருமான . கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் ஒன்றிய அரசு கிராமப்புறங்களில் விவசாயம் சார்ந்த தொழில்களை ஊக்குவிக்க அரசு எடுத்த நடவடிக்கைகள் என்ன? என கேள்வி எழுப்பினார். அதில் நாட்டில் உள்ள கிராமப்புறங்களில் விவசாயம் சார்ந்த தொழில்களை ஊக்குவிக்க அரசு எடுத்த நடவடிக்கைகள் என்ன? கடந்த ஐந்தாண்டுகள் மற்றும் நடப்பு ஆண்டில், மாநிலம் மற்றும் யூனியன் பிரதேசங்களில் கிராமப்புறங்களில் விவசாயம் சார்ந்த தொழில்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதி எவ்வளவு? என கேள்வி எழுப்பினார்.

இதற்கு பதிலளித்து பேசிய குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கான ஒன்றிய அமைச்சர் ஸ்ரீ பானு பிரதாப் சிங் வர்மா, அவர்கள் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில்கள் அமைச்சகம், காதி மற்றும் கிராமத் தொழில்கள் ஆணையம் (கே.வி.ஐ.சி) மூலம், விவசாயம் உட்பட பண்ணை அல்லாத துறைகளில் புதிய அலகுகளை அமைப்பதில் தொழில் முனைவோருக்கு உதவுவதற்காக பிரதம மந்திரியின் வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டத்தின் கீழ் கிராமப்புற மற்றும் நகர்ப்புறங்களில் சார்ந்த தொழில்களுக்கு பொதுப் பிரிவு பயனாளிகள் கிராமப்புறங்களில் திட்ட மதிப்பில் 25% மானியமும், நகர்ப்புறங்களில் 15% மானியமும் வழங்கப்படுகிறது. இதில் பட்டியல் சமூகத்தினர், பழங்குடியினர், ஓபிசிகள், சிறுபான்மை யினர், பெண்கள், முன்னாள் ராணுவத்தினர், மாற்றுத் திறனாளிகள், திருநங்கைகள், வடகிழக்கு மண்டலம், மலை மற்றும் எல்லைப் பகுதிகளைச் சேர்ந்த பயனாளிகள் மற்றும் ஆர்வமுள்ள மாவட்டங்கள் போன்ற சிறப்புப் பிரிவைச் சேர்ந்த பயனாளிகளுக்கு, மார்ஜின் மணி மானியம் கிராமப்புறங்களில் 35% மற்றும் நகர்ப்புறங்களில் 25%. தவிர, பொதுப் பிரிவைச்



சேர்ந்த பயனாளிகள் திட்டச் செலவில் 10% பங்களிப்பையும், சிறப்புப் பிரிவைச் சேர்ந்த பயனாளிகள் திட்டச் செலவில் 5% பங்களிப்பையும் வழங்கப்பட்டு வருகிறது.

2018-19 முதல், 2 வது நிதி உதவி ரூ. 1 கோடி சிறப்பாக செயல்படும் தற்போதைய அலகுகளை மேம்படுத்துதல் மற்றும் விரிவாக்கம் செய்வதற்காக 15% மற்றும் மலைப்பகுதிகளுக்கு 20% மானியமும் அறிமுகப்படுத்தப் பட்டுள்ளது.

கிராமப்புறங்களில் விவசாயம் சார்ந்த தொழில்கள் உட்பட கிராமத் தொழில்களை ஊக்குவிக்கும் விதமாக இரண்டு நாள் இலவச ஆன்லைன் தொழில்முனைவோர் மேம்பாட்டுத் திட்டம், வருங்கால தொழில்முனைவோருக்காக காதி மற்றும் கிராமத் தொழில்கள் ஆணையமும் உள்ளது. அத்தோடு 1056 மாதிரி விரிவான திட்ட அறிக்கைகள் போர்ட்டலில் வழங்கப்பட்டுள்ளன. இளைஞர்கள் மற்றும் வருங்கால தொழில்முனைவோரின் விழிப்புணர்விற்காக ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் குறுந்தொழி ல்களை அமைப்பதற்கான பல்வேறு செயல்பாடுகள் குறித்து வகுப்புகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. இதனால் சந்தைப்படுத்தவும், தங்கள் தயாரிப்புகளை விற்பனை செய்ய கண்காட்சிகள் மற்றும் ஆன்லைன் மூலம் விற்பனை செய்யவும், வழிவகை செய்யப்பட்டுள்ளது. இத்திட்டங்கள் குறித்து குறும்படங்கள், விழிப்புணர்வு பட்டறைகள், முகாம்கள், பிராந்திய மொழிகளில் ரேடியோ லிங்குகள் ஆகியவை செய்யப்பட்டுள்ளன.

வருங்காலத்தில் தொழில்முனைவோர் மற்றும் பயனாளிகள் பயிற்சி முறையை தேர்வு செய்து, தங்களுக்கு விருப்பமான ஆஃப்லைன் பயன்முறையில் பயிற்சி மையத்தை தேர்வு செய்யலாம். இதற்காக போர்ட்டலில் உள்ள ஆறு பிராந்திய மொழிகளில் தகவல்கள் வழங்க ப்பட்டுள்ளன என்றார்.

### முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்த நாள் விழா!

# காஞ்சிபுரம் தெற்கு மாவட்டத்தில் தொடர் பொதுக் கூட்டங்கள்!



## மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. அறிவிப்பு!

கழகத் தலைவர் திராவிட மாடல் அரசின் நாயகர் முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்த நாள் விழாவை முன்னிட்டு மற்றும் கழக அரசின் சாதனை விளக்க தொடர் பொதுக்கூட்டங்கள் காஞ்சிபுரம் தெற்கு மாவட்டத்தில் மாநகரம், நகரம், ஒன்றியம், பகுதி, பேரூர் வாரியாக கீழ்க்கண்ட அட்டவணைப் படி நடைபெற உள்ளது.

| நாள் | தலைமை கழக பேச்சாளர்கள் | மாநகரம், நகரம், ஒன்றியம், பகுதி, பேரூர் |
|---|---|---|
| 16.02.2024 | கோவி.செழியன் | வாலாஜாபாத் (தெ) |
| 16.02.2024 | தஞ்சை கலைமணி பாரதி | காஞ்சிபுரம் மாநகரம் பகுதி (1) |
| 17.02.2024 | ஆரணி மாலா | காஞ்சிபுரம் (வ) |
| 17.02.2024 | சேலம் சுஜாதா, வண்ணைபுகாரி | வாலாஜாபாத் (வ) |
| 18.02.2024 | பொன்னேரி சிவா, நாத்திகம் நாகராஜன் | இடைகழி நாடு பேரூர் |
| 18.02.2024 | தக்கோலம் தேவபாலன் | திருக்கழுக்குன்றம் (தெ) |
| 19.02.2024 | நெல்லிக்குப்பம் புகழேந்தி, கலைச்செல்வி ஜெகநாதன் | லத்தூர் (வ) |
| 19.02.2024 | கவிஞர் நன்மாறன் | மதுராந்தகம் (தெ) |
| 20.02.2024 | கரூர் முரளி | சித்தாமூர் (மே) |
| 20.02.2024 | போடி. காமராஜ் | அச்சரப்பாக்கம் (தெ) |
| 21.02.2024 | பவானி கண்ணன் | மதுராந்தகம் (வ) |
| 21.02.2024 | எழும்பூர் கோபி, சைதை சாதிக் | லத்தூர் (தெ) |
| 22.02.2024 | சொற்கோ கருணாநிதி | காஞ்சிபுரம் மாநகரம் |
| 22.02.2024 | ஈரோடு இளைய கோபால் | காஞ்சிபுரம் (தெ) |
| 25.02.2024 | ஈரோடு இறைவன் | மதுராந்தகம் நகரம் |
| 25.02.2024 | பசும்பொன் ரவிச்சந்திரன் | அச்சரப்பாக்கம் (வ) |
| 26.02.2024 | முரசொலி மூர்த்தி, விஷார் தமிழரசன் | காஞ்சிபுரம் மாநரகம் பகுதி (2) |
| 26.02.2024 | ஆரூர் மணிவண்ணன் | காஞ்சிபுரம் பகுதி (3) |
| 27.02.2024 | திண்டுக்கல் ஐ.லியோனி | உத்திரமேரூர் ஒன்றியம் |
| 29.02.2024 | ஆர்.எஸ்.பாரதி | சாலவாக்கம் ஒன்றியம் |

எனவே, சம்பந்தப்பட்ட மாநகரம், நகரம், ஒன்றியம், பகுதி, பேரூர் செயலாளர்கள் இக்கூட்டத்திற்கான அழைப்பிதழை முறையாக அச்சிட்டு அந்தஅந்தப் பகுதிக்கு உட்பட்ட கழக நிர்வாகிகள் உள்ளாட்சி பிரதிநிதிகள் கழக அணிகளின் நிர்வாகிகள் மற்றும் இயக்கத் தோழர்கள் அனைவருக்கும் வழங்கி இக்கூட்டத்தில் பங்கேற்க செய்திடுமாறும் கூட்டமேடையிலேயே ஏழை எளிய மக்களுக்கு நலதிட்ட உதவிகளை வழங்கிடுமாறும் கூட்டத்தை சிறப்பான முறையில் எழுச்சியோடு ஏற்பாடு செய்திடுமாறு தங்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

**க.சுந்தர்**, Bsc., M.L.A.,
**செயலாளர் - காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட தி.மு.க.**



சேலம் மாவட்டத்தில் தி.மு.க. தேர்தல் அறிக்கை குழுத் தலைவர் –கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி., தலைமையில் நேற்று பொது மக்களிடம் கருத்து கேட்பு கூட்டம் நடைபெற்றது. இதில் தமிழ்நாடு அரசின் டெல்லி சிறப்புப் பிரதிநிதி ஏ.கே.எஸ். விஜயன், மாவட்டக் கழகச் செயலாளர் இரா.ராஜேந்திரன், கே.ஆர்.என். ராஜேஷ்குமார் எம்.பி., சி.வி.எம்.பி. எழிலரசன் எம்.எல்.ஏ. மற்றும் கழகத்தினர் பங்கேற்றனர்.



தி.மு.க. தலைமை நிலைய செயலாளரும், தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய தலைவருமான பூச்சி எஸ் முருகன் நேற்று (11.02.2024) காலடிப்பேட்டை தனலெட்சுமி பார்ட்டி ஹாலில் நடைபெற்ற கழக நிர்வாகி பி.எஸ். சைலஸ் – சுகந்தி தம்பதியின் மகள் பி.எஸ். பொய்யாமொழி – சி.எஸ்.ராஜ்குமார் திருமண உறுதியேற்பு நிகழ்ச்சியில் கலந்துகொண்டு மணமக்களை வாழ்த்தினார். சென்னை வடகிழக்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஆர்.டி. மதன்குமார் உள்ளிட்ட நிர்வாகிகள் உடன் இருந்தனர்.

### நே.சிற்றரசு தலைமை! நா.எழிலன் முன்னிலை! ஆயிரம்விளக்கு - 118 வது வட்ட அவைத் தலைவர்

# க.அன்பழகன் இல்லத் திருமண வரவேற்பு விழா: அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வாழ்த்துகிறார்!

### மு.க.தமிழரசு - தயாநிதி மாறன் - அன்பகம் கலை பங்கேற்பு! மா.பா.அன்புதுரை - கோ.யுவராஜ் வரவேற்பு!

சென்னை, பிப். 12-

சென்னை மேற்கு மாவட்டம், ஆயிரம் விளக்கு கிழக்கு பகுதி, 118 வது வட்டக் கழக அவைத் தலைவர் க.அன்பழகன் - ஜானகி அன்பழகன் ஆகியோரின் புதல்வர் அ. சுரேஷ்குமாருக்கும், இங்கிலாந்து, லண்டனைச் சேர்ந்த சிவராஜா - மகாலட்சுமி சிவராஜா ஆகியோரின் புதல்வி மருத்துவர் சி.சிந்துஜாவிற்கும் திருமண வரவேற்பு விழா இன்று (12.2.2024 - திங்கட்கிழமை) மாலை 6.30 மணியளவில், சென்னை, கோடம்பாக்கம் நெடுஞ்சாலை, நுங்கம்பாக்கத்தில் உள்ள ஹோட்டல் பாம்குரோவில் நடைபெறுகிறது.

மணவிழா வரவேற்பிற்கு சென்னை மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் நே.சிற்றரசு எம்.சி. தலைமை வகிக்கிறார்.

ஆயிரம்விளக்கு சட்டமன்ற உறுப்பினர் நா.எழிலன் முன்னிலை வகிக்கிறார்.

ஆயிரம் விளக்கு கிழக்கு பகுதிச் செயலாளர் மா.பா.அன்புதுரை, 118 வது வட்டக் கழகச் செயலாளர் கோ.யுவராஜ் ஆகியோர் வரவேற்புரை ஆற்றுகின்றனர்.

மணவிழா வரவேற்பில் கழக இளைஞர் அணிச் செயலாளர், அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்துகிறார்.

இவ்விழாவில் மு.க.தமிழரசு, தயாநிதி மாறன் எம்.பி, அன்பகம் கலை, எம்.கே.மோகன் எம்.எல்.ஏ, மருத்துவர் கலை கதிரவன், எஸ்.மோகன், ந.இராமலிங்கம், எஸ்.மதன்மோகன், நுங்கை வி.எஸ்.ராஜ், வினோத் வேலாயுதம், ஏ.ஆர்.பி.எம்.காமராஜ், ச.பரமசிவம், வி.என்.ராஜன், நந்தனம் மதி, எஸ்.முரளி,

து.விக்டர், அரிமா ஆர்.என்.துரை, வி.எஸ்.கலை, ஏ.சங்கீதா, ஜெ.எஸ்.அகஸ்டின்பாபு, எம்.டி.ஆர்.நாதன், ஜெ.நற்குணநாதன், டி.ஜோஸ் டானியல், பா.ராபர்ட், வெற்றிச்செல்வி, எம்.ஜம்புலிங்கம், ம.ஜெயக்குமார், மு.வெங்கடேசன், கோ.ரவி, வைலட் மேரி, எஸ்.என்.கே.ராமன், எப்.பீட்டர் ஜான், நுங்கை ப.மகேஷ், ஆர்.பாபு, எஸ்.சத்தியபெருமாள், எல்.தவமணி, த.தேவராஜ், எம்.என்.விஷ்ணு, மல்லிகா யுவராஜ் எம்.சி, திருமலை பொன்னுரங்கம் எம்.சி, எம்.ஏ.நந்தினி எம்.சி, பிரேமா சுரேஷ் எம்.சி, எலிசபத் அகஸ்டின்பாபு எம்.சி. மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்துகின்றனர்.

ஏ.வி.ராமநாதன், ப.வினோத்குமார், ம.வேலுமணி, பொ. திருத்தணி, எஸ்.சேகர், ஜா.கண்ணன், கு.தீபன்சக்கரவர்த்தி, வி.வி.மணி ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

### கடலூர் மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில்

# விருத்தாச்சலத்தில் பொதுக்கூட்டம்!

### ஆர்.எஸ்.பாரதி சிறப்புரை! அமைச்சர் சி.வெ.கணேசன் அறிக்கை!

விருத்தாச்சலம், பிப்.12-

கடலூர் மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில், 'உரிமைகளை மீட்க ஸ்டாலினின் குரல்' - பாசிசம் வீழட்டும்! இந்தியா வெல்லட்டும்' என்ற தலைப்பில் மாபெரும் பொதுக் கூட்டம் விருத்தாச்சலத்தில் வருகிற 17-ஆம் தேதி அன்று நடைபெறுகின்றது. இதில் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி சிறப்புரையாற்றுகிறார் என்று கடலூர் மேற்கு மாவட்டச் செயலாளர்-அமைச்சர் சி.வெ.கணேசன் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அமைச்சர் சி.வெ.கணேசன் அறிக்கை வருமாறு:-

கடலூர் மேற்கு மாவட்டக் கழகம் சார்பில் விருத்தாசலத்தில் "உரிமைகளை மீட்க ஸ்டாலினின் குரல்" - பாசிசம் வீழட்டும், இந்தியா வெல்லட்டும்" என்ற தலைப்பில் மாபெரும் பொதுக்கூட்டம் 17.2.2024-சனிக்கிழமை மாலை 6



மணிக்கு, வானொலித்திடல் விருத்தாச்சலத்தில் என் (அமைச்சர் சி.வெ.கணேசன்) தலைமையில் நடைபெறுகின்றது.

இம்மாபெரும் பொதுக் கூட்டத்தில் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி கலந்துகொண்டு சிறப்புரையாற்றுகிறார்.

எனவே பொதுக்கூட்டத்தில் மாவட்டக் கழக நிர்வாகிகள், பொதுக்குழு, செயற்குழு உறுப்பினர்கள், சட்டமன்ற, நாடாளுமன்ற முன்னாள், இந்நாள் உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர், பகுதிக்கழகச் செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், சார்பு அணியைச் சேர்ந்த நிர்வாகிகள், தொ.மு.ச. நிர்வாகிகள், உள்ளாட்சி மன்றத்தின் பிரதிநிதிகள், கழக மூத்த முன்னோடிகள் அனைவரும் தவறாமல் கலந்துகொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு மாவட்டச் செயலாளர் அமைச்சர் சி.வெ.கணேசன் அறிக்கையில் கேட்டுக்கொண்டுள்ளார்.

### குடும்ப அட்டைதாரர்கள்

# வசதிப்படி கைரேகை பதியலாம்!

**தமிழ்நாடு அரசு தகவல்!**

சென்னை,பிப்.12-

குடும்ப அட்டைதாரர்கள் தங்களது வசதியின்படி நியாய விலைக் கடைக்கு வந்து கைரேகை பதிவு செய்யலாம் என்று தமிழ்நாடு அரசு தெரிவித்துள்ளது.

கட்டாயப்படுத்தி நியாய விலைக் கடைக்கு வரவழைத்து சிரமங்களை ஏற்படுத்தக் கூடாது என்றும், குடும்ப அட்டைதாரர்கள் கைவிரல் ரேகை வைக்கும் போது ஆவணங்கள் எதுவும் கோரக் கூடாது என்றும் தமிழக அரசு தெரிவித்துள்ளது.

நியாயவிலைக் கடைகளில் கைரேகையைப் பதிவு செய்யாவிட்டாலும், குடும்ப அட்டையில் இருந்து பெயர் நீக்கப்படாது என்று முன்னதாக தமிழக அரசு விளக்கம் அளித்திருந்தது.

தேசிய உணவு பாதுகாப்புச் சட்டத்தின்படி, முன்னுரிமை மற்றும் அந்தியோதயா அன்னயோஜனா மின்னணு குடும்ப அட்டைகளில் இணைக்கப்பட்ட அனைத்துப் பயனாளிகளின் கைவிரல் ரோகையை சரிபார்க்க வேண்டுமென மத்திய அரசு சுற்றறிக்கை அனுப்பியது.

அதன்படி, குடும்ப உறுப்பினர்களுக்கு இடையூறு ஏதுமில்லாமல் இந்தப் பணியைச் செய்ய அறிவுறுத்தப்பட்டுள்ளது.




# திராவிட மாடல் அரசு 55

‘முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் நான்’ என்று உறுதிமொழி எடுத்துக்கொண்ட நாளில் இருந்து, தமிழ்நாட்டின் வளர்ச்சியை முன்னோக்கிக் கொண்டு செல்லும் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறார், நமது முதலமைச்சர். உள்ளடக்கிய வளர்ச்சியைக் கொண்ட அந்தத் திட்டங்களைத் தரவுகளோடு உலகுக்குப் பறைசாற்றுகிறது இந்தப் பகுதி.







## ‘இது நம்ம காலம்... நம்ம ஆட்டம்...!’

தமிழ்நாட்டில், கோலாகலமாக நடந்து முடிந்திருக்கிறது 6-வது ’கேலோ இந்தியா இளையோர் விளையாட்டுப் போட்டிகள்’. பல புதிய சாதனைகள், இந்த முறை நடைபெற்ற போட்டியில் படைக்கப்பட்டுள்ளன. அதில் ஒன்று, தமிழ்நாடு இதற்கு முன்பு தேசிய அளவிலான விளையாட்டுப் போட்டிகளை நடத்தியிருந்தாலும், பதக்கப் பட்டியலில் முதல் மூன்று இடங்களுக்குள் இடம் பிடித்திருப்பது, நமது மாநிலத்தின் விளையாட்டுப் போட்டி வரலாற்றில் இதுதான் முதல்முறை..!

இன்று இந்தியாவின் பல மாநிலங்களும் பொருளாதார வளர்ச்சியை மட்டுமே குறிக்கோளாகக் கொண்டு செயல்பட்டு வரும் வேளையில், பொருளாதார வளர்ச்சி, சமூக வளர்ச்சி ஆகிய வற்றோடு விளையாட்டு வளர்ச்சியையும் இலக்காகக் கருதி நம் கழக அரசு செயல்பட்டு வருகிறது.

அன்புப் பாலமாகவும், சமூக நல்லிணக்கத்துக்கான ஆற்றலாகவும் விளையாட்டுப் போட்டிகள் பார்க்கப்பட்டு வரும் நிலையில், அவற்றைச் ‘சுயமரியாதை மற்றும் தன்னம்பிக்கையை மேம்படுத்தும்’ ஒன்றாக மாற்றி வருகிறது, நம் கழகத் தலைவர் முதலமைச்சர் தலைமையிலான ‘திராவிட மாடல் அரசு’. அதன் ஒரு பகுதியாகத்தான் ‘கேலோ இந்தியா இளையோர் போட்டிகள்-2023’ பிரமாண்டமாகவும் வெற்றிகரமாகவும் நடந்து முடிந்திருக்கின்றன.

### நான்கு நகரங்களில் போட்டிகள்

நாட்டில் விளையாட்டுத் துறையை ஊக்குவிக்கும் பொருட்டு, ஒன்றிய அரசு ‘கேலோ இந்தியா’ எனும் திட்டத்தை 2018-ஆம் ஆண்டு அறிமுகப் படுத்தியது. இந்தத் திட்டத்தின் கீழ் ‘கேலோ இந்தியா இளையோர் விளையாட்டுப் போட்டிகள்’ (2018-ஆம் ஆண்டு முதல்), ‘கேலோ இந்தியா பல்கலைக்கழகப் போட்டிகள்’ (2020-ஆம் ஆண்டு முதல்), ‘கேலோ இந்தியா குளிர்கால விளையாட்டுப் போட்டிகள்’ (2020-ஆம் ஆண்டு முதல்) மற்றும், ‘கேலோ இந்தியா பாரா விளையாட்டுப் போட்டிகள்’ (2023-ஆம் ஆண்டு முதல்) என நான்கு விதமான போட்டிகள் நடத்தப்படுகின்றன.

17 வயதுக்கு உட்பட்ட பள்ளி மாணவர்கள் மற்றும் 21 வயதுக்கு உட்பட்ட கல்லூரி மாணவர்கள் என இரண்டு பிரிவுகளாகப் போட்டிகள் நடத்தப்படுகின்றன. முதன்முதலில் இந்தப் போட்டிகள் டெல்லியில் நடைபெற்றன. பிறகு, மகாராஷ்டிரா (2019), அசாம் (2020), ஹரியானா (2021), மத்திய பிரதேசம் (2022) ஆகிய மாநிலங்களில் நடத்தப்பட்டன.




இந்நிலையில், நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சீரிய நோக்கில், மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் 2023-ஆம் ஆண்டுக்கான ‘கேலோ இந்தியா இளையோர் விளையாட்டுப் போட்டிகளை’ 2024-ஆம் ஆண்டு ஜனவரி 19 முதல் ஜனவரி 31 வரை சென்னை, மதுரை, திருச்சி, கோயம்புத்தூர் ஆகிய நகரங்களில் நடத்தப்படும் என அறிவித்தார். அதன்படி, இந்தப் போட்டிகள் இனிதே நடத்தப்பட்டுள்ளன.

இதில் என்ன சிறப்பு என்றால், கடந்த 5 முறை நடத்தப்பட்ட போட்டிகள் எல்லாம், அவற்றை நடத்தும் மாநிலத்தின் ஏதேனும் ஒரே ஒரு நகரத்தில் மட்டும்தான் நடத்தப்பட்டுள்ளன. ஆனால், தமிழ்நாட்டில், தலைநகரம் சென்னையில் மட்டுமல்லாது, ‘டயர் 2 சிட்டீஸ்’ எனப்படும் இரண்டாவது மிகப் பெரிய, வளர்ந்து வரும் நகரங்கள் என்று சொல்லப்படும் மதுரை, திருச்சி, கோவை ஆகியவற்றிலும் இந்தப் போட்டிகள் நடைபெற்றுள்ளன. இதன் நோக்கம், விளையாட்டுத் துறையைச் சென்னை போன்ற பெருநகரங்களில் மட்டும் வளர்க்காமல், கிராமப்புறங்களிலும் வளர்க்கவேண்டும் என்பதுதான்.

### நிறைய வீரர்கள்... நிறைய போட்டிகள்...

இந்தப் போட்டிகளில், யூனியன் பிரதேசங்கள் உட்பட 31 மாநிலங்களிலிருந்து 5 ஆயிரத்து 630 விளையாட்டு வீரர்கள் கலந்துகொண்டனர். அவர்களில், ஆண்கள் 2 ஆயிரத்து 875 பேரும், பெண்களில் 2 ஆயிரத்து 755 பேரும் கலந்துகொண்டனர். தமிழ்நாட்டிலிருந்து, 570 விளையாட்டு வீரர், வீராங்கனைகள் கலந்து கொண்டனர். இதில் சிறப்பு என்னவென்றால், இந்தியாவில் நடத்தப்படும் தேசிய அளவிலான விளையாட்டுப் போட்டி ஒன்றில், இவ்வளவு எண்ணிக்கையிலான வீரர்கள் தமிழ்நாட்டில் இருந்து கலந்துகொண்டிருப்பது நமது மாநில விளையாட்டு வரலாற்றில் இதுவே முதல்முறை.

மேலும், இந்த முறை 26 வகையான விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றுள்ளன. இது கடந்த 5 முறை நடைபெற்ற போட்டிகளைக் காட்டிலும் அதிகம். இந்த 26 வகையான போட்டிகளிலும் நம் தமிழ்நாட்டு வீரர்கள் கலந்துகொண்டு பதக்கம் பெற்றுள்ளார்கள் என்பது போற்றத்தக்க சாதனை.

38 தங்கப் பதக்கம், 21 வெள்ளிப் பதக்கம், 39 வெண்கலப் பதக்கம் என 98 பதக்கங்களைப் பெற்று, தேசிய அளவில் இரண்டாம் இடத்தை, தமிழ்நாடு அணி பெற்றுள்ளது.

### மணிப்பூரை சாதிக்க வைத்தோம்!

தமிழ்நாட்டு மக்கள் மட்டுமல்லாது, மணிப்பூர் மக்களும் இனி வரும் காலங்கள் எல்லாம் பேசும் ஒரு வரலாற்றுச் சாதனையும் இந்த முறை நடைபெற்ற ‘கேலோ இந்தியா’ போட்டிகளில் நிகழ்ந்துள்ளது. கடந்த ஆண்டு மணிப்பூர் மிக மோசமான இன, மதக் கலவரங்களை சந்தித்தது. அதன் மிச்சம், இன்றும் அந்த மாநிலத்தில் புகைந்துகொண்டிருக்கிறது.

அப்படி ஓர் இக்கட்டான சூழ்நிலையில், சாமானியர்களைப் போலவே அந்த மாநிலத்தின் விளையாட்டு வீரர்களும் பாதிக்கப்பட்டனர். உயிரைக் கையில் பிடித்துக் கொண்டிருக்கும் வேளையில், விளையாட்டுப் பயிற்சி எல்லாம், அங்கே நினைத்துக்கூடப் பார்க்க முடியாது. முறையான பயிற்சி இல்லை என்றால், அந்த வீரர்களால் அடுத்தடுத்து வரும் போட்டிகளில் பங்கேற்று ஜொலிக்க முடியாது.

இந்தப் பின்னணியில், அங்குள்ள வீரர்களின் நிலையைப் புரிந்துகொண்ட ‘திராவிட மாடல் அரசு’, அங்குள்ள வீரர்களைத் தமிழ்நாட்டுக்கு வந்து பயிற்சி மேற்கொள்ள அன்பழைப்பு விடுத்தது. அதை ஏற்றுக்கொண்ட 15 வாள் வீச்சு விளையாட்டு வீரர்கள் சென்னையில் ஒரு மாதம் தங்கி பயிற்சி மேற்கொண்டனர். அவர்களுக்கான விமானப் பயணச் செலவு, தங்குமிடம், உணவு என எல்லா செலவுகளையும் நம் கழக அரசே ஏற்றுக்கொண்டது. அதன் விளைவாக, இங்கு வந்து பயிற்சி பெற்ற இரண்டு வீரர்கள், ‘கேலோ இந்தியா-2023’ போட்டியில் பதக்கம் வென்றுள்ளார்கள்.

தான் மட்டும் சாதித்தால் போதும் என்று நினைக்காமல், அல்லல்படும் மக்களை அரவணைத்து அவர்களையும் வெற்றி பெறச் செய்வதுதானே ‘திராவிட மாடல்..!’. அந்த ‘மாடல்’, வெற்றுக் கூச்சல் அல்ல, உயிர்ப்புள்ள தத்துவம் என்பதை உணர வைத்துள்ளது இந்தச் சாதனை.

### வீரர்கள் மெச்சிய உபசரிப்பு!

1,020 விளையாட்டுத் தொழில்நுட்ப வல்லுநர்கள், 1,331 அணி மேலாளர்கள், 480 விளையாட்டுத் தன்னார்வலர்கள் மற்றும் 1,450 தன்னார்வலர்கள் ஆகியோர் ‘கேலோ இந்தியா இளையோர் விளையாட்டுப் போட்டிகள்’ சிறப்பாக நடைபெறுவதற்கு உறுதுணையாக இருந்தனர். இந்த போட்டியில் அனைவருக்கும் நட்சத்திர விடுதிகளில் தரமான உபசரிப்பு வழங்கப்பட்டது.

‘ஒரு டிரில்லியன் டாலர் பொருளாதாரம்’ என்பது எப்படி நம் இலக்கோ, அதேபோல ‘இந்தியாவின் விளையாட்டுத் தலைநகரம் தமிழ்நாடு’ என்பதும் நம் குறிக்கோள். அந்தப் பயணத்தில், ‘கேலோ இந்தியா-2023 போட்டிகள்’ இன்னொரு மைல்கல்..!

...சாதனை தொடரும்

> ‘கேலோ இந்தியா-2023’ இலச்சினையில் (லோகோ) வான்புகழ் கொண்ட வள்ளுவர் இடம் பெற்றிருந்தார். முத்தமிழறிஞர் கலைஞரின் நூற்றாண்டு கொண்டாடப்படும் இந்தத் தருணத்தில், அவரால் குமரியில் எழுப்பப்பட்ட அந்தச் சிலை, தமிழ்நாட்டின் பெருமையையும், கலைஞரின் சாதனையையும் ஒருசேர எடுத்துக்காட்டுவதாக அமைந்திருந்தது. மேலும், இந்தப் போட்டியின் அடையாள உருவமாக (மஸ்கோத்), ஆங்கிலேய ஆதிக்கத்தை எதிர்த்துப் போரிட்ட வீர மங்கை வேலுநாச்சியார் இருந்தார். கூடுதலாக, தமிழ்நாட்டின் பாரம்பரிய விளையாட்டான சிலம்பம், இந்த முறை ‘டெமோ’ (செயல் விளக்கம்) போட்டியாக இடம்பெற்றிருந்தது.

## சொன்னது ஒன்று; நடந்தது வேறு!

முந்தைய ஐக்கிய முற்போக்குக் கூட்டணி ஆட்சியில் சராசரியாக 0.61% ஆக இருந்த கல்விக்கான நிதி ஒதுக்கீடு, பா.ஜ.க. ஆட்சியில் 0.44 விழுக்காடாக குறைந்திருக்கிறது. நிதியைக் குறைத்ததோடு மட்டும் அவர்கள் நிற்கவில்லை.

இந்தி, சமஸ்கிருதம், குலக்கல்வியைத் திணிக்கும் புதிய கல்விக் கொள்கை, கிராமப்புற, ஏழை - எளிய மாணவர்களின் மருத்துவக் கனவைச் சிதைக்கும் நீட், முற்படுத்தப்பட்ட ஏழைகளுக்கு 10 விழுக்காடு இடஒதுக்கீடு என கல்வித்துறை யைச் சிதைக்கும் முயற்சிகள் எண்ணற்றவைக் கடந்த 10 ஆண்டுகளில் நடந்திருக்கின்றன.

முகலாயர் ஆட்சி கால வரலாறுகளை நீக்கியது, சாதி அமைப்பு முறைகளைத் திணித்தது, சமூக இயக்கங்கள் மற்றும் அதன் தலைவர்கள் குறித்தான பாடப் பிரிவுகள் நீக்கம், சார்லஸ் டார்வினுடைய கோட்பாடுகள் நீக்கம் எனப் பாடப்புத்த கங்களில் பா.ஜ.க.வின் இந்துத்துவக் கொள்கைகளைத் திணிக்கிற முயற்சிகள் கடந்த ஐந்தாறு ஆண்டுகளாக மிக வேகமாக நடந்து கொண்டிருக்கின்றன.

கடந்த 5 ஆண்டுகளில் மத்தியப் பல்கலைக்கழகங்களில் ஓ.பி.சி. மாணவர்கள் 4 ஆயிரத்து 956 பேரும், எஸ்.சி. மாண வர்கள் 2 ஆயிரத்து 622 பேரும், எஸ்.டி. மாணவர்கள் 2 ஆயிரத்து 424 பேரும் இடைநின்றுள்ளனர். பா.ஜ.க மற்றும் அதனைச் சார்ந்த அமைப்புகள் விதைக்கும் இந்துத்துவா சிந்தனைகளால், கல்வி வளாகங்களில் அதிகரிக்கும் பாகுபாடே, இதற்கு முக்கிய காரணமாகக் கூறப்படுகிறது.

## :ப்ளாஷ்பேக்



### அருகில் அழைத்தார்!

1960-ஆம் ஆண்டு முதல் கழகத்தில் உறுப்பினராக உள்ளேன். கரூர் ஒன்றியத்தில் பொருளாளராக இரண்டு முறை பணியாற்றும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அந்த சமயத்தில் சென்னையில் அண்ணா அறிவாலயம் கட்டுவதற்கு தமிழ்நாடு முழுவதும் இருந்து கழக உடன்பிறப்புகள் நிதி அளிக்கத் தொடங்கினர். அப்படி நிதி வழங்கியவர்களை அங்கீகரிக்கும் வகையில், தலைவர் கலைஞர் அவர்கள் மோதிரம் அணிவித்து வாழ்த்தினார். கரூரில் நடைபெற்ற நிகழ்வில் தயங்கி நின்ற என்னையும் மேடைக்கு அழைத்து, “அட வாய்யா பக்கத்தில்” என்று அழைத்து மோதிரம் அணிவித்தார். இந்த நிகழ்ச்சி என் வாழ்க்கையில் மறக்க முடியாத ஒன்றாகும். கூட்ட மேடையில் அன்பிலார் அவர்களும் இருந்தார்.



சாரதி கே.சுப்ரமணியம்

-சாரதி கே.சுப்ரமணியம், கரூர்.


இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி : அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600018. வாட்ஸ்அப் எண் : 90033 -24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

## கருவூலம்

### கலைஞரின் கறுப்புக் கண்ணாடி!

**1954-இல் பரமக்குடியில் கூட்டத்தை முடித்துவிட்டு, காரில் திருச்சி புறப்பட்டார் கலைஞர். ஓட்டுநர், சாலையின் வளைவை கவனிக்காமல் மைல்கல் மீது மோதிவிட்டார். அந்த விபத்தில், கலைஞரின் வலதுகண் பாதிக்கப்பட்டது. பல மாதங்கள் வலியால் துடித்தார் கலைஞர். பல அறுவை சிகிச்சைகள் செய்ய நேர்ந்தது. அதற்குப் பிறகுதான் கறுப்பு கண்ணாடி அணிய ஆரம்பித்தார்.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 386




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131